Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2034 சித்திரை 29 திங்கட்கிழமை (12-05-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:167

# அமரர் குமாரின் குடும்பத்தினரை தலைவர் பிரபாகரன் சந்தித்தார்

## 'மாமனிதர்' விருதை வழங்கி கௌரவிப்பு

கிளிநொச்சி,மே12

கொழும்பில் படுகொலை செய்யப்பட்ட அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸின் முன்னாள் தலைவர் அமரர் குமார் பொன்னம்பலம் அவர்களுக்குரிய மாமனிதர் விருதினையும் அதற்கான ஆவணத்தையும் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் நேற்று அவரது குடும்பத்தினிடம் வழங்கிக் கௌரவித்தார்.

நேற்று வன்னியில் அமரர் குமார் பொன்னம்பலத்தின் குடும்பத்தினரை தலைவர் பிரபாகரன் சந்தித்தார்.

அச்சமயம் மாமனிதர் விருதையும், ஆவணத்தையும் குமார் பொன்னம்பலத்தின் துணைவியாரிடம் பிரபாகரன் வழங்கினார்.

இது தொடர்பாக விடுதலைப் புலிகளின் அரசியல்துறை நேற்று விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

தமிழ் மக்களுக்கு வழங்கிய அயராத சேவையினைப் பாராட்டி தமிழீழத் தேசியத் தலைவர் உயர் தியாகம் செய்த அமரர் குமார் பொன்னபலத்துக்கு ஏற்கனவே மாமனிதர் பட்டம் வழங்கிக் கௌரவித்தார். நேற்று ஞாயிற்றுக்கிழமை, தமிழீழ தேசியத் தலைவர் அன்னாரது குடும்பத்தினரைச் சந்தித்து, மாமனிதர் என்ற கௌரவம் வழங்கிய ஆவணத்தையும் மாமனிதர் விருதையும் அவரது குடும்பத்துக்கு வழங்கிச் கௌரவித்தார்.

குமார் பொன்னம்பலம், பயங்கரவாத தடைச்சட்டமும் அவசரகால சட்டமும் தமிழ் மக்களுக்கு எதிராக ஸ்ரீலங்கா அரசினால் மிகக்கொடூரமான முறையில் பிரயோகிக்கப்பட்ட வேளையில், அதனை எதிர்த்து தமிழ் மக்களின் உரிமைக்காக ஸ்ரீலங்கத் தலைநகர் கொழும்பிலும், சர்வதேச மன்றங்களிலும் குரல் கொடுத்து அதன் விளைவாக பகைமை தேடி சதிகாரர்களால் கொல்லப்பட்டார். அமரர் குமார் பொன்னம்பலம், தமி

(16ஆம் பக்கம் பார்க்க)



மாமனிதர் விருதினையும் அதற்கான ஆவணத்தையும் தலைவர் பிரபாகரன், குமார் பொன்னம்பலத்தின் துணைவியாரிடம் வழங்கியபோது எடுக்கப்பட்ட படம்.

குமார் பொன்னம்பலத்தின் மகள் நிருணாளினி, மகன் கஜேந்திரகுமார் ஆகியோரும் படத்தில் உள்ளனர்.

# அரசியல் ரீதியாக ஜனாதிபதியை எதிர்த்துப் போராட அரசு தீர்மானம்

## சர்வாதிகாரத்துக்கு இடமளியோம்; அமைச்சர்கள் பலரும் சூளுரை

கொழும்பு,மே 12

**பிரதமர் ரணிலின் அரசில் அங்கம் வகிக்கும் அமைச்சர்களிடமிருந்து - பிரதமரின் ஆலோசனையோ, இணக்கமோ பெற்றுக்கொள்ளாமல் - பொறுப்புக்களை தன்னிச்சையாகப் பறிக்கும் ஜனாதிபதியின் செயலுக்கு எதிராக மக்களைத் திரட்டி போராட அரசு தீர்மானித்திருக்கிறது. ஜனாதிபதி சந்திரிகா குமரதுங்க சர்வாதிகாரமாக நடப்பதற்கு ஒரு போதும் இடமளிக்க மாட்டோம் என்று அமைச்சர்கள் பலர் நேற்று கொழும்பில் ஒன்றாக நடத்திய செய்தியாளர் மாநாட்டில் அறிவித்தனர்.**

அரசியல் ரீதியில் ஜனாதிபதியை எதிர்த்துப் போராடுவது என்று பிரதமர் தலைமையில் நேற்றுமுன்தினம் கூடி ஆராய்ந்த அமைச்சர்கள் முடிவெடுத்துள்ளனர். ஜனாதிபதிக்கு எதிரான இந்தப் போராட்டத்திற்கு மக்களைத் திரட்டும் நடவடிக்கையை உடனடியாக ஆரம்பிப்பது என்றும் அவர்கள் தீர்மானித்திருக்கின்றனர்.

தகவல் திணைக்களத்தில் நேற்று மாலை நடந்த செய்தியாளர் மாநாட்டில் அமைச்சர்கள் லொக்கு பண்டார, கலாநிதி கருணாசேன கொடித்துவக்கு, எஸ்.பி திஸாநாயக்கா, பந்துல குணசேகர ஆகியோர் கலந்துகொண்டனர்.

அமைச்சர் மிலிந்த மொறகொடவின் பொறுப்பில் இருந்து தேசிய லொத்தர் சபையை ஜனாதிபதி பொறுப்பேற்றுள்ளதால் ஏற்பட்டுள்ள பிரச்சினை குறித்து அவர்கள் விளக்கம் அளித்தனர்.

அரசமைப்புச் சட்டப்படி பிரதமருடன் கலந்தாலோசித்தே இப்படியான நடவடிக்கையை ஜனாதிபதி மேற்கொண்டிருக்கவேண்டும் ஆனால், ஜனாதிபதி அப்படிச் செய்ய வில்லை. பிரதமருடன் கலந்தாலோசனை நடத்தாமல் தன்னிச்சையாக பொறுப்பை ஏற்றுக்கொண்டார். இது சர்வாதிகாரம்.

நாட்டின் சீரழிந்து போன பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்பும் முயற்சியில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஈடுபட்டுள்ளார்.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை சமாதான நடவடிக்கையில் தொடர்ந்து ஈடுபடுவதா, இல்லையா?

### குற்றச்சாட்டுக்களை அடுத்து நம்பியார் ஆலோசனை

கொழும்பு,மே12

இலங்கை அரசியல் கட்சிகளினால் தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் காரணமாக சமாதான நடவடிக்கையில் தொடர்ந்து ஈடுபட்டிருப்பதா, இல்லையா? என்பது குறித்து ஆலோசிக்க வேண்டியிருக்கிறது என்று இந்திய இராணுவ முன்னாள் உயர் அதிகாரியான சதீஷ் நம்பியார் கூறுகிறார்.

வடக்கிலுள்ள உயர் பாதுகாப்பு வலயங்களை அகற்றுவது குறித்து சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் அறிக்கை குறித்து அரசியல் கட்சிகள் தெரிவிக்கும் குற்றச்சாட்டுக்கள் குறித்து 'இந்து' பத்திரிகை எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறியிருக்கிறார்.

இந்த அறிக்கையைத் தயாரிப்பதில் தான் நிர்ப்பந்தங்களுக்கு உள்ளாகியிருப்பதாகத் தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுக்களை நிராகரித்திருக்கும் அவர், அக்குற்றச்சாட்டுக்கள் பதிலளிப்பதற்கும் தகுதியற்றவை எனவும் கூறியிருக்கிறார்.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## அன்ரன் பாலசிங்கம் தம்பதியர் அவசரமாக லண்டன் பயணம்

வன்னிக்கு வந்திருந்த மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் அவசரமாக லண்டன் சென்றார்.

நேற்று பிற்பகல் அவர் ஹெலி மூலம் தமது பாரியார் அடேல் சகிதம் கிளிநொச்சியிலிருந்து கட்டுநாயக்காவுக்கு புறப்பட்டார்.

காலநிலை சரியில்லாததால் அந்த ஹெலி அநுராதபுரத்தில் தரையிறக்கப்பட்டது. உடனே கொழும்பில் இருந்து பிக்ஸ்ட்விங் ஹெலி ஒன்று அநுராதபுரம் சென்று பாலசிங்கம் தம்பதியினரை கட்டுநாயக்காவுக்கு கொண்டுவந்தது. கட்டுநாயக்காவில் இருந்து நேற்று இரவே பாலசிங்கம் தம்பதியினர் லண்டனுக்கு விமானமேறினர்.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதியின் செயலைக் கண்டித்து நாளை ஐ.தே.மு. ஆர்ப்பாட்டங்கள்

ஜனாதிபதியின் செயலைக் கண்டித்து ஐக்கிய தேசிய முன்னணி நாளை நாடு முழுவதிலும் ஆர்ப்பாட்டங்களை நடத்தவுள்ளது.

ஆர்ப்பாட்டங்கள் தேர்தல் தொகுதி தோறும் நடைபெறவுள்ளதாக ஐக்கிய தேசிய முன்னணி வட்டாரங்கள் தெரிவித்தன.

அபிவிருத்தி லொத்தர் சபையை பிரதமருடன் ஆலோசனை நடத்தாமல் எதேச்சாதிகாரமான முறையில் பொறுப்பேற்றதை ஆட்சேபித்தே இந்த ஆர்ப்பாட்டங்கள் நடைபெறவுள்ளன.

கொழும்பிலும் மாபெரும் ஆர்ப்பாட்டமொன்றை நடத்தவும் ஐக்கிய தேசிய முன்னணி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் ஐ.தே.முன்னணி வட்டாரங்கள் தெரிவித்தன.

## வர்த்தமானி அறிவித்தல் வெளியாகாமல் ஜனாதிபதியின் கட்டளை செயற்படுமா?

### அரசியல் சட்ட மோதல் ஏற்பட்டால் அரசு தேர்தலை எதிர்நோக்கும்

கொழும்பு,மே12

அபிவிருத்தி லொத்தர் சபையை பொறுப்பேற்கும் ஜனாதிபதியின் கட்டளை அரச வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்படாததால் அது செயற்படாது என்று அரசாங்கம் கருதுகிறது.

நேற்று முன்தினம் காலை அவசரமாகக் கூடிய அமைச்சர்கள் இவ்விடயம் குறித்து ஆராய்ந்தனர். பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அமைச்சர்களின கூட்டத்துக்கு தலைமை தாங்கினார். கூட்டம் அலரிமாளிகையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் இவ்விடயம் ஆராயப்பட்டதையடுத்து ஜனாதிபதியின் கட்டளை வர்த்தமானி அறிவித்தலில வெளியாகாததால் அது செயற்படாது என்ற முடிவுக்கு அமைச்சர்கள் வந்தனர் என்று அதிகாரபூர்வ அரசாங்க

(16 ஆம் பக்கம் பார்க்க)



இப்பொழுது தேசிய சேமிப்பு வங்கி 60 வயதுக்கு மேற்பட்ட மூத்த பிரஜைகளுக்கு...

நிலையான வைப்புகளுக்கு 1.5% மேலதிக மாதாந்த வட்டியை வருடாந்தம் வழங்குகின்றது.

இன்றே அருகிலுள்ள தேசிய சேமிப்பு வங்கிக் கிளையுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

தற்போது நடைமுறையிலுள்ள வட்டி வீதம் 9.7% வருடாந்த விளைவு வட்டி 10.1%

கௌரவ

மூத்த பிரஜைகளை கௌரவிக்கும் திட்டம்

NSB

# இலங்கையில் இதுவரை 'சார்ஸ்' அபாயம் இல்லை!

## எனினும் மக்கள் விழிப்புடன் இருக்கவேண்டும்!!

யாழ்ப்பாணம்,மே12

இலங்கையில் சார்ஸ் நோயின் அபாயம் இதுவரையும் ஏற்பட்டுவிடவில்லை. எனினும், மக்கள் இந்தநோய் தொடா பாக மிகுந்த விழிப்புடனேயே இருக்க



வேண்டும்.

- இவ்வாறு பொதுமக்களுக்கு ஆலோசனை வழங்கியிருக்கிறார் கொழும்பு சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பகுதியைச்சேர்ந்த வைத்திய நிபுணர் நிகால் அபயசிங்க. சார்ஸ் நோய் தொடர்பாக குடாநாட்டிலுள்ள வைத்தியர்கள், தாதியர்களுக்கு விளக்கமளிப்பதுடன், அந்த நோய் தொடர்பான விழிப்புணர்வினை மக்கள் மத்தியில் ஏற்படுத்துவதற்காக இங்கு வருகைதந்துள்ள வைத்திய நிபுணர்கள் குழுவின் தலைவரான டாக்டர் அபயசிங்கவிடம் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்தவருடம் பெப்ரவரி மாதம் வியட்நாம் நாட்டில் முதன்முதலாகக் கண்டறியப்பட்ட இந்த நோயானது சீனாவிலுள்ள குவான் டொங் என்ற இடத்தில்தான் முதன்முதலாக ஆரம பித்தது என்று உலக சுகாதார நிறுவன ஆய்வின்மூலம் கண்டறிந்துள்ளது.

'கொரணா வைரஸ்' என்ற கிருமியினாலேயே இந்த நோய் பரவுகின்றது. காய்ச்சல், தடிமன் என்பவற்றுடன ஆரம்பமாகும் இந் நோயானது நாட் செல்லச்செல்ல தலையிடி, சோர்வு போன்ற பல நோய்களுக்கு இட்டுச் செல்லும். சளி, இருமல் போன்ற வற்றுடன் சுவாசிப்பது மிகவும் கடினமானதாகவும் இருக்கும். இது ஒரு சுவாசத் தொற்றுநோயாகும்.

இதுவரை உலகில் 6 ஆயிரத்து 903 பேர் இந் நோயினால் பீடிக்கப்பட்டுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இவர்களில் ஐந்நூறு பேர் இறந்து விட்டார்கள். சாதாரணமாக சகல வயதினருக்கும் இந்நோய் ஏற்பட்டாலும் வயது முதிந்தவர்களுக்கே அதிக பாதிப்பை ஏற்படுத்தும்.

திடீரென அசாதாரணமாக நிமோனியாக் காய்ச்சல் ஏற்பட்டால் உடனடியாக வைத்தியரை நாட வேண்டும். இந்தநோய் உலகளாவிய ரீதியில் மிகவும் வேகமாகப் பரவிவருகின்றது. ஆனால், இலங்கையில் இதுவரை எவருக்கும் சார்ஸ்நோய் ஏற்பட்டிருப்பது கண்டறியப்படவில்லை.

இந்த நோயினை இனங்கண்டு உறுதிப்படுத்துவதற்கான மருத்துவ ஆய்வு வசதிகள் இங்கு இல்லை. தாய்லாந்து, இந்தியா போன்ற நாடுகளில் உள்ள உலக சுகாதார நிறுவனத்தின் ஆய்வுகூடங்களில்தான் இந்த நோயால் பீடிக்கப்பட்டவரை உறுதி செய்யமுடியும்.


இலங்கையைப் பொறுத்த வரையில் சார்ஸ் நோய்க்கான பொதுவான வெளி அறிகுறிகளை வைத்து அவா சார்ஸ் நோயாளியாக இருக்கலாம் என்று கருதப்படுபவரின் இரத்தமாதிரிகள் இந்தியா போன்ற நாடுகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டு பரிசோதிக்கப்படுகின்றது. அவ்வாறு இங்கு இனங்காணப்பட்டு பரிசோதனைக்காக அனுப்பப்பட்ட மாதிரிகளில் இருந்து இலங்கையில் எவரும் சார்ஸ் நோயினால் பீடிக்கப்படவில்லை என்று தெரியவந்துள்ளது.

இந்த நோயினால் பீடிக்கப்பட்டவர்கள் என இனங்காணப்பட்டவர்களுடன நெருக்கமாக உறவாடும் அவரது குடும்ப உறவினர்கள் மற்றும் அவருக்கு சிகிச்சையளிக்கும் மருத்துவர்கள் ஆகியோருக்கும் இந் நோய் பரவும் சந்தர்ப்பங்கள் அதிகம் உண்டு.

இந்த நோய் தொடர்பான விளக்கங்கள், பயிற்சிகள் என்பவற்றை மருத்துவர்களுக்கு வழங்குவதற்கென அங்கொடையில் பயிற்சி நிலையம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. கொழும்பில் ஆய்வு நிலையம் ஒன்றும் இதற்கென நிறுவப்பட்டுள்ளது.

விமான நிலையங்கள், துறைமுகங்கள் யாவிலும் இந்த நோயாளிகளை ஓரளவுக்கு கண்டறியக்கூடிய வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இலங்கையில் இந்த நோயைப் பரவ விடாமல் தடுப்பதற்குரிய பல வழிவகைகளை சுகாதார அமைச்சு செய்திருக்கின்றது.

இருந்தாலும் சார்ஸ்நோய் பரவிவருகின்ற நாடுகளில் இருந்து இங்கு வருபவர்களிடம் மிகவும் அவதானத்துடன் இருக்கவேண்டும். அவர்களுக்கு தடிமன், நிமோனியாக் காய்ச்சல் என பன ஏற்பட்டால் உடனடியாக வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லவேண்டியது அவசியமானதாகும். அத்துடன், நோய பரவியுள்ள நாடுகளுக்கு செல்வதை மக்கள் இயன்றவரையில் தவிர்த்துக்கொள்ளவேண்டும். (ம-4)



யாழ்.குடாநாட்டில் சமாதானப் பேரணி நடத்துவது தொடர்பாக நடைபெற்ற கலந்துரையாடலின்போது எடுக்கப்பட்ட படங்கள்.

மனிதநேய அமைப்புகளின் ஒன்றியத் தலைவர் சு.பரமநாதன் உரையாற்றுவதையும், அருகில் நீதிக்கும் சமாதானத்திற்குமான நடுநிலைய இயக்குநர் (கியூடெக்) வண. ஜெயக்குமார் அடிகளார், நீதிக்கும் சமாதானத்திற்குமான உலக ஒத்துழைப்பு மன்றத்தின் இலங்கைக் குழுத் தலைவர் வண. யோகன் தேவானந்தா ஆகியோர் அமர்ந்திருப்பதனையும் - கலந்துரையாடலில் கலந்துகொண்டோரையும் படங்களில் காணலாம்.

# சமாதான முயற்சிகளை வலியுறுத்தி குடாநாட்டில் பேரணிக்கு ஏற்பாடு

யாழ்ப்பாணம்,மே12

தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும சமாதான முயற்சிகளை வலியுறுத்தியும் - அதனைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லவும் - வேண்டி யாழ் குடாநாட்டில் சமாதானப் பேரணி நடைபெறவுள்ளது.

'நீதிக்கும் சமாதானத்துக்குமான உலக ஒத்துழைப்பு மன்றத்தின் இலங்கைக்குழு' இந்தப் பேரணிக்கான ஏற்பாடுகளைச் செய்துவருகின்றது.

இது தொடர்பான கலந்துரையாடல் நேற்றுப் பிற்பகல் யாழ்.சென்.ஜோன்ஸ் கல்லூரியில் நடைபெற்றது.

நீதிக்கும் சமாதானத்துக்குமான உலக ஒத்துழைப்பு மன்றத்தின் இலங்கைக்குழுவின் தலைவர் வண.பிதா யோகன் தேவானந்தா அடிகளார் தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் மனிதநேய அமைப்புக்களின ஒன்றியத் தலைவர் சு.பரமநாதன், இலங்கை யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ்பிராந்தியத தலைவர் ஒலே ப்ரெண்டம், கியுடெக் நிறுவன இயக்குநர் வணபிதா ஜெயகுமார் அடிகளார், அங்கிலிக்கன் திருச்சபையைச் சேர்ந்த வண.லலித் அடிகளார் மற்றும் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் உட்பட பல பொது அமைப்புகளின் பிரதிநிதிகளும் இதில் கலந்துகொண்டனர்.

வடக்கிலும் தெற்கிலும் சமாதானம் பற்றி ஒரே குரலில் மக்களை எழுச்சி பெறச் செய்தல், அதற்காக வீதிகளிலும் வீடுகளுக்கும் பேரணியாகச் சென்று மக்களுக்கு சமாதானத்தின் தேவை பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்தல்.

வடக்கிலுள்ள மக்கள் சமாதானத்தின் மீது கொண்டுள்ள பற்றுறுதியை தென்பகுதி சிங்கள மக்களுக்கும் சிங்கள மக்கள் கொண்டுள்ள பற்றுறுதியை வடபகுதி தமிழ் மக்களுக்கும் எடுத்து விளக்குவதே இந்தச் சமாதானப் பேரணியின் முக்கிய நோக்கங்கள் என இந்தக் கலந்துரையாடலில் தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையில் -

மேற்படி பேரணி தொடர்பான திகதி நிர்ணயம் மற்றும் ஏற்பாடுகள் குறித்து எதிர்வரும் 14ஆம், 15ஆம், 16ஆம் திகதிகளில் யாழ். குடாநாட்டிலுள்ள சகல பொது அமைப்புகளுடனும் கலந்துரையாடல்களை நடத்துவது என்றும் - இதில் தீர்மானிக்கப்பட்டது. (எ-5)

### பரீட்சைப் பெறுபேறு வீழ்ச்சிக்கு

# அதிபர், ஆசிரியர் கவலையீனம் காரணமாகிவிடக் கூடாது

## வேலணை கோட்டக்கல்வி அலுவலர் கூறுகிறார்

பரீட்சைப் பெறுபேறுகளில் ஏற்படும் தொய்வுநிலை - வீழ்ச்சிக்கு அதிபர், ஆசிரியர்களின் கவலையீனம் காரணமாகிவிடக்கூடாது.

- இவ்வாறு தெரிவித்தார் வேலணை கோட்டக்கல்வி அலுவலர் சோ.தில்லைநாதன்.

வேலணை கல்விக் கோட்டத்துக்கு உட்பட்ட பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் அண்மையில் கோட்டக்கல்விப் பணிமனையில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் உரை நிகழ்த்தியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததா வது:-

தீவகப்பகுதியில் கடமையாற்றும் ஒவ்வொரு அதிபர், ஆசிரியர்களும் அண்மையில் வெளியான ஜி.சீ.ஈ.சாதாரணதரப் பரீட்சைப் பெறுபேறு குறித்து கூடிய அவதானம் செலுத்தவேண்டும். மேற்படி பெறுபேறுகளில் ஏற்பட்ட தொயவுக்கு - வீழ்ச்சிக்கு - எமது கவலையீனமும் காரணமாக இருக்கக்கூடாது.

எனவே, மாணவர்களின் கல்வி மேம்பாடு தொடர்பாக மேலதிக கவனம் செலுத்தப்படவேண்டும்.

எமது கோட்டப் பாடசாலைகளில் தரம் 6ஆம், 7ஆம், 8ஆம், வகுப்புகளில் கல்விகற்கும் மாணவர்கள் பலா எழுத வாசிக்கத் தெரியாதவர்களாகவுள்ளனர். இந்த மாணவர்கள் அனைவரும் இடம்பெயர்ந்த மாணவர்கள் அல்லர். இவர்களில் அநேகர் நீண்டகாலமாகவே இங்குள்ள பாடசாலைகளில் கல்வி கற்று வந்தவர்கள்.

எங்களுடைய கைகளுக்கூடாக வளர்ந்துவரும் இவர்கள் எமது பாடசாலைகளில்தான் இருக்கிறார்கள். இவர்களது பின்னடைவுகளுக்கு நாங்கள் வேறு யாரையும் பொறுப்பாகக் கூறமுடியாது.

எனவே, மாணவர்கள்மீது கூடுதலான கவனம் செலுத்தவேண்டிய நிலை தற்போது ஏற்பட்டுள்ளது. இது எமது கடமை மட்டுமல்ல கடப்பாடும் கூட.

இதற்கிடையில்; தீவுப்பகுதி பாடசாலைகளில் மாணவர் வரவு மிகவும் குறைவாகவுள்ளது. குறிப்பாக, பாடசாலை தவணை ஆரம்ப நாள்களில் மாணவர் வரவு மூன்றில் ஒரு பகுதிகூட இருப்பதில்லை என்று அவதானிக்கப்பட்டுள்ளது.

மாணவர்களின் வரவு, நடத்தைகளில் பெற்றோரின் கவனமும் மிகவும் அவசியமானதாகும் - என்றார்.

## முல்லைத்தீவுக்குக் கிழக்கே கடலில் சூறாவளி!

கொழும்பு,மே12

முல்லைத்தீவு கரையிலிருந்து கிழக்கே சுமார் 650 மைல் தொலைவில் வங்காளவிரிகுடாவில் தாழமுக்கம் ஒன்று உருவாகியிருக்கிறது. அது நேற்று பிற்பகல் சூறாவளியாக மாறியிருக்கிறது என்று வானிலை அவதான நிலையம் தெரிவிக்கின்றது.

அது மேற்கு நோக்கி நகருவதாகவும் நாட்டில் பெய்துவரும் கடும் மழை இதனால் தொடரலாம் எனவும் அவதான நிலையம் கூறுகின்றது.

மேற்கு, சப்ரகமுவ, மத்திய, தென் மாகாணங்களில் இடைக்கிடையே கடும் மழை பெய்யலாம் எனவும் நேற்றுக் காலைவரை கொழும்பில் 36.6 மில்லி மீற்றர் மழை பெய்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

# சதீஷ் நம்பியாரின் அறிக்கை மீள்பரிசீலனை செய்யப்படவேண்டும்

## மாவை எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு,மே12

உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பான சதீஸ் நம்பியாரின் அறிக்கை மீளபரிசீலனை செய்யப்படவேண்டியது.

- இவ்வாறு தெரிவித்தார் தமிழ்க் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா.

பி.பி.ஸியின் தமிழோசைக்கு அளித்த செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஓய்வு பெற்ற இந்திய இராணுவத தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சதீஷ் நம்பியாரின் உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பான அறிக்கையில் சில நல்ல விடயங்களும் உள்ளன. சில பாதகமான விடயங்களும் உள்ளன. இந்த விடயங்கள் தொடர்பாக மேலும் ஆராயப்படவேண்டும்.

இந்த அறிக்கை தொடர்பாக பத்திரிகைகளில் பார்க்கமுடிந்தது. இந்த அறிக்கையைப்பற்றி பிரதமர் நாடாளுமன்றில் குறிப்பிடும் பொழுது இந்த அறிக்கையைத் தான் நாடாளுமன்றில் சமர்ப்பிக்க முடியாது எனத தெரிவித்திருந்தார்.

உயர் பாதுகாப்பு வலயங்கள், அகதிகள் மீள்குடியமர்வு சம்பந்தமாக ஆராயும் பொழுது இராணுவத்தின் நலனை மையமாகக் கொண்டுதான அவர் இந்த அறிக்கையைச் சமர்ப்பித்துள்ளார்.

அடுத்த சுற்றில் யாழ்ப்பாணம் மற்றும் தமிழர் பிரதேசங்களுக்கான சுற்றுப் பயணத்தினை மேற்கொண்டு அவரால் பார்வையிடப்பட்ட விடயங்கள் பற்றிப் பேசப்பட்டுள்ளது.

குறிப்பாகப் பொதுமக்கள் பிரச்சினைகள் பற்றி இந்த முறை அவரது அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. எனவே, இது குறித்து அரசு மற்றும் புலிகளுடன் மேலும் பேசிய பின்னரே அவர் முடிவெடுக்க வேண்டியுள்ளது - என்று அவர் தெரிவித்தார்.

### டாக்டர் சின்னப்பா காலமானார்

யாழ்.போதனா வைத்தியசாலையில் நீண்டகாலம் கடமையாற்றிவந்த டாக்டர் செல்வி பரமேஸ்வரி சின்னப்பா நேற்றுமுன்தினம் இரவு காலமானார். அவருக்கு வயது 62.

திருநெல்வேலி வடக்கைச் சேர்ந்த இவர் யாழ். போதனா ஆஸ்பத்திரி ஆய்வுகூடத்தில் நோயியல் பொறுப்பதிகாரியாக பணியாற்றிவந்தார்.

சுமார் 20 ஆண்டுகால மருத்துவ சேவைக்குப் பின்னர் ஓய்வுபெற்ற இவர், மீண்டும் ஒப்பந்த அடிப்படையில் ஆஸ்பத்திரியில் பணிபுரிந்தார். இவரது உடல் இன்று பி.ப. 3 மணியளவில் யாழ் மருத்துவ பீடத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு அதன்பின் தகனஞ் செய்யப்படும்.

# தென்பிலிப்பைன்ஸ் சந்தையில் குண்டு வெடிப்பு; 15பேர் பலி!

மணிலா,மே12

தென்பிலிப்பைன்ஸில் உள்ள சன நெருக்கடிமிக்க சந்தை ஒன்றில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் குறைந்தது. 12 பேர் கொல்லப்பட்டனர். 20இறகும் மேற்பட்டவர்கள் காயமடைந்தனர்.

உலக அரங்கில்

இந்தக் குண்டுத் தாக்குதலை நடத்தியவர் எனச் சந்தேகிக்கப்படும் நபரும் சம்பவத்தில் கொல்லப்பட்டுள்ளதாகப் பொலீஸார் கூறுகின்றனர்.

மின்டோனா தீவில் உள்ள கொரோனடல் நகரத்தில் இந்தக் குண்டு வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றது.

81மி.மீற்றர் மோட்டார் குண்டுடன் இணைக்கப்பட்ட நேரக்கணிப்பு வெடிகருவியே சந்தையின் வாயிலில் வைத்து வெடிக்க வைக்கப்பட்டதாகப் பொலீஸார் கூறினர். சம்பவம் இடம்பெற்றபோது சந்தையில் சனக்கூட்டம் அதிகம் இருந்தது. உயிரிழந்தவர்களின் சடலங்களின் பாகங்கள் ஆங்காங்கே சிதறிக்கிடந்தன.

மோறோ இஸ்லாமியத் தீவிரவாதிகளே இந்தத் குண்டுத் தாக்குதலை நடத்தியதாக இராணுவ அதிகாரி கேணல் ஒஸ்ரின் டைமா-அலா தெரிவித்தார். ஆனால், இந்தக் குற்றச்சாட்டை அந்த அமைப்பின் பேச்சாளர் மறுத்தார்.

இந்தப் பகுதியில் மோறோ தீவிரவாதிகள் அடிக்கடி தாக்குதல்களை நடத்தி வருவதை அடுத்து அவர்களுடன் பேச்சு நடத்துவது என்று பிலிப்பைன்ஸ் அரசு கடந்த செவ்வாயன்று தீர்மானித்திருந்தது. ஆனால், அதற்காக நியமிக்கப்பட்ட சமாதானக் குழுவின் தலைவர் தனது பதவியை இராஜினாமாச் செய்துவிட்டார். இந்த சமாதான முயற்சிகளுக்கு இன்னும் அதிக காலம் வேண்டும் என்று அவர் தெரிவித்தார். (ம)

# ஈரானியத் தீவிரவாதக் குழு தம் ஆயுதங்களை ஒப்படைக்கும்

## பக்தாத்தில் அமெ. அதிகாரிகளுடன் இணக்கம்

பக்தாத்,மே12

ஈராக்கைத் தளமாகக் கொண்டு இயங்கிவரும் ஈரானிய எதிர்ப்பு ஆயுதக் குழுவான ஈரானிய மக்கள் முஜாஹுதீன் குழு தனது ஆயுதங்களைக் களைவதற்கான ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட இணங்கி இருப்பதாக பக்தாத்தில் உள்ள அமெரிக்



கப் படைகளின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

வடகிழக்கு ஈராக்கில் உள்ள பல்கலைக்கழகத்தைத் தளமாகக் கொண்டு இயங்கிவரும் ஈரானிய மக்கள் முஜாஹுதீன் குழு, முன்னாள் அதிபர் சதாமின் ஆதரவுடன் ஈரானுக்கு எதிரான தீவிரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தது. அமெரிக்காவால் பயங்கரவாதிகள் என்று அறிவிக்கப்பட்ட ஆயுதக் குழுக்களில் இதுவும் அடக்கம்.

பக்தாத் வீழ்ச்சி அடைந்த பின்னர், முஜாஹுதீன்கள் தங்கியிருக்கும் பல்கலைக் கழக வளாகம் அமெரிக்கப் படைகளின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளது. அவர்களுடன் பேச்சு நடத்திய அமெரிக்க இராணுவ அதிகாரிகள் அவர்களை ஆயுதங்களைக் கைவிடும் ஒரு ஒப்பந்தத்துக்கு இணங்க வைத்துள்ளனர். இரு நாள் பேச்சுக்களுக்குப் பின்னர் அமெரிக்கப் படைகளின் தளபதி ஜெனரல் ரே ஒடிர்னோவுக்கும் முஜாஹுதீன் அமைப்பின் தலைவர் தலைவருக்கும் இடையில் இந்த ஒப்பந்தம் எட்டப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஒப்பந்தத்தின் கீழ் முஜாஹுதீன்கள் சரணடையமாட்டார்கள். ஆனால், தமது ஆயுதங்களை ஒப்படைப்பார்கள். (ம)

# விமானத்தின் கதவு திறந்ததால் நடுவானில் 160 பேர் உயிரிழப்பு!

## கொங்கோவில் சம்பவம்

கின்ஸாசா,மே12

"விமானத்தில் பொருத்தப்பட்டிருந்த சங்கிலிகளை கெட்டியாகப் பிடித்துக் கொண்டதனால் நான் உயிர் தப்பினேன். அவ்வாறு இரும்புக் கம்பிகளில் சிக்கிக் கொண்ட சிலரே உயிர் தப்பினர்."

- இவ்வாறு தெரிவித்தர் கொங்கோ விமான விபத்தில் இருந்த தப்பிய பொலீஸார் ஒருவர்.

கொங்கோ ஜனநாயகக் குடியரசில் போதிய போக்குவரத்து வசதிகள் இல்லாமையால், இராணுவ போக்குவரத்து விமானங்கள் மக்கள் போக்குவரத்துக்குப் பயன்படுத்தப்படுவது வழமை. அண்மையில் இப்படி சுமார் 200பேரை ஏற்றிச் சென்ற விமானம் ஒன்று நடுவானில் விபத்துக்குள்ளானது. அதில் 160க்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்தனர்.

அந்த சரக்கு விமானம் 30 ஆயிரம் அடி உயரத்தில் பறந்து கொண்டிருந்த போது அதன் பின்புறக் கதவு திடீரெனத் திறந்து கொண்டது. இதனால், விமானத்தினுள் சூறாவளி போன்று காற்று நுழைந்தது. அந்த வேகத்தில் விமானத்தினுள் இருந்தவர்களை இழுத்து வெளியே எறிந்தது. காற்றின் வேகம் தாங்க முடியாமல் பலர் மூச்சுத் திணறிப் பலியாகினர்.

விமானத்தில் பொருத்தப்பட்டிருந்த கம்பிகளையும் அதற்குள் இருந்த சரக்குப் பெட்டிகளையும் இறுக்கமாகப் பற்றிப் பிடித்துக்கொண்டிருந்த சுமார் 20 பேர் வரையானோரே உயிர் பிழைத்தனர். கடும் போராட்டத்தின் பின் விமானி விமானத்தை கின்ஸாசா விமான நிலையத்தில் தரையிறக்கிய பின்னர் இவர்கள் உட

(14ஆம் பக்கம் பார்க்க)

# மத்திய கிழக்கு பிணக்கைத் தீர்க்க அமெரிக்கா புதிய சமாதான முயற்சி

## கொலின் பவல் இரு நாட்டுத் தலைவர்களுடனும் சந்திப்பு

ஜெருசலேம்,மே12

மத்திய கிழக்கில் நீண்டகாலமாகத் தொடர்ந்து வரும் இஸ்ரேல் - பலஸ்தீன பிணக்குக்கு தீர்வு காண்பதற்கு அமெரிக்கா புதிய முயற்சிகளை ஆரம்பித்துள்ளது. அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் கொலின் பவல் இரு நாட்டுத் தலைவர்களையும் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

அமெரிக்காவின் பின்புலத்துடன் தயாரிக்கப்பட்டுள்ள சமாதானத் திட்டத்தை முன்னகர்த்துவது தொடர்பாக அவர் இஸ்ரேல் - பலஸ்தீன தலைவர்களிடம் வலியுறுத்தியுள்ளார்.

போரில் ஈடுபட்டுள்ள இரு தரப்பினரும் பகிரங்கமாக வெளிப்படுத்தி



வரும் கசப்புணர்வை நீக்கி சமாதான முயற்சிகளை முன்னெடுக்க முயலும் அதேநேரம், இம்முறை மேற்கொள்ளப்படும் சமாதான முயற்சிகளில் தடங்கல்கள் ஏற்பட்டு விடக்கூடாது என்பதிலும் அமெரிக்கா கவனமாக இருக்கின்றது.

(14ஆம் பக்கம் பார்க்க)

# இந்திய சமாதான முயற்சிக்கு அமெரிக்க அதிபர் பாராட்டு

வாஷிங்ரன்,மே12

பாகிஸ்தானுடனான உறவுகளில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு இந்தியா எடுத்துவரும் முயற்சிகளை அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் வில்லியம் புஷ் பாராட்டியுள்ளார். இந்தியாவுக்கு வருவதற்கும் அவர் விருப்பம் தெரிவித்துள்ளார்.

இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் பிர்தேஷ் மிஷ்ரா தலைமையிலான இந்திய உயர்மட்டக் குழு ஒன்று அண்மையில் அமெரிக்காவுக்கு சென்றுள்ளது. இக்குழுவினர் அங்கு அமெரிக்கத் தலைவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர். அதிபர் புஷ்ஷை அவரது அலுவலகத்தில் பாதுகாப்பு ஆலோசகர் மிஷ்ரா சந்தித்து உரையாடினார். அப்போதே பாகிஸ்தானுடன் சமாதானத்தை ஏற்படுத்த வாஜ்பாய் எடுத்துவரும் முயற்சிகளுக்கு புஷ் பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

இந்தியா அமெரிக்கா இடையிலான உறவு மேலும் வலுவடையவும் புஷ் விருப்பம் தெரிவித்தார். இது தொடர்பாக விரிவான பேச்சுக்கள் நடத்தப்படவேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம)


2000 ஆம் ஆண்டு
மேடையேறிய நாடகம்,
மீண்டும் யாழ்.பல்கலைக்கழகத்தில்.....

காணாமற் போனோர்
பற்றிய ஓர் ஆற்றுகை

பல்கலைக்கழக மாணவர்கள் ஆற்றுகை செய்யும்

அக்கினிப் பெருமூச்சு
நாடகம்

அப்பாவிக் கிராமம
பனியும் ஊதலாய்
படுத்திருந்த போது
சிதைக்கப்பட்ட ஊர்
அந்தக் கிராமத்தின்
குழந்தைகளை
பேய்கள் சப்பியதாக
நட்சத்திரங்கள்
சொல்லி, சொல்லி
வீழ்ந்தன.
நிலவந்தக் கிராமத்தில்
இருந்து உயிர்தப்பி
வானத்தில் நின்றது.



எங்கள்
அடிவயிற்றின்
நெருப்பாக
கனக்கின்ற
உணர்வு
இந்
நாடகம்

நெறியாள்கை:
தே.தேவானந்த்

14-05-2003

யாழ்.பல்கலைக்கழக
கைலாசபதி கலையரங்கில் மேடையேறுகிறது....

பிரவேசம்: 50/-, 30/-

செயல்திறன் அரங்க இயக்கம்
ACTIVE THEATRE MOVEMENT

ஊடக அனுசரணை: உதயன்

# இந்திய மக்களைப் போன்று பெயர் விலாசம் பொறித்து பெருமைப்பட விரும்பாத ஈழமக்கள்

## தமிழக முனைவர் செல்வி அ. மலர்

சரியான முறையில் இளைய தலைமுறையினருக்கு சைவசமய விழுமியங்களைக் காட்டாமையே நாட்டில் ஏற்படும் குழப்பங்களுக்கும் மன மாற்றங்களுக்கும் காரணமாகும். சைவசமய விழுமியங்களை எமது இளம் தலைமுறையினருக்கு முறையாக நாம் எடுத்துச்சொல்லவேண்டும்.

இந்தியாவில் இருந்து வருகை தந்துள்ள விழுப்புரம் அறிஞர் அண்ணா அரச கலைக் கல்லூரி தமிழ் விரிவுரையாளர் முனைவர் செல்வி அ.மலர் இவ்வாறு தெரிவித்தார்.

தமது வருகை பற்றியும் இங்குள்ள மக்களின் போரட்டங்கள் உணர்வுகள், சமய வாழ்வு பற்றி அவர் தெரிவித்த கருத்துக்களின் தொகுப்பினை இங்கே தருகிறோம்.

எமது சமய விழுமியங்களை நாம் சரியாகத் தெரிந்துகொள்ளாதிருப்பது தவறு. ஓர் இஸ்லாமியர் என்று சொன்னால் அவருடைய சமய நெறி அவருக்கு நன்றாகத் தெரிந்திருக்கும். ஒரு கிறிஸ்தவர் என்று சொன்னால் அவருடைய குருத்துவ நெறி அவருக்கு நன்றாகத் தெரிந் திருக்கும்.ஆனால், எமது சைவ மகன் ஒருவருக்கு தமது வழிபாட்டு நூல எது என்றே தெரியாத நிலை காணப்படுகிறது. இதுதான் இன்றைய நிலை. சைவசித்தாந்த விழுமியங்களை நாம் சரியாக சொல்லித்தராமையால் தான் இப்படிப்பட்ட குழப்பங்கள், மனமாற்றங்கள் நிகழ்ந்து மதமாற்றத்தடைச் சட்டங்களைக் கொண்டு வந்து மதத்தை மனதில் நின்று மாறாமல் செய்யவேண்டிய ஒரு கட்டாயம் எமக்கு ஏற்பட்டது.

எமது சமயத்தின் அதன் எண்ணக் கருக்கள், பண்பாடுகள் பற்றி இளம் தலைமுறையினருக்கு கருத்தரங்குகள், மாநாடுகள், பிரசங்கங்கள் மூலம் தெரியப்படுத்துவது அவசியம். அந்த வகையில் அவற்றையெல்லாம் மையப்பொருளாகக் கொண்டு ஏற்பாடு செய்யப்பட்ட இந்த இரண்டாவது உலக இநத மாநாடு அவசியமான ஒன்றுதான்.

அறிவின் போக்கில் சென்றுகொண்டிருக்கும் எமது மொழியையும் சமயத்தையும் காப்பாற்ற இதுபோன்ற செயற்பாடுகள் அவசியமாகின்றன.

போராட்டம் நடத்தி நாளைய விடியலுக்காக ஏங்கி நிற்கும் எமது மக்களுக்கு இதன்மூலம் அமைதி கிடைக்க வேண்டும், சாந்தி கிடைக்க வேண்டும். அவர்களின் எதிர்பார்ப்புகள் நிறைவேறவேண்டும்.

'போராட்டங்கள் யாவும் அமைதிக்காகவே' வியப்பான முரண்பாடுதான் ஆனாலும் யுத்தபூமியில் நின்று கொண்டிருக்கும் உங்களுக்கு இவை நன்றாகவே புரிந்திருக்கும். ஆயுதவழி தேவையானபோது நாம் அன்பை போதித்துக் கொண்டிருக்கமுடியாது. ஆனாலும் சமாதான வழியில் எமது பிரச்சினையைத் தீர்த்துக் கொள்வதே விவேகமானது.

**நீங்கள் இழந்தவற்றை, அழிக்கப்பட்டவற்றை மீண்டும் பெறவும், தன்மானத்துடன் தலைநிமிர்ந்து வாழவும் உண்மையான சமய வாழ்வு உங்களுக்கு கைகொடுக்கும்.**

சமயச் சடங்குகளை மட்டும் நாம் செய்து கொண்டிராமல் நலிந்து போன மககளுக்கு கஷ்டப்படும் மக்களுக்கு தேவையான உதவிகளை நாம் வழங்கத் தவறக்கூடாது. கோயில்கள், அறநெறி நிலையங்கள், சமயம்சார் நிறுவனங்கள் மூலம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகள் செய்யப்படவேண்டும். இதன் மூலம் மக்கள் சமயம் மாறிச்செல்வதைத் தடுக்கமுடியும். மக்களின துன்பங்களைப்போக்கி நன்றாக வாழவைப்பவையே உண்மையான சமயங்கள்.

செவ்வி : வி.பி.சர்மா
உதயன் செய்தியாளர்,
வலிகாமம் தெற்கு.

நாம் இங்கு வரும் போது இங்குள்ள மக்களின் அன்பான உபசரிப்பு, விருந்தோம்பல், பண்பு அவர்களின் உணர்வுகள், வரவேற்பு என்பன என்பன எமக்கு மகிழ்ச்சியையும் நெகிழ்ச்சியையும் தந்துள்ளது.

சிவஸ்தலங்களை வழிபட என எல்லோரும் இந்தியாவுக்கு வருகின்றனர். ஆனால், யாழ்ப்பாணம் ஒரு சிவ பூமி. அங்கிருந்து வந்த நாம் சைவ சமயத்தின் சிறப்புக்களை எல்லாம் இங்கு அனுபவ ரீதியாகக் கண்டோம்.

யுத்தம் நடைபெற்றமையால் ஏராளமான ஆலயங்கள் அழிவுற்றன. ஆனால், குறுகிய கால இடைவெளியில அவையாவும் புனரமைப்புச் செய்யப்பட்டு வளர்ச்சி கண்டுள்ளன. இவற்றின் புனரமைப்புக்கு புலம்பெயர்ந்த மக்களின் உதவிகள் பெரிதும் கிடைத்துள்ளன.

ஓர் உண்மையை நான் சொல்லித்தான் ஆகவேண்டும். இறைவன் தந்த பொருள்களை இறைவனுக்கே வழங்கிவிட்டு தாம் அவற்றை வழங்கியதாக பெயர் விலாசங்கள் பொறித்து தம்மை விளம்பரப்படுத்திக் கொள்ளும் இந்திய மக்களின் மனோ நிலை போன்று இங்குள்ள மக்களின் மன நிலை இல்லை என்பது வெளிப்படை.

இவ்வளவு தூரம் ஆலயங்கள், நிறுவனங்களைப் புனரமைத்தும் கூட இங்குள்ள மக்கள் விளம்பரப் பலகையில் தமது பெயர் விலாசங்களை வெளிப்படுத்தாது. இவை எல்லாம் இறைவனின் செயல்களே எனக கருதி வாழும் இம்மக்கள் கூட்டத்தில் தான் உண்மையான பக்தியையும் சைவநெறி தத்துவங்களையும் நாம் காண்கிறோம்.

பெரும் நெருக்கடிக்களின் மத்தியிலும கூட - மனநிலை - பொருளாதார நிலை - பாதிக்கப்பட்ட நிலையிலும கூட இம்மக்கள் தமது மொழியையும், சமயத்தையும் அழியவிடாது பேணி வளர்ப்பதில் காட்டும் ஆர்வத்தை பாராட்டாமல் இருக்கமுடியாது.

இங்குள்ள இளைஞர்கள் மத்தியில் விழிப்புணர்வையும், சமய பக்தியையும், தொண்டுணர்வையும் கண்டு பூரிப்படைகிறோம் எமது தேசத்து இளைஞர்களிடம் காணப்படாத பண்புகளை நாம் இவர்களிடத்திலே கண்டோம்.

ஈழமக்களின் பண்பு, உற்சாகம், விடாமுயற்சி, தன்னம்பிக்கை ஆகியன உலகத்தின் சைவசமய மக்கள் எல்லோருக்கும் ஒரு முன்னுதாரணமாக உள்ளன. நீங்கள் இழந்தவற்றை, அழிக்கப்பட்டவற்றை மீண்டும் பெறவும். தன்மானத்துடன் தலைநிமிர்ந்து வாழ்வும் உண்மையான சமயவாழ்வு உங்களுக்கு கைகொடுக்கும். எமது பிரார்த்தனையும் அதுவே.

# இந்து சமயத்தைப் பாதுகாக்கும் பணியை தீவிரவாதம் என்று வர்ணிப்பது தவறு

## முனைவர் இரா. செல்வகணபதி கூறுகிறார்



இரண்டாவது உலக இந்து மாநாடு சிறப்புற நடைபெற்று நிறைவெய்தியிருக்கிறது. இந்த மாநாட்டில் கலந்துகொள்வதற்கு தென்னாசியப் பிராந்தியத்தில் இந்து மக்கள் வாழும் நாடுகளிலிருந் தெல்லாம் பல பிரமுகர்கள் வருகை தந்திருந்தார்கள். இந்து மாநாட்டில் கலந்து கொள்வதற்கு வருகை தந்து யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலுமுள்ள சைவ ஆலயங்களிலும் சிறப்புரைகளை ஆற்றுவதற்கென யாழ். வந்திருந்த தமிழக பேராசிரியர், முனைவர் இரா. செல்வகணபதியை யாழ். இந்து கலாசார பேரவை விடுதியில் சந்தித்தபோது அவரோடு பகிர்ந்துகொண்டவைகள்:-

*கேள்வி:* இரண்டாவது உலக இந்து மாநாடு குறித்து என்ன கூற விரும்புகிறீர்கள்?

**இந்துசமய மக்களின் கொடியாக நந்திக் கொடி ஏற்கப்பட்டது. சிறப்பான அம்சமாகும்.**

*பதில்:* மீண்டுமொரு முறை சைவ மக்கள் தமது சமயத்தின் சிறப்பை புத்தெழுச்சியோடு வெளிப்படுத்தியிருக்கிறார்கள் என்றால் மிகையாகாது.

*கேள்வி:* இந்த மாநாட்டிலே நீங்கள் அவதானித்த சிறப்பான அம்சங்கள் எவை?

*பதில்:* என்னைக் கவர்ந்த விடயங்கள் என்று சொல்வதானால் பிற சமயத்தினர் தமது சமயங்களுக்கென ஒவ்வொரு கொடியினை வைத்திருக்கிறார்கள். ஆனால், இந்து சமயத்தவர்களுக்கென பொதுவான ஒரு கொடி இருக்கவில்லை. அந்தக் குறைபாடு நீங்கி நந்திக்கொடி சைவமக்களின் பொதுவான கொடியாக ஏற்றுக்கொள்ளப்பட்டது ஒரு சிறப்பான விடயம்.

அதேபோல் பெரும்பான்மை பௌத்த சமய மக்கள் வாழும் இலங்கையில் சிறுபான்மை சைவமக்கள் ஒரு சைவ மாநாட்டை நடத்தியதும் அதில் ஒரு பௌத்தரான இலங்கைப் பிரதமர் அவர்கள் கலந்து சிறப்பித்தமையும் போற்றவேண்டிய விடயங்கள்.

இதனைப் பார்த்த பிறகு நாங்கள் எங்கள் தமிழ்நாட்டில் ஒரு சைவ மாநாட்டை நடத்தவேண்டுமென எமது தமிழக அரசைக் கோரவிருக்கிறோம் - நிச்சயமாக நடத்துவோம்.

**....பெரும்பான்மை பௌத்த சமய மக்கள் வாழும் இலங்கையில் சிறுபான்மை சைவ மக்கள் ஒரு சைவ மாநாட்டை நடத்தியதும் அதில் ஒரு பௌத்த சமயத்தவரான இலங்கைப் பிரதமர் கலந்துகொண்டதும் போற்றவேண்டிய விடயங்களாகும்.**

*கேள்வி:* இந்த மாநாட்டின் நோக்கம் என்னவாக இருந்தது?

*பதில்:* சமயத்தின் வழி சமாதானம். இதுவே இந்த மாநாட்டின் கருப்பொருள் இதை மையமாக வைத்து நுவரெலியாவில் நடைபெற்ற மாநாட்டின் நிறைவுநாள் வைபவத்தில் தீர்மானங்கள் நிறைவேற்றியிருக்கிறார்கள்.

*கேள்வி:* சைவ சமயத்தின் வளர்ச்சி குறித்து தமிழ்நாட்டிலும் ஈழத்திலும் என்ன வேறுபாட்டை காண்கிறீர்கள்?

*பதில்:* சைவத்தின் மூலவேர் இந்தியாவில் இருந்தாலும் கூட ஈழத்திலே தான் சைவம் சிறப்பாகப் போற்றி வளர்க்கப்படுவதை நான் காண்கிறேன். தமிழ்நாட்டிலே சைவம் ஒரு பெரும்பான்மை சமயம் என்பதால் எவரும் அதுகுறித்து அக்கறை செலுத்துவதில்லை. ஆனால், இங்கே சிறுபான்மை தமிழ்மக்கள் சைவ சமயத்தைப் போற்றிப் பேணுகிறார்கள்.

*கேள்வி:* இந்துசமய மக்கள் மூட நம்பிக்கைகளை அதிகம் கொண்டிருப்பதாக பலராலும் கூறப்படுகிறது. இதைப்பற்றி என்ன கூறுகிறீர்கள்.

*பதில்:* ஒவ்வொருவரும் வெவ்வேறு விதமான நம்பிக்கை களை வைத்திருக்கிறார்களே தவிர எவரும் மூட நம்பிக்கை உடையவர்கள் அல்ல. உதாரணமாக எனது நம்பிக்கையை மூட நம்பிக்கை என்று சொல்பவரின் நம்பிக்கை உண்மையான நம்பிக்கை என அவரால் நிரூபிக்க முடியுமா? இது இந்து சமயத்தைச் சிறுமைப்படுத்தும் கருத்துகளே தவிர உண்மையானவை அல்ல.

*கேள்வி:* இந்தியாவிலே இந்து தீவிரவாத போக்கு காணப்படுவதாக கூறுகிறார்களே இதைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

செவ்வி கண்டவர்:
ஆர்.மார்க் அன்ரனி

தமது சமயத்தைப் பாதுகாக்க இந்து சமயத்தவர் எடுக்கும் முயற்சியைத் தீவிரவாதம் என வர்ணிப்பது தவறு. பிற சமயத்தவர்கள் எமது சமயத்தை சிதைக்க, சமய மாற்றம் செய்ய முயற்சிக்கின்றபோது அதைத் தடுக்க நாம் ஏதாவது செய்யத்தானே

(13ஆம் பக்கம் பார்க்க)

# கல்விச்சாலைக் காட்சிகள்



இடைக்காடு மகாவித்தியாலய பவள விழாவை இலங்கை மின்சாரசபையின் வடபிராந்திய பிரதிப் பொது முகாமையாளர் ஆர். முத்துஇரத்தினானந்தன் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்துவைப்பதைப் படத்தில் காணலாம்.

அதிபர் வீ.ர.சித்திரவடிவேலு, பேராசிரியர் இ.சிவஞானசுந்தரம் (நந்தி), பேராசிரியர்கள் எஸ்.சின்னத்தம்பி ஆகியோர் அருகில் காணப்படுகின்றனர். (எ-173)



நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகளில் மாணவிகள் வழங்கிய உடற் பயிற்சி நிகழ்ச்சியினைப் படத்தில் காணலாம். (எ-51)



உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்தின் இல்ல மெய்வன்மைப் போட்டிகளில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட கோப்பாய் உதவி பிரதேச செயலர் க.இராசதுரை மற்றும் விருந்தினர்களை 'பாண்ட்' வாத்திய சகிதம் பாடசாலை அதிபர் சு.யோகராசா மைதானத்துக்கு அழைத்துச் செல்வதைப் படத்தில் காணலாம். (எ-10)



நல்லூர் புதிய செம்மணி வீதி, ஞான வைரவர் கோயிலடி ஞான ஒளி சனசமூக நிலைய முன்பள்ளி மாணவர்களின் விளையாட்டுப்போட்டி நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட ஞானோதய வித்தியாலய அதிபர் சு.இராசலிங்கம் மங்கள விளக்கேற்றி விழாவை ஆரம்பித்துவைப்பதைப் படத்தில் காணலாம்.

உதயன்

# தெற்கில் அரசியல் பூகம்பம்!

பிரதமர் ரணிலின் அரசில் அங்கம் வகிக்கும் அமைச்சர்களிடமிருந்து - பிரதமரின் ஆலோசனையோ இணக்கமோ இன்றி - பொறுப்புக்களைத் தன்னிச்சையாகப் பிடுங்கும் ஜனாதிபதி குமாரதுங்கவின் முயற்சியினால் இலங்கை அரசியலில் பெரும் அரசமைப்பு நெருக்கடி உருவாகித் தீவிரமாகியிருக்கின்றது; அரசியல் பூகம்பம் வெடிக்கும் சூழ்நிலை தோன்றியிருக்கின்றது.

அமைச்சுப் பொறுப்புக்களைத் தன்னிச்சையாகப் பிடுங்கும் ஜனாதிபதியின் உத்தரவு வர்த்தமானியில் வெளியாவதைத் தடுக்கும் விதத்தில் அரச அச்சகத்தில் நடவடிக்கைகள் இடம்பெற்றிருக்கின்றன.

இந்நிலையில், அரச அச்சகத்துக்கு வெளியில் ஜனாதிபதியின் உத்தரவு அடங்கிய வர்த்தமானியை அச்சிடுவது குறித்து ஜனாதிபதியுடன் தொடர்புடைய வட்டாரங்கள் ஆராய்ந்ததாகவும், இதற்காகப் பேரினவாத ஜே.வி.பியின் அச்சகம் கவனத்தில் கொள்ளப்பட்டதாகவும் கூட கொழும்பில் தகவல்கள் வெளியாகியிருக்கின்றன.

ஆனால், அரச அச்சகத்தில் அச்சிடப்பட்டு, தகவல் திணைக்களம் ஊடாக உத்தியோகபூர்வமாக வெளியிடப்பட்டாலன்றி அரச வர்த்தமானிக்கோ அதில் அடங்கும் உத்தரவுகளுக்கோ சட்ட அங்கீகாரம் கிடையாது என்று அரசுடன் தொடர்புடைய சட்டவல்லுநர்கள் கருதுகின்றார்கள்.

அதேசமயம், அமைச்சுப் பொறுப்புக்களைக் கையேற்கும் ஜனாதிபதியின் உத்தரவு வர்த்தமானியில் பிரசுரமான பின்னரே செல்லுபடியாகும் எனக் கருதுவது தவறு எனவும் -

சம்பந்தப்பட்ட உத்தரவில் ஜனாதிபதி கையெழுத்திட்டவுடனேயே அது சட்டவலுப் பெற்றுவிட்டது எனவும் -

ஜனாதிபதியின் பக்க சிரேஷ்ட சட்டவல்லுநரான ஜனாதிபதி சட்டத்தரணி எச்.எல்.டி.சில்வா தெரிவித்திருக்கின்றார்.

தனது உத்தரவுகளைச் செயற்படுத்தவிடாது தடுக்கும் அரசை, தனக்குள்ள நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி ஆட்சியிலிருந்து கலைப்பதற்கும் ஜனாதிபதி முயற்சி எடுக்கலாம். அத்தகைய நிலைமை இல்லை என்று கூறிவிட முடியாது.

ஆனாலும், ஆட்சிக் கலைப்பு உத்தரவும் வர்த்தமானியில் பிரசுரமாகுமா, பிரசுரமாகாவிட்டால் அதன் சட்ட வலு என்ன என்பவையெல்லாம் கேள்விக்குறியே.

ஜனாதிபதி தற்போது எடுத்துள்ள நடவடிக்கை அவரது அதிகாரத்தை மீறிய செயல் எனக் குற்றம் சுமத்தி, அவருக்கு எதிராகக் குற்ற விசாரணைப் பிரேரணை (Impeachment) ஒன்றை நாடாளுமன்றத்தில் கொண்டு வருவதற்கான வாய்ப்புகள் குறித்தும் ஆளும் ஐக்கிய தேசிய முன்னணி ஆராய்ந்து வருகின்றது.

நாடாளுமன்றத்தின் அரைவாசிக்கும் குறையாத எம்.பிக்கள் இத்தகைய குற்ற விசாரணைப் பிரேரணையில் ஒப்பமிட்டு, சபாநாயகரிடம் அதனை ஒப்படைத்து, மேல் நடவடிக்கைகளுக்காக அதனை சபாநாயகர் ஏற்றுக்கொண்டுவிட்டாரேயானால் அந்தப் பிரேரணை மீதான விவகாரம் முடிவுக்கு வரும்வரை நாடாளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரத்தை ஜனாதிபதி இழந்துவிடுவார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

தன்னிச்சையாக நாடாளுமன்றத்தை ஜனாதிபதி கலைப்பதைத் தற்காலிகமாக - சில மாதங்களுக்கேனும் - தடுக்கும் நடவடிக்கையாக இந்த முயற்சியில் அரசுத் தரப்பு இறங்கக் கூடும்.

இதற்கிடையில் -

"நாட்டில் தற்சமயம் உருவாகியுள்ள அரசமைப்பு நெருக்கடி நிலைக்கு தீர்வுகாணப்படாவிட்டால் ஜப்பானில் நடைபெறவிருக்கும் உதவி வழங்கும் நாடுகள் மாநாட்டில் இலங்கை பங்குபற்ற முடியாதநிலை ஏற்படும்" - என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எச்சரித்திருக்கின்றார்.

ஆக, தென்னிலங்கை அரசியல் சர்ச்சை - அரசமைப்பு நெருக்கடி - நாட்டின் பொருளாதாரத்தைப் பொறுத்தவரை அடி மடியிலேயே கைவைக்கும் ஆபத்து நிலையை உருவாக்கி நிற்கின்றது.

"அரசமைப்பு நெருக்கடியை ஏற்படுத்தி, நாட்டைக் குழப்பி, அரசியல் லாபம் தேட சில சக்திகள் முனைந்து நிற்கின்றன" என்று பிரதமர் கூறுவதும் நோக்கற்பாலது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதிக்கும், சட்டமாக்கும் அதிகாரமுடைய நாடாளுமன்றத்தின் நம்பிக்கைக்குரிய பிரதமருக்கும் இடையில் உருவாகக் கூடிய அரசமைப்பு ரீதியிலான அதிகாரப் போட்டி நாட்டின் ஜனநாயக அடிப்படைக்கே ஆபத்து விளைவிக்கக் கூடியது.

இந்த இரு தரப்புப் போராட்டத்துக்கு இடையில் முதலில் சிக்கப்போவது சட்டம், ஒழுங்கை நிலைநாட்ட வேண்டிய பொலிஸாரும், முப்படையினரும்தான் என்பது தெளிவு.

ஒருபுறம் அரசமைப்பு நெருக்கடி நீடிக்க, மறுபுறம் இருதரப்பு இழுபறிக்கு மத்தியில் யார் பக்கம் நிற்பது என்ற சிக்கலை படையினருக்கும் பொலிஸாருக்கும் ஏற்படுத்துவது, அவர்களை வேறு விதமாகச் சிந்திக்கவும் செயற்படவும் தூண்டும் என்பதை சம்பந்தப்பட்டோர் கவனிக்க வேண்டும்.

அத்தகைய மோசமான நிலை ஜனநாயகத்தையே குழிதோண்டிப் புதைக்க வைத்துவிடும்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஒரு கட்சியைச் சேர்ந்தவராகவும், நாடாளுமன்றப் பெரும்பான்மையைக் கொண்ட அரசு வேறு ஒரு கட்சியைச் சேர்ந்ததாகவும் அமைந்தால் எழக்கூடிய சிக்கல்கள் குறித்து கவனத்தில் எடுக்காமல் - தூரநோக்குதிருஷ்டியின்றி - 1978இல் ஜே.ஆர்.ஜெயவர்த்தனா அரசினால் கொண்டுவரப்பட்ட - விதைக்கப்பட்ட - அரசமைப்பின் வினையை நாடு இப்போது அறுக்கத் தொடங்கியுள்ளது.

பெண்களுடன் சேஷ்டை புரிந்தோர்

# தட்டிக்கேட்கச் சென்றவர்களை வாள், கத்தி கொண்டு மிரட்டினர்

ஈச்சமோட்டைப் பகுதியில் சம்பவம்

கொழும்புத்துறை,மே12

பெண்களுடன் சேஷ்டை புரிந்த இளைஞர்களைத் தட்டிக் கேட்கச் சென்றவர்கள் சம்பந்தப்பட்ட இளைஞர்களால் வாள்கள், கத்திகள் கொண்டு மிரட்டப்பட்டனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை ஈச்சமோட்டைச் சந்திப் பகுதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது.

ஈச்சமோட்டைச் சந்தியில் கூடிநிற்கும் இளைஞர்கள் சிலர் அவ்வீதியினால் சென்றுவரும் இளம் பெண்கள் மீது தகாத வார்த்தைகளைப் பிரயோகித்து சேஷ்டைகள் புரிந்து வருவது வழமை என்றும், இதனை அவதானித்த அவ்வூர் பெரியவர்கள் சிலர் ஒன்றிணைந்து இளைஞர்களின் இத்தகைய செயலைத் தட்டிக கேட்க முற்பட்டனர் என்றும், இவ்வாறு தட்டிக்கேட்க முயன்றபோயாரை வெவ்வேறு இடங்களில் தயாராக வைத்திருந்த வாள்கள், கத்திகள், பொல்லுகளை எடுத்துக்காட்டி இளைஞர்கள் விரட்டினர் என்றும கூறப்பட்டது.

இதற்கிடையில் இவ்வாறான இளைஞர்களின் அடாவடித்தனங்கள் இப்பகுதிகளில் நாளுக்கு நாள் அதிகரித்துவருவதாக ஊர்மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். (எ-4-30)

## நாட்டு நடப்பு

### இதுவல்லோ நாட்டுப்பற்று

ஏறியே பிளேனில் வந்து
இறங்கிய உடனே அன்னார்
'காரினை'ப் பிடித்துக் கொண்டு
காணிக் கந்தோருக்குச் சென்று
உறுதியின் விபரம் காட்டி
உடன் 'கொப்பி' பெற்றுக் கொண்டு
கூறிடும் விலைக்குச் சற்றும்
குறைவின்றி காணி விற்று
அறிரு நாள்களுக்குள்
அனைத்தையும் சேர்த்துக்கொண்டு
தேறிடும் பணத்தினோடு
திரும்பினார் உடனே லண்டன்
அறிந்ததும் உறவினர்கள் கூடி
அலைகின்றார் இவரைக் காண
இறுதியில் இவரைக் காணாது
ஏங்கியே பெருமூச்சு விட்டார்

- விகடகவி.

இளைஞர் அரங்கில் தீர்மானம்

# தமிழகம் சென்று ஆய்வு நடத்த புலமைப்பரிசில் அறிமுகப்படுத்துக!

## இந்து கலாசார அமைச்சரிடம் கோரிக்கை

சண்டிலிப்பாய்,மே12

'யாழ்.மாவட்டத்திலுள்ள இந்து இளைஞர்கள் இந்தியாவுக்கும், ஏனைய இந்து கலாசாரம் நிலவி வரும் நாடுகளுக்கும் சென்று இந்து சமயம், ஆன்மீகம் ஆகிய துறைசார் பற்றி ஆராய்ந்து கற்பதற்கேற்ற வகையில் புலமைப் பரிசில் திட்டமொன்று அறிமுகப்படுத்தப்பட வேண்டும்.

- இவ்வாறு கோரும் முக்கிய தீர்மானம் ஒன்று இரண்டாவது உலக இந்து மாநாட்டை முன்னிட்டு நடத்தப்பட்ட யாழ்ப்பாணப் பிராந்திய மாநாட்டில் இடம்பெற்ற 'இளைஞர் அரங்கு' நிகழ்வின் இறுதியில் நிறைவேற்றப்பட்டது.

யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை முது நிலை விரிவுரையாளர் கலாநிதி மா.வேதநாதன் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் நடைபெற்ற இந்த இளைஞர் அரங்கில் நிறைவேற்றப்பட்ட ஏனைய முக்கிய தீர்மானங்கள் பின்வருமாறு:-

★ இந்தியாவில் திருத்தல யாத்திரையை மேற்கொள்ளவும், முக்கிய ஆலயங்கள், இந்துமத பீடங்கள் ஆகியனவற்றை தரிசிக்கவும் செல்ல விரும்பும் இந்து இளைஞர்களுக்கு இந்து கலாசார அலுவல்கள் அமைச்சு சலுகைக் கட்டணத்தில் போக்குவரத்து வசதிகளை செய்துகொடுக்க வேண்டும்.

★ இந்து சமய மக்களின் பண்பாட்டுக் கோலங்கள், மத வழிபாட்டு முறைகள் ஆகிய விடயங்கள் பற்றி வாரத்தில் ஒருநாள் கலந்துரையாடல் மற்றும் கருத்தரங்குக் கூட்டங்களை ஒழுங்கு செய்து நடத்துவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும்.

★ யாழ்ப்பாணத்தில் சகல வசதிகளும் அடங்கிய இந்து விடுதி இல்லாத குறைபாட்டை நிவர்த்தி செய்யும் முகமாக இந்து கலாசார அமைச்சு இங்கு இந்து விடுதி ஒன்றை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

★ இந்த இளைஞர் அரங்கில் யாழ்.மாவட்டத்திலுள்ள இந்து இளைஞர் சங்கங்களின் உறுப்பினர்கள், யாழ்.பல்கலைக்கழக இந்து பண்பாட்டுக்கழக உறுப்பினர்கள், யாழ்.மாவட்ட இந்து இளைஞர் பேரவைப் பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்துகொண்டனர். இந்து சமய விழுமியங்கள் பற்றிய கட்டுரைகள் வாசிக்கப்பட்டதுடன் சொற்பொழிவுகளும் நிகழ்த்தப்பட்டன. (எ-13.5)

# ஆலயங்களுக்கு வழங்கப்பட்ட ஓட்டோக்கள் சில துஷ்பிரயோகம்

வலி.வடக்கு,மே12

இந்து கலாசார அமைச்சினால் ஆலயங்களுக்கு வழங்கப்பட்ட ஓட்டோக்களில் சில துஷ்பிரயோகம் செய்யப்படுவதாக குற்றச்சாட்டுக்கள் கிளம்பியுள்ளன.

குடாநாட்டில் உள்ள இந்து ஆலயங்கள் பலவற்றுக்கு அவற்றின் சொந்தத் தேவை கருதி அண்மையில் இந்து கலாசார அமைச்சினால் ஓட்டோக்கள் வழங்கப்பட்டிருந்தன. அவற்றில் பெரும்பாலானவை சிறந்த முறையில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. எனினும், அவற்றில் சிலவற்றை ஆலய பரிபாலன சபையினர் வாடகைக்கு விடுவதாகவும் வேறு சில ஆலய நிர்வாகங்கள் மாதாந்த வாடகைக்காக இரண்டாவது நபர் ஒருவரிடம் ஓட்டோக்களைக் கையளித்துள்ளனர்.

இந்த ஓட்டோக்கள் எந்தவிதக் கட்டுப்பாடும் இன்றி சேவையில் ஈடுபட்டு வருவதால், ஓட்டோவை நம்பி தொழில் செய்துவருபவர்கள் பெரும் அசௌகரியங்களை அனுபவிப்பதாக அவர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இதேசமயம், சில ஆலயங்களுக்கு வழங்கப்பட்ட ஓட்டோக்கள் ஆலய நிர்வாக சபைக்கு வழங்கப்பட்டதா ஆலய பூசகருக்கு அனுப்பப்பட்டதா என்பதிலும் இழுபறி நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ம-86)

# தென்மராட்சி ஓய்வூதியர்களுக்கு சொந்த முகவரிக்கு வவுச்சர்கள்

தென்மராட்சி,மே12

சாவகச்சேரி மக்கள் வங்கியில் ஓய்வூதியம் பெறுபவர்களின் மே மாத ஓய்வூதிய வவுச்சர்கள் மீளக்குடியமர்ந்துள்ள ஓய்வூதியர்களின் முகவரிக்கு தென்மராட்சி பிரதேச செயலகத்தினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த மாத ஓய்வூதிய வவுச்சருடன் இணைக்கப்பட்ட ஓய்வூதியரின் விலாசத் திரட்டுப் பத்திரத்தை பிரதேச செயலகத்தில் மீளஒப்படைத்த ஓய்வூதியர்களுக்கே இந்த மாத வவுச்சர்கள் தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. என்றும் -

இதுவரை விலாசத்திரட்டு படிவம் சமர்ப்பிக்காதவர்கள் - இதுவரை தமது சொந்த இடங்களில் மீளக்குடியமராதவர்களுக்கு ஓய்வூதிய வவுச்சர்கள் பிரதேச செயலகத்தில் வைத்து வழங்கப்பட்டு வருகின்றன என்றும் - கூறப்பட்டது.

கடந்த மூன்று வருடங்களாக ஓய்வூதியர்களின் வவுச்சர்கள் மக்கள் வங்கியில் வைத்து ஓய்வூதியர்களுக்கு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (எ-117)

## நாளை

சித்திரை 30
செவ்வாய்க்கிழமை
13.05.2003
திதி : துவாதசி
பிற்பகல் 4.17 வரை
நட்சத்திரம் : அத்தம்
மாலை 6.32 வரை
சுபநேரம் : 10.24 - 11.54
ராகுகாலம் : 1.54 - 4.24
(பழைய நேரப்படி)

## உதய வாக்கு

ஒரு மனிதனின் தவறு மற்றொருவனுக்கு ஒரு பாடமாகும்.

சுன்னாகம், உடுவில் பகுதியில்

# பெண்களுடன் சேஷ்டை புரிந்தோருக்கு எச்சரிக்கை

வலி.வடக்கு,மே12

சுன்னாகம், உடுவில் பகுதியில் பெண்களுடன் சேஷ்டை புரிந்த இளைஞர்கள் சிலர் கலாசாரத்தைப் பேணும் குழுவினரால் பிடித்து எச்சரிக்கப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

பாடசாலைகளுக்கும் தனியார் கல்வி நிறுவனங்களுக்கும் செல்லும் மாணவிகள் மற்றும் பெண்களை வீதியில் நிற்கும் இந்த இளைஞர்கள் கேலிசெய்து வந்ததுடன் அவர்களின் தொப்பிகளைக் கழற்றுதல், தகாத வார்த்தைகளைப் பிரயோகித்தல் போன்ற செயல்களிலும் ஈடுபட்டு வந்ததாக பெற்றோர்களும் ஏனையவர்களும் முறையிட்டிருந்தனர்.

இதனை அடுத்தே கலாசாரத்தைப் பேணும் குழுவினர் இந்த விடயத்தில் தலையிட்டு சம்பந்தப்பட்டவர்களை எச்சரித்துள்ளனர்.

இது தவிர பெண்களை ஏமாற்றுபவர்கள், கடத்திச் செல பவர்கள் போன்ற செயல்களில் ஈடுபடுபவர்கள் மீதும் கலாசாரத்தைப் பேணும் குழுவினர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம)

# மாகாணக் கல்விச் செயலாளர் தலைமையில் அதிகாரிகள் குழு

## இன்று யாழ். வருகிறது

யாழ்ப்பாணம்,மே 12

யாழ்மாவட்டப் பாடசாலைக்கு விஜயம் செய்து பல்வேறு விடயங்கள் பற்றி ஆராய்வதற்கென மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் ஆர்.தியாகலிங்கம் தலைமையிலான குழுவொன்று இன்று திங்கட்கிழமை யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ளது.

இன்றும், நாளையும் இந்தக் குழுவினர் பாடசாலைகளுக்கு விஜயம் செய்து நிலைமைகளை நேரில் கண்டறிவர்.

அத்துடன், நாளைமறுதினம் புதன்கிழமை தொடக்கம் 17ஆம் திகதி வரையான நான்கு நாள்கள் இக்குழுவினர் கலந்துரையாடல்களிலும் ஈடுபடுவர்.

இக்கலந்துரையாடல்களில் பிரதிக்கல்விப் பணிப்பாளர், உதவிக் கல்விப்பணிப்பாளர்கள், கணக்காளர்கள், நிர்வாக உத்தியோகத்தர்கள், கோட்டக்கல்வி பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், அதிபர்கள் ஆகியோர் கலந்துகொள்வர். (எ-10-152)

## 50ஆவது பிறந்த நாள் வாழ்த்து

(12.05.2003)

**தர்மலிங்கம் தர்மேந்திரன்**

*கவக்கிரத்தினம் றோட், வேலம்பர் லேன், அரியாலையைச் சேர்ந்த*

**தர்மலிங்கம் தர்மேந்திரன்**

*தனது 50ஆவது பிறந்தநாளை இன்று (12.05.2003) திங்கட்கிழமை தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார். இவரை சித்திவிநாயகர் அருளால் பல்லாண்டு காலம் வாழ்க வாழ்கவென அம்மா, சகோதரர்கள், மனைவி, பிள்ளைகள் மற்றும் லைற் மாமா குடும்பத்தினர் வாழ்த்துகின்றார்கள்.*

அரியாலை. (17845) அருள் (நண்பன்).

## 90ஆம் நாள் நினைவஞ்சலி



**செல்வன் சபாரட்ணம் நிவாசன்**

அன்னை மடியில் 1982.01.26 — ஆண்டவன் அடியில் 2003.02.12

12.02.2003 புதன்கிழமை சிவபதமடைந்த எங்கள் அன்புச் செல்வத்தின் நினைவாக இன்று (12.05.2003) திங்கட்கிழமை நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்து கொள்ளு மாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் திடீர் மறைவுச் செய்திகேட்டு ஓடோடி வந்து சகல வழிகளிலும் உதவிகளையும், ஒத்துழைப்புகளையும் வழங்கிய தும்பளை கடற்றொழிலாளர் சங்கத்தினருக்கும், கற்கோவளம் கடற்றொழிலாளர் சங்கதத்தினருக்கும் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

பிரிவால் துயருறும்:
க.சபாரட்ணம் குடும்பத்தினர்,
ச.நிஷாந்தன் அண்ணா.

*தும்பளை கிழக்கு,*
*பருத்தித்துறை.* (17824)

## 12ஆவது ஆண்டு நினைவு அஞ்சலி

அன்னை மடியில் 04 - 02 - 1939



இறைவன் மடியில் 12 - 04 - 1991

**துரைராசா கோணேஸ்வரி**

*திதி 30.03.2003*

குலத்தின் இலக்கணமாய் அன்பின் பிறப்பிடமாய்
குடும்பத்தின் குலவிளக்காய் நம் அன்புத் தெய்வமாய்
என்றும் மறவாத அன்புடன் எமை அரவணைத்து
நாம் சிறப்போடு வாழ வழிவகுத்து
எங்கள் வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் ஒளியூட்டிய
எங்கள் அன்புத் தாயே எம் உள்ளம் உள்ளவரை
மறையாது உங்கள் நினைவு.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*மோகனராஜ்(சுவிஸ்), கிரிராஜ்(சுவிஸ்), லதா(ஜேர்மனி), இந்துலதா(சுவிஸ்), உதயராஜ்(சுவிஸ்) மற்றும் மருமக்களான சுவேந்திரன்(ஜேர்மனி), சிவகுமாரன்(சுவிஸ்), வள்ளிநாயகி(சுவிஸ்), வசந்தராணி(சுவிஸ்), குமுதினி(சுவிஸ்) மற்றும் பேரப்பிள்ளைகளான விதுசன்(ஜேர்மனி), விதுரன்(ஜேர்மனி), வின்சி(ஜேர்மனி).*

*(அன்னாரின் நினைவுதினம் சென்ற 12-04-2003 ஆகும்.)*

மு.துரைராசா (கணவர்)
*இல.93, சிவன்பண்ணை றோட், யாழ்ப்பாணம்.*

(C27665)

## ஆண்டுகள் மூன்று கரைந்ததுவோ கண்ணீரில்.....

கண் மகிழ 10 - 01 - 1975



கண் நெகிழ 12 - 05 - 2000

செல்வி

**யஜிதா விஜயரத்தினம்**

நிலையற்ற வாழ்வில் கதியற்ற நிலையில்
விதி தந்த வேதனையில் சிக்கித் தவிக்கும்
பாவப்பிறவிகள் நாங்கள் அல்லற்பட்டு
போக இடம் தெரியவில்லை; புலம்பி அழுதும் பயனில்லை
ஆண்டு மூன்றானாலும், துயரமோ தீரவில்லை
மீண்டொருக்கால் வந்திங்கு எம் துயரம் தீராயோ?
நீண்ட எம் வேதனையை விட்டகல வாராயோ?
வேண்டி நிதம் நாமழுது விக்கித் தவிக்கின்றோம்
*ஆத்ம சாந்திக்காய் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

*கட்டுக்காணி லேன்,*
*சாவகச்சேரி.* (17851) -குடும்பத்தினர்.

## வலி.வடக்கில் இரு கிராமங்கள் அபிவிருத்திக்குத் தெரிவு

வலி தெற்கு, மே12

நிக்கொட் திட்டத்தின் கீழ் வலி. வடக்கைச் சேர்ந்த இரண்டு கிராமங்க்ள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன. அளவெட்டி மேற்கு கிராம சேவையாளர் பிரிவு, இளவாலை வட மேற்கு கிராமசேவையாளர் பிரிவு என்பனவே இவ்வாறு அபிவிருத்தி செய்யப்படவுள்ளன. (எ-152)

## இடைக்குறிச்சி பாடசாலை ஆரம்பம்

தென்மராட்சி,மே12

இரண்டாம் தவணைக்காக எதிர் வரும் 21ஆம் திகதி ஆரம்பமாகவிருந்த வரணி இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயம் மாணவர் நலன்கருதி கடந்த ஐந்தாம் திகதி ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக வித்தியாலய அதிபர் சுதர்மலிங்கம் அறிவித்துள்ளார். (எ-117)

## நூல் அறிமுக விழா

யாழ்ப்பாணம்,மே12

முனைவர் கு.அரசேந்திரனின் "உலகம் பரவிய தமிழின் வேர்கல்" என்னும் நூலின் அறிமுக விழா நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

கலாநிதி எஸ். சிவலிங்கராஜா தலைமையில் நடைபெறவுள்ள இவ் அறிமுக விழாவில் நூலின் அறிமுகவுரையை கலாநிதி ப. புஸ்பரட்ணமும், ஆய்வுரையை பேராசிரியர் க.சண்முகதாஸும் நிகழ்த்துவார்கள். (ம-8)

## பண்டத்தரிப்பில் பத்திமா அன்னைக்கு புதிய ஆலயம்

மல்லாகம்,மே12

பண்டத்தரிப்பு பிரதேசத்தில் புதிதாக அமைக்கப்பட்ட புனித பத்திமா அன்னை ஆலயம் இன்று திங்கட்கிழமை யாழ்.ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகையினால் திறந்து வைக்கப்படவுள்ளது.

இதனை முன்னிட்டு இன்று மாலை சண்டிலிப்பாய், அளவெட்டி, பண்டத்தரிப்பு, விளான் பகுதி கிறிஸ்தவ மக்கள் தத்தமது பகுதிகளிலிருந்து புதிய ஆலயம் நோக்கி செபமாலைப் பேரணி நடத்தவுள்ளனர்.. (எ-ரி)

## சிறுகதைத் தொகுப்பு நூல் வெளியீடு

சுழிபுரம்,மே12

திருமதி ராணி சீதரன் எழுதிய 'நடுகல்' சிறுகதைத் தொகுப்பு நூல் வெளியீடு இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3.30மணிக்கு பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் கா.நடராசா தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் நூல் வெளியீட்டுரையை செங்கை ஆழியானும் ஆய்வுரையை செம்பியன் செல்வனும் அறிமுகவுரையை ஸ்ரீதயாளனும் நிகழ்த்துவர். (எ-28)

## வலி.தென்மேற்கில் கண் நோய் பரவுகிறது!

சண்டிலிப்பாய்,மே12

வலி.தென்மேற்குப் பகுதியில் கண் நோய் பரவி வருகின்றது.

தற்போது நிலவும் கடும் வெப்பமான சுவாத்தியத்தில் இந்த நோய் இலகுவாக தொற்றிக்கொள்கின்றது.

சங்கானை அரசினர் வைத்தியசாலை வெளி நோயாளர் பிரிவில் கடந்த வெள்ளியன்று பலர் கண் நோய்க்கு சிகிச்சை பெற்றுச் சென்றதை அவதானிக்க முடிந்தது.

இதேவேளை - கடும் வெப்பம் காரணமாக கடி, சொறி ஆகிய தோல வருத்தங்களுக்கும் பலர் உள்ளாகியுள்ளனர். (எ-135)

**French**

மொழி வகுப்பு யாழ் நகரிலும்
ஆரம்பம் - 13.5.2003
காலை 9.30 மணி
Mr. இந்திரகுமார் CAP
தமிழ் மூல விளக்கத்துடன்
பேச்சுப் பயிற்சி
New College of Higher Studies.
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.
T.P. (01) 505642

**களஞ்சியசாலை வாடகைக்கு**

கொக்குவில் புகையிரத நிலையத்திற்கு எதிர்ப்புறம் அமைந்துள்ள 4000 சதுர அடி விஸ்தீரணம் கொண்ட களஞ்சியசாலை (STORE) வாடகைக்கு உண்டு. தேவையானவர்கள் தொடர்பு கொள்ளவும்.

இ. சங்கர்,
430, காங்கேசன்தறை வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 222 3081

(c/27803)

**ஜெனரேட்டர்கள்**

உங்களது மின்சாரப் பிரச்சினையைத் தீர்க்க ஹொண்டா (HONDA) ஜெனரேட்டர்கள்.

650W, 1000W, 1200W, 1600W, 2600W

வீடுகள், காரியாலயங்கள், ரெஸ்ரோரண்டுகள், கடைகள், மண்டபங்கள், டிஸ்பென்சறிகள், தோட்ட பங்களாக்கள்...........
இன்னும் பல!
உடனடி விற்பனைக்கு உண்டு.

கையிருப்பு சொற்பமே!

**GENERAL EQUIPMENTS LTD**
316, 400, Sri Sangaraja Mawatha, Colombo - 12
Tel: 345046, 327264, 343822, 430799, Fax: 434637

(C27825)

இதோ!

திருநெல்வேலியில்
☆ போட்டோஸ்ரற் பிரதிகள்
☆ அடையாள அட்டை மற்றும் ஆவணங்கள், சூட்கேஸ் அல்பங்களுக்கான போட்டோக்கள், கவிரிடுதல்(லமினேற்றிங்)
☆ ஸ்பைரல் பைண்டிங் வகைகள்
☆ உள்நாட்டு, வெளிநாட்டு தொலைத் தொடர்புகள்.

எனப் பல சேவைகளைப் பெற்றுக்கொள்ள

**பிரகாந்த்**

*56B, பலாலி வீதி,*
*திருநெல்வேலி.* (17852)
யாழ்ப்பாணம்
T.P.No:- 2223184

கடற்றொழில் மற்றும் கடலோட்டு எந்திரவியல் கல்லூரி
யாழ்ப்பாணம்

**கடலக தொழில்நுட்பவியல் பயிற்சி - 2003**

மேற்படி பயிற்சி நெறியைப் பயில விரும்புபவர்கள் பூர்த்தி செய்யப்பட்ட சுய விவரத்தில் தமது கல்வித்தகைமையையும் குறிப்பிட்டு விண்ணப்பப் படிவத்தை 28.05.2003 ஆம்திகதிக்கு முன்னர் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள விலாசத்துக்கு அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

வயது எல்லை:-18-35
காலம்:-மூன்று மாதங்கள்

அதிபர்
கடற்றொழில் மற்றும் கடலோட்டு எந்திரவியல் கல்லூரி,
இல.372, பாங்ஷால் வீதி,
யாழ்ப்பாணம்.

(C/27877)

## JAFFNA COLLEGE

Applications are invited from suitably qualified people for the following posts Applications giving full bio-data should reach Principal, Jaffna College, Vaddukoddai on or before 23rd May 2003 under registered post. Copies of all certificates and testimonials should be annexed with the applications.

1. **Chemistry Teacher:** Special Degree in Chemistry or General Degree with Chemistry as a subject. Should be able to teach Biology as well. Preference will be given to those demonstrate competence to teach in English.
2. **English Teacher :** Degree with English or English Trained - Retired English Teachers can also apply.
3. **Physical Education Teacher:** A female with at least a Diploma in Physical Education. Should be able to coach girls Basketball and athletics.
4. **Library Assistant:** Should have qualifications in Librarianship and working knowledge in computers.
5. **Clerk Typist:** Should possess Diploma / Certificate in stenography from a recognized Institution.
6. **Laboratory Assistant:** G.C.E. A/L (4 passes old syllabus / 3 passes new syllabus) with at least credit passes in Chemistry & Physics.

**Principal,**
**Jaffna College,**
**Vaddukoddai.**

(C27878)

## கண்ணீர் அஞ்சலி

யாழ்.பிரதேச செயலக சமுர்த்தி தலைமைக் காரியாலய முகாமையாளர் திருமதி யோ.ராகினி அவர்களின் அன்புக் கணவர்



**சின்னத்துரை யோகராசா**

அவர்களின் இழப்பால் துயருறும் மனைவி மற்றும் சகோதரர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சமுர்த்தி முகாமையாளர் சங்கம்
- யாழ்.மாவட்டம்

C/27876)

## வாழ்த்துகின்றோம்



புனித பத்திமா அன்னையின் புதிய ஆலயம்
எமது பங்கில் அழகுற அமைய
அல்லும்பகலும் அரும்பாடுபட்ட எமது பங்குத்தந்தை
**அருட்திரு. ம.பெ.ஞானரத்தினம்**
அடிகளாருக்கும் ஏனையோருக்கும்
எமது மனமார்ந்த நன்றிகளையும் வாழ்த்துக்களையும்
தெரிவிக்கின்றோம்.

பத்திமா கோவிலடி,
பண்டத்தரிப்பு. (17684)

**ப.அந்தோனிப்பிள்ளை குடும்பத்தினர்.**

## வாழ்த்துகின்றோம்



பண்டத்தரிப்பு புனித பத்திமா அன்னையின்
யாத்திரைத் தலத்திலே
புதிதாக நிர்மாணிக்கப்பட்டு இன்று
திறப்புவிழா இடம்பெறுவதனூடாக
அன்னையை மகிமைப்படுத்தும்
இந்நன்னாளில்
எம் நீண்ட காலக்கனவு நனவாக
அயராது உழைத்த
எம் அன்புக்குரிய பங்குத்தந்தை
**அருட்திரு.**
***ம.பெ.ஞானரத்தினம்***

அடிகளாருக்கு எமது வாழ்த்துக்களையும் நன்றிகளையும் தெரிவிக்கின்றோம். மேலும் ஆலய கட்டுமானப் பணிகளில் முன்னின்று உழைத்த பணியாளர்கள், நிதி மற்றும் பல்வேறு வழிகளில் உதவி புரிந்தோர் அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

**பண்டத்தரிப்பு கத்தோலிக்க இளையோர் ஒன்றியத்தினர்.**

(17806)



## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## *சிவயோகசுவாமி நினைவுப் பேருரை*

காலம்: 2003.05.12 திங்கட்கிழமை பி.ப. 3.00மணி
இடம்: **யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கம்**

நினைவுப்பேருரையை நிகழ்த்துபவர்:
**கலாநிதி கணபதி பாஸ்கரன்** (M.A.,M.Phil.,PH.D)
*(பேராசிரியரும் பணிப்பாளரும் தத்துவமையம், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், தமிழ்நாடு)*

தலைப்பு:- சைவசித்தாந்தமும் இந்திய தத்துவ முறைகளும்

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

- துணைவேந்தர். (சி-27843)



## கண்ணீர் அஞ்சலி

யாழ்.பல்கலைக்கழக பாதுகாப்பு உத்தியோகத்தர்
திரு.யோ.குமரேசன் அவர்களின் அன்புத் தந்தையார்
**அப்புக்குட்டி யோகபாலன்**
*(முன்னாள் சாரதி, இ.போ.ச.)*

அவர்கள் 10.05.2003ஆம் திகதி காலமாகிவிட்டார். இவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பாதுகாப்பு உத்தியோகத்தர்,
நலன்புரிச் சங்கம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

(17849)



## 45ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மண்ணில் மலர்வு
09
06
1947



விண்ணில் விதைவு
28
03
2003

## அமரர். இராசு மகாதேவன்

எமது நல்வாழ்வுக்கு ஒளியேற்றி வைத்த எம் அன்புத் தெய்வத்தின் ஆத்ம சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு இன்று (12.05.2003) திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

புகையிரத வீதி,
மல்லாகம்.

**மனைவி, பிள்ளைகள்**


## நகர சபை, சாவகச்சேரி
# கேள்வி அறிவித்தல்

கீழே குறிப்பிடப்படும் வேலைகளுக்கான கேள்விகள் என்னால் 05.06.2003ஆம் திகதி முற்பகல் 10.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்பட்டு அதே தினம் 10.30 மணிக்கு கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும்.

நிர்மாணப் பயிற்சி நிலையத்தில் (இக்ராட்) 'தரம் எம் 9' அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் பதிவுபெற்ற ஒப்பந்தகாரர் மாத்திரமே கேள்விப்பத்திரங்கள் கோருவதற்குத் தகைமையுடையவராவார்.

ஒப்பந்தப்பத்திரங்களைப் பெறுவதற்கு முன்னர் நிர்மாணப் பயிற்சி நிலையத்தால் வழங்கப்பட்டதும் இற்றைவரை செய்யப்பட்ட வேலைகளின் விவரங்கள் அடங்கியதுமான பதிவுப் புத்தகத்தைச் சமர்ப்பித்தல்வேண்டும்.

| வேலை விவரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| 01. நூலகத் தளபாடம் செய்து வழங்குதல் (தொகுதி 1) | 2500.00 | 600.00 |
| 02. நூலகத் தளபாடம் செய்து வழங்கல் (தொகுதி 2) | 2000.00 | 600.00 |
| 03. வீரக்கொடியார் ஒழுங்கை கிரவலிடல் வட்டாரம் 5 - 600' | 500.00 | 600.00 |
| 04. வாகையடி ஒழுங்கை கிரவலிடல் வட்.4 1400' | 1500.00 | 600.00 |
| 05. தேவாலய வீதி கிரவலிடல் வட்.5 2400' | 1800.00 | 600.00 |
| 06. ஈச்சந்தாழ்வயல் ஒழுங்கை கிரவலிடல் வட்டாரம் 1 - 900' | 1000.00 | 600.00 |
| 07. சங்கத்தானை 2ஆம் ஒழுங்கை தாரிடல் வட்டாரம் 9 - 1280' | 3000.00 | 600.00 |
| 08. பங்களா வீதி தாரிடல் வட்டாரம் 1 2100' | 5000.00 | 600.00 |
| 09. தாளையடி அம்மன் கோயில் வீதி கிழக்கு 2ஆம் ஒழுங்கை தாரிடல் வட்.6. 800' | 2000.00 | 600.00 |
| 10. கலைமகள் பாலர் பாடசாலை மீள்நிர்மாணம் வட்.5 | 2500.00 | 600.00 |
| 11. பஸ்நிலையக் கடைகள் திருத்தம் | 4000.00 | 600.00 |
| 12. பொதுச்சந்தையில் தகரக்கொட்டகைகள் இரண்டு அமைத்தல் - 50' நீளம் | 2000.00 | 600.00 |

கேள்விப் பத்திரங்களை சாவகச்சேரி நகரசபை அலுவலகத்தில் 30.05.2003ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரை மேற்குறித்த கேள்வி வைப்புப் பணத்தையும் கேள்விப்படிவக் கட்டணத்தையும் செலுத்துவதன்மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப்படிவங்கள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப் பிரதி 'செயலாளர், நகரசபை, சாவகச்சேரி' என்ற முகவரிக்கும் இணைப்பிரதி 'பி/உள்ளூராட்சி உதவி ஆணையாளர், செட்டித்தெரு, யாழ்ப்பாணம்' என்ற முகவரிக்கும் 5.6.2003ஆம் திகதி மு.ப. 10.00மணிக்கு முன்பு கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கப்படல்வேண்டும். உறையின் இடது பக்க மேல் மூலையில் வேலையின் பெயர் குறிப்பிடப்படல்வேண்டும்.

இது தொடர்பான மேலதிக விவரங்களை அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

நகரசபை அலுவலகம்,
சாவகச்சேரி.
12.05.2003

(சி-27875)

செயலாளர்,
நகரசபை, சாவகச்சேரி.


## தங்கம் அடகு பிடிக்கும் சேவை
# யாழ்ப்பாணம்
## செலான் வங்கி கிளையில்

நீடித்த நேர வங்கி சேவை

குறைந்த வட்டி வீதம்

நகைகளை பரிசோதிப்பதில்
நவீன தொழில் நுட்பம்

மாதாந்த வட்டி 1.5% மட்டுமே

வார நாட்களில்
காலை 9.00 மணி முதல்
மாலை 3.00 மணி வரை

செலான் வங்கி
அன்புடன் அரவணைக்கும் வங்கி

செலான் வங்கி
560-562, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021-3047, 3755 பெக்ஸ்: 021-3047

# பண்டத்தரிப்பு புனித பத்
# புதிய ஆலய நேர்ந்

2003–0

## யாழ்.ஆயரின் வாழ்த்துச் செய்தி

எமது தலத்திருச் சபை யின் திருப்பயணத் தலங்க ளில் ஒன்றான பண்டத் தரிப்பு புனித பத்திமா ஆலயம் புதிதாகக் கட் டப்பெற்று நேர்ந்தளிக்கும் பெருவிழா, இரட்சணிய வரலாற்றில் அன்னையின் அருட்பெருக்கிற்காக ஆண்டவருக்கு நன்றி செலு த்தும் வாய்ப்பாக அமை கிறது. திருத்தூதர் பணிகள் நூலில் குறிப்பிட்டது போல ஆவியின் அருட்பொழிவுக் காக திருத்தூதர்களோடு மேல்மாடியில் செபத்தில் ஒரேமனமாய் இருந்தது போல திருச்சபையின் வரலாறு முழுவதும் அன்னை மரி யாள் திருச்சபையோடு இணைந்து பயணஞ்செய்கி றதை நாம் உணர்வோம்.

"அவர் சொல்லுகிறபடி செய்யுங்கள்" என யோவான் திருத்தூதுவர் குறிப்பிட்டது போல செபமும் தபமும என்னும் அருட்கருத்தை தனது காட்சிகளின் போது அன்னை திரும்பத் திரும்ப வலியுறுத்தினார். இதையே எமது திருத்தந்தை தனது தலைமைப்பணியின் 25 ஆம் ஆண்டான இவ்வாண்டை திருச் செபமாலை ஆண்டாகப் பிரகடனப் படுத்தி ஒளிரும் தேவரகசியத்தை புதிய மறைபொருளாக அறிமுகப் படுத்திய வேளையில் வெளியிட்ட மடலில் மீண்டும் "மேல்மாடிக்கு" போக அதே அர்த்தத்தோடு அழை ப்புவிடுக்கிறார்.

இப்புதிய ஆலயம் எமக்கு "மேல்மாடி" அனுபவத்தைத் தரும் இடமாக அமையவேண்டும். சிறப்பாக எமது தலத்திருச்சபையின் வரலாற்றில் அன்னையின் பரிந்துரையை பல வேளைகளில் அனுபவித்திருக்கிறோம். எமது இரட்சணிய வரலாற்றில் அன்னை மரியாவோடு இணைந்து பயணிக்க அன்னையின் பரிந்துரையால் எமது விசுவாச வாழ்வு உயிரோட்டம் பெற ஆசிக்கிறேன்.

இந்த ஆலயத்தை நிர்மாணிக்க பணிபுரிந்த பங்குத் தந்தை அருட்திரு. எம். ஞானரெட்ணம் அவர் களையும், இதற்காக உழைத்த கட்டட நிபுணர்கள், தொழிலாளர்களையும் வாழ்த்தி இதற்கான நிதியை இங்கிருந்தும், வெளிநாட்டிலிருந்தும் நல்கிய அனைவருக்கும் எனது நன்றியையும், பாராட்டையும் தெரிவிக்கின்றேன்.

இறுதியாக இறை அர்ப்பணத் தோடும், பற்றுறுதியுடனும் பங்கேற் கும் திருச்சபையாக வாழும் அடை யாளமாக இப்புதிய ஆலயம் அமையவேண்டும் என ஆசித்து நிற்கிறேன்.. இறையருள் உங்களை வழிநடத்த எனது மன்றாட்டுகளில் பத்திமா அன்னையிடம் பரிந்துரைக் கிறேன்.

*(இறைபணியில் உங்கள் ஆயர் பேரருள் தோமஸ் சவுந்தரநாயகம்.*
*ஆயர் இல்லம்,யாழ்ப்பாணம்.)*

## இளையோரின் இதயங்களிலிருந்து...

**யாழ்.** மறைமாவட்டத்திலே பிரசித்தி வாய்ந்ததாக எண்ணப்படும் பண்டத்தரிப்புப் புனித பத்திமா அன்னையின் யாத்திரைத் தலத்திலே அன்னைக்கு எழில்மிகு ஆலயம் ஒன்றை எழுப்பி, நேர்ந்தளிக்கும் இன்னன்னாளில் அவரின் பக்தர்களுடன் இணைந்து எமது ஒன்றியத்தினரும் பெருமகிழ்வடைகின்றனர்.

எமது பங்கின் இளையோரின் சமூக, வாழ்வியல், மறைசார் உருவாக்கலில் முக்கிய பங்கு வகிக்கும் எமது ஒன்றியத்தின் பாதுகாவலியாக இருந்து எம்மை வழிநடத்தும் புனித பத்திமா அன்னைக்குப் புதியதோர் ஆலயம் எழுப்பியமையானது அவரின் பிள்ளைகளாகிய எம்மை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்துகிறது. யுத்த அபாயங்கள், அதனோடிணைந்த கெடுபிடிகள், சமூக, கலாசார சீர்கேடுகள், ஆன மீக வாழ்விற்கெதிரான அச்சுறுத்தல்கள் போன்ற ஆபத்துக்களில் இருந்து எம்பங்கின் இளை யோரைக காத்து இறைவனின் வழியில் செல்வதற்கு ஒளிகாட்டும் கலங்கரை விளக்கமாக இருப்பவர் எம் அன்பு அன்னை. எனவே அவருக்குப் புதியதோர் ஆலயம் அமைத்து, ஒன்றுகூடி அவரை மகிமைப்படுத்துவதானது எமது வேறுபாடுகளை மறந்து இறைவனுக்குகந்த வழியில் எமது இதயங்களைத் திருப்புவதற்கான ஒரு மார்க்கமாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

பலரது மனதிலே கருவாகிக் கனவான இவ் எண்ணத்திற்கு உருக்கொடுத்து நனவாக்கிய பெருமை எம் அன்புக்குரிய பங்குத்தந்தை அருட்திரு.ம.பெ.ஞானரத்தினம் அடிகளாரையே சாரும். இவ் ஆலய உருவாக கத்திற்காக அல்லும்பகலும் அரும்பாடுபட்டு நிதிதிரட்டி இவ் ஆலய கட்டுமானப் பணிகளை முன்னெடுத்த அவரின் முயற்சியானது எம் பங்கின் இளையோரால் மட்டுமன்றி அன்னையின் பக்தர்கள் அனைவராலும் என்றென்றும் நினைவு கூரப்படும். மேலும் இப் புனிதப் பணிக்குப் பல்வேறு வழிகளிலும் பங்களிப்புச் செய்த அனைவரையும் இளையோர் ஒன்றியத்தினராகிய நாம் நன்றியுடன் நினைக்கின்றோம். இளையோரின் இதயங்களிலிருந்து எழும் இன்ப ஸ்வரங்களால் அன்னையின் புகழ்பாடி அவரின் ஆசியை இறைஞ்சி நிற்கிறோம்.

*(கத்தோலிக்க இளைஞர் ஒன்றியத்தினர், பண்டத்தரிப்பு.)*

## பத்திமாத் தாய்

பத்திமாகிரி மீதினிலே
பதியமைத்துக் கொண்டவளே
விந்தை மிகு நின்னருளால்
நித்திலத்தைக் காப்பவளே
தேவ மைந்தன் தாயாகி
எம் அன்னையானவளே
புத்தம் புதுப் பதியமைத்தோம்
குடியிருந்து காத்திடம்மா
தஞ்சமென வருபவர்க்கு
நெஞ்சம் நிறைத்தனுப்பும் அம்மா.
கெஞ்சியுந்தன் பதம் பணிந்தோம்
எம்மை வழி நடத்துமம்மா
பஞ்சம் பசி நோய் பிணிகள்
நின்று எம்மைக் காருமம்மா
சொந்த மண்ணில் நிம்மதியாய்
வாழ வழி தந்திடம்மா
மண்ணுலக மாந்தருக்கு
சொந்தமென ஆனவளே
விண்ணுலகச் சேர்வதற்கு
உண்மை வழி தந்தவளே
மாற்றுமத நண்பருக்கும்
நிறையருளைப் பொழிபவளே
வேற்றுமைகள் ஏதுமின்றி
எமைப் காத்து நடத்திடம்மா
மூச் சிறுவர் முன்னுந்தன்
அருட்காட்சி தந்தவளே
மூவுலகும் போற்றுகின்ற
அருட் கன்னியானவளே
பூவுலகில் சமாதானம்
தோன்ற வழி சொன்னவளே
காரிருளைப் போக்கி எம்மை
காத்து அருள் பொழிந்திடம்மா.

-நாயகன்-


ஹென்றி ஜெலான் அடிகள்

இலங்கையில் போர்த்துக்கேயர் ஆட்சியின் கீழ் பல இடங்களிலும் கோட்டைகள், மாளிகைகள், வதி விடங்கள் அமைக் கப்பட்டது போல யாழ்.நகரில் இருந்து வடக்கே பத்து மைல் தொலைவில உள்ள பண்டத்த ரிப்பிலும் ஒரு போர்த்துக்கேய வதி விடம் இருந் ததாக நம்பப்படு கிறது. போர்த துக்கேய வதிவிடங்களின் முன்பாக போர்த்துக்கலிலிருந்து கொண்டு வரப்பட்ட மரங்களை நட்டு வளர்த்துப் பாதுகாத்தனர். அவ்விதம் அவர்களால் நாட்டப்பட்டதே இராசமுருக்கு மரம்.

போர்த்துக்கேயர், ஒல்லாந்தரால் கலைக்கப்பட்ட போது பண்டத்தரிப்பில் இருந்தோர் அவசரமாகத் தங்களிட மிருந்த பொன், வெள்ளி, நாணயங்கள், தங்கத்தகடுகள் போன்றவற்றை ஒல்லாந்தரிடமிருந்து காப்பாற்ற இராச முருக்கின் முன்பாக ஆழக்குழி பறித்துப் புதைத்தனர் என்றும் ஒல்லாந்தருடனான போரில் தோற்கடிக்கப்பட்டு கொல்லப்ப ட்டதால் பண்டத்தரிப்பில் போர்த்துக்கேயர் ஆட்சி முடிவடைந்தது என்றும் கூறப்படுகிறது.

எனினும் இப்பெரும் புதையல் பற்றிய கதைகட்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட வில்லை காலத்துக்கு காலம் இப்புதை யலை கைப்பற்றும்முகமாக மந்திரவாதி கள் பலர் பூசைகள் செய்து பேய்களை வரவழைத்து இப்புதையலைப்பெற முயற்சித்தமையால், இது பேய்கள் நிறைந்த இடமாக பண்டத்தரிப்பு மக்க ளால் அஞ்சப்பட்டது. பெற்றோர் தம் சிறுவாகளை இராசமுருக்கடிக்குச் செல்ல விடுவதில்லை.

போர்த்துக்கேய பத்திமா பகுதியில் 1917களில் தேவதாய் ஒரு கார்வ[illegible] மரத்தில் நின்ற வண்ணமே மூன்று சிறுவர்கட்கும் காட்சி தந்தார். இலங்கை யிலும் பத்திமா பகுதியைப் பரப்ப எண்ணிய பிரான்சு தேசத்தைச் சேர்ந்த கென்றி ஜெலான்ட் அடிகள் பண்டத்தரிப்பு பகுதியில் பங்குத் தந்தையாக நியமிக் கப்பட்டார். இராசமுருக்கு மரத்தைப் பார்க்கும் போதெல்லாம் அடிகட்கு பத்திமா பக்திக்கு அடித்தளம் அமைக்க இதுவே தகுதியான இடம் என்ற கருத்து உண்டானது.

ஆலய

எனவே 1945களில் அவர் இராசமுருக்கின் பக்கமாக உள்ள பற்றைக்காடுகள் காணிகளைப்பெற்று (பல காணிகள் உரிமை யாளரால் இலவசமாக அன்பளிப்பு செய்யப்பட்டன) ஒரு சிறுகுடிலில் கோவிலை ஆரம்பித்தார். இச்சிற்றாலய த்துக்கு மாசற்ற இருதய நாயகியின் பெயர் சூட்டப்பட்டது. இராச முருக்கு மரத்தின் பக்க மாக ஒரு பெரும் தூபி நிறுவப்பட்டு 1948 இல் அதன் உச்சியில் பத்திமா அன்னையின் அழகியதோர் சொரூபம் நிறுவப்பட்டது. இன்றும் அன்னையின் அருள் பாலிக்கும் அழகுவதனத்தை இராச முருக்கு தூபியின் உச்சியில் காணலாம். இச் சொரூபம் யாழ்நகரின் பிரபல்ய சிற்பியாய் இருந்த மனுவல் தம்பி அவாகளுல் உருவாககப்பட்டது. இவரே பத்திமா ஆலயத்துக்கு அண்மையில் உள்ள தியான


பழைய ஆலயத்தின் தோற்றம்

இல்லத்தின் சிற்றாலயத்தையும் வடிவுற அமைத்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இராசமுருக்கு மரத்தின் மீது பத்திமா சொரூபம் நிறுவப்பட்ட போது மறையுரை நிகழ்த்திய சூசைதாசன் நல்லையா அடிகள் கூறியது இராசமுருக்கு மரமே நீயே பாக்கியவதி ஏனெனில் பரலோக அரசி வரத்தடியாகி விட்டாய்.

பத்திமா பக்தியைப் பரப்ப "முதிர்ந்த இராசமுருக்கின் குரலொலி" என்ற திங்கள் ஏடு ஆரம்பிக்கப்பட்டது. சில வெளியீடுகளின் பின் பத்திமாகிரி என்ற பெயருடன் (இராசமுருக்கடிக்கு ஜெலான்ட் அடிகள் சூட்டிய பெயர்) வெளிவந்தது.

தொடர்ந்து 1948 இல் ஜெலான்ட் அடிகள் ஒருவருட விடுமுறை யில் தமது சுயதேசமாகிய பிரான்சுக்கு சென்றார். மீண்டும் வரும்போது போர்த்துக்கல் சென்று பத்திமா மாதாவின் ஆளுயரமான சொருபம் ஒன்றைக் கொண்டு வந்தார். இச்சொருபம் பத்திமா 2ஆம் காட்சியில் தேவதாய் தமது மாசற்ற இருதயத்தைக் காட்டிய தோற்றமாக அமைந்திருந்தது. மரியன்னையின் இருதயத்தைச் சுற்றி கூரிய முட்கள் காணப்படுகின்றன.

வண.ஜெலாண்ட் அடிகள் பிரான்சு தேசத்துக்குச் சென்ற பின் இலங்கை அரசு இலங்கையிலுள்ள வெளிநாட்டு மதபோதகர்களை இலங்கைப் பிரஜைகளாகப் பதிவுசெய்யும் சட்ட மொன்றைக் கொண்டு வந்தது. ஜெலான்ட் அடிகளின் பெயர் பதிவு செய்யப்படவில்லை. ஆகையால் அவர் பத்திமா சொருபத்துடன் கொழும்பு துறைமுகத்துக்கு கப்பலில் வந்துசேர்ந்தபோது சுங்க இலாகா அவரையும்


புனித பத்திமா அன்னையின் புதிய ஆலய நேர்ந்தளிப்பு விழாவில் கலந்துகொள்ளும் ப
வாழ்த்துகின்றோம். அன்னையின் பக்தர்கள் வாழ்வு சிறக்க அவருள்

நியூ லங்கா ரேடேர்ஸ்
222, ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம்.

Jaffna Ceramics
2C, ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம்.

நியூ கமல் செரமிக்ஸ்
37, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

தரன்ஸ் தொலைத் தொடர்பு சேவை
153, புன்னாலை வீதி,
மானிப்பாய்.

Jegatha Hardware
121, K.K.S. றோட்,
யாழ்ப்பாணம்.

லைடன்
நி
410, ஆ
யாழ்

# ...த்திமா அன்னை திருவிழா
# ...ந்தளிப்பு சிறப்பிதழ்

3-05-12

## ...ய வரலாறு

சொரூபத்தையும் இறங்க அனுமதிக்கவில்லை. எனவே அவர் கொழும்பு ஆயருடன் தொடர்பு கொள்ள அவர் யாழ் துணை ஆயர் எமில் ஆண்டகைக்கு அறிவித்தார். எமில் ஆண்டகை பிரதம மந்திரியுடன் தொடர்புகொள்ள அவர் தமது செயலருக்கு ஜெலான்ட் அடிகள் மூன்று நாள் தவணையில் யாழ். சென்றுவர அனுமதி அளிக்குமாறு உத்தரவிட்டார். எனவே ஜெலான்ட் அடிகள் பத்திமா சொரூபத்துடன் காங்கேசன்துறைக்கு ரயிலில் வந்திறங்க, அங்கிருந்து அன்னையின் பக்தர்கள் மாபெரும் பவனியாக பத்திமாகிரிக்கு சொரூபத்தைக் கொண்டு வந்தனர். இச் சொரூபம் பத்திமா சிற்றாலயத்தின் பிரதான பீடத்தின் மேல் நிறுவப்பட்டது. இன்றும் பக்தர்களின் இடர் தீர்த்து அருள் வரம் சுரக்கும் அன்னையாகக் காட்சி அளிக்கின்றாள். இதன் பின்னர் அடுத்த நாள் ஜெலான்ட் அடிகள் விமானத்தில் கொழும்பு சென்று தமது பிரஜா உரிமையைப் பதிந்து மீண்டார். அடிகள் பண்டத்தரிப்புப் பங்கில் பணியாற்றிய காலத்தி[ல்] அன்னையின் அருட் காட்சி பெற்ற [சிறு]வர்களில் ஒருவரான சிறுமி ஜசிந்தாவின் பெயரிலே ஆலயத்துக்கு அண்மையில் பாடசாலை ஒன்றையும் நிறுவினர். இதுவே தற்போது யா/பண்டத்தரிப்பு ஜசிந்தா றோ.க.த.க பாடசாலை எனப்படுகிறது. அன்னையின் பக்தரான வண.கென்றி ஜெலான்ட் அடிகள் 1954 இல் வேறிடத்துக்கு மாற்றப்பட்டதால் புதிய ஆலய அமைப்புப் பணிகள் பின் போடப்பட்டன. எனினும் அவர் தொடங்கிய மாசற்ற இருதய நாயகியின் நவநாள் முதற்சனிக்கிழமைப் பக்தி, வைகாசி, ஐப்பசி மாதங்களில் பத்திமா திருநாளகள் என்பன பின்னர் நியமனம் பெற்ற பங்குத் தந்தையர்களால் சிறப்புற நடத்தப்பட்டன.





ஆலயத்தின் புதிய தோற்றம்

ஆயினும் புதிய ஆலய நிர்மாணப் பணிகள் பல காரணிகளின் தாக்கத்தினால் தொடரப்பட்டாது கைவிட்ட நிலையில் இருந்தன. அன்னையின் அருளினால் அவரது மைந்தன் அருட்திரு ம.பெ.ஞானரத்தினம் அடிகள் பங்குத் தந்தையாக நியமிக்கப்பட்டார். இவரது பெரும் முயற்சியின் காரணமாக இன்றைய யாழ். ஆயர் பேரருள் திரு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையினால் 2000.12.17 புதிய ஆலயத்திற்கான அடிக்கல் நடப்பட்டது. அன்னையின் பக்தர்களின் அன்பளிப்புகளுடன் அருட்தந்தையின்அயராத உழைப்பின் மூலம், அன்னையின் ஆசீருடன் ஆலயப் பணிகள் முனனெடுக்கப்பட்டு இன்று சிறப்புடன் ஆலயம் மிளிர்கின்றது.





ம.பெ.ஞானரத்தினம் அடிகள்

*சாமுவேல் பெனடிக்ற்.*

...நம் பக்தர்கள்மீது அவரது அருளாசிகளை வேண்டி
...ருள் வேண்டி வாழ்த்துகின்றோம்.

## மன்னார் ஆயரின் ஆசிச்செய்தி

"அன்பே கடவுள்" என்பது உலக மறைகள் இறைவனுக்கு வகுக்கும் வரைவிலக்கணம். அந்தஇறைவனுக்கு மனிதவடிவம் கொடுத்த அன்னை மரியாவை எல்லா மக்களும் தாயெனப் போற்றி வருகின்றனர். அவர்களுடைய திருத்தலங்களை நாடி, ஓடிச்சென்று அவர்களைப் பற்றிப் பிடித்துத் தம் கவலைகளைப் போக்கிக்கெள்கின்றனர்.

உலகிலே சிறந்து பரந்து கிடக்கும் அன்னை மரியாவின் திருத்தலங்களில் ஒன்று போத்துக்கல் தேசத்திலே உள்ள பத்திமா அன்னையின் திருத்தலமாகும். இதிலே எம் தாய் மூன்று சிறுவர் கட்கு காட்சி தந்து இறை வேண்டலையும், தியாக வாழ்வையும் அடிப்படையாகக் கொண்ட ஆன்மீகத்தை அந்தக் காலத்திற்கு ஏற்ற இன்றியமையாத தேவையாக முன்வைத்தார்கள்.

இந்த உயர் செய்திக்கு வட இலங்கையில் உருவம் கொடுக்க நம் முன்னோர் செய்த முயற்சிதான் பண்டத்தரிப்பு பத்திமாகிரி. இந்தப் புனித தலம் இன்று பல ஆண்டுகளின் எதிர்பார்ப்பை நிறைவடையச் செய்த ஒரு வடிவுடை அருள் ஆலயமாகக் காட்சியளிக்கிறது. இந்த ஆலயத்தை ஆசீர்வதித்து மக்கள் வழிபாட்டிற்காக பத்திமா அன்னையின் அற்புத திருச்சொரூபத்தை இங்கு அரங்கேற்றம் செய்யும் நல்ல நாளிலே மன்னார் மறை மாவட்டத்தின் குருக்கள், துறவிகள், இறை மக்கள் பெயரால் எமது நல் வாழ்த்துக்களை யாழ். ஆயருக்கும் இறை மக்களுக்கும் தெரிவித்துக் கொள்கிறோம். இந்தப் பாரிய வேலையை தளம்பாத நிறைகுடம் போல் நின்று செய்து முடித்த பங்குத் தந்தை ஞானரெட்ணம் அடிகளாருக்கு எமது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம். பத்திமா அன்னை இங்கு பள்ளி கொண்டு தம்மை நாடிவரும் அனைவருக்கும் அருள்பாலிப்பார்களாக.

*(அன்புடன்மன்னார் ஆயர். இராயப்பு யோசவ்)*

## பணிக்களத்து அருட்தந்தை இதயம் நல்கும் .....

பணி வாழ்வில் புனித பத்திமா அன்ன்னயின் பணித்தளம் கிடைத்தமையை பெரும் பேறாகக் கருதி நிற்கும் நான், இப் புதிய ஆலய நேர்ந்தளிப் பின் மூலம் அன்னையின் அருள் ஆசிகளையும் அவளது பரிந்துரையையும், அவரது பத்தர்களாகிய உங்கள் மேல் ஆசித்து நிற்கிறேன். இச் சந்தர்ப்பத்தில் மரியன்னையின் பத்தியை என்னுள் ஊட்டி இறையனுபவத்தில் வழிநடத்திய எனது அன்னையை நினைவு கூர்கிறேன். பயணிக்கும் திருச்சபையின் பயணத்தில் ஒன்றிணைந்து நிற்கும் மரியாவின் மகத்துவத்தைப் பறைசாற்றும் ஒரு சான்றாக மிளிரும் இப் புனித தலத்தின் புதிய ஆலயம் இன்று சிறப்புற மிளிர்கின்றது என்றால் அன்னையின் பரிந்துரையும் . ஆசீரும் உந்து சக்தியாக நின்று எத்தகைய தடைக்கல்லையும் தாண்ட உதவியமையே காரணமாகும். இப் புனித பணி சிறப்புற நிறைவேற நிதி உதவி வழங்கிய அன்னையின் பக்தர்களையும், நிர்மாணப் பணியில் உதவிய கட்டட நிபுணர்கள், தொழிலாளர்களையும், பல்வேறு வழிகளிலும் உதவி புரிந்த அனைத்து உள்ளங்களையும் நன்றியுடன் நினைவு கூர்ந்து அனைவர் மேலும் அன்னையின் பரிந்துரைகளையும் வேண்டி நிற்கின்றேன்.

*பணிவாழ்வில்அருட்திரு. ம. பெ. ஞானரத்தினம். பங்குப்பணிமனை,பண்டத்தரிப்பு*

## பாடசாலைச் சமூகத்திடமிருந்து...

எமது பாடசாலையின் நிறுவுநரான அருட்திரு. கென்றி ஜெலான்ட் அடிகளினால் சிற்றாலயமாக அமைக்கப்பட்ட புனித. பத்திமா அன்னையின் யாத்திரைத்தலம் இன்று புத்தெழில் துலங்கப் பேராலயமாக மிளிர்ந்து கொண்டிருப்பதையிட்டு அன்னையின் பக்தர்களுடன் இணைந்து நாமும் பேரானந்தம் கொளகிறோம். அன்னையின் புகழ்பாடும் பக்தர்கள் அனைவர் மேலும் அவரது ஆசீரை வேண்டிநிற்கிறோம்.

இப்புதிய ஆலய நிர்மாணப்பணியில் எவ்வித இடர்களையும் இறையாசியுடன், அன்னையின் அருட்கரத்தின் வழிநடத்தலுடன் வெற்றிபெற்ற பண்டத்தரிப்புப் பங்குத் தந்தை அருட்திரு.ம.பெ. ஞானரத்தினம் அவர்களை வாழ்த்துவதுடன், அவர்பணி சிறந்து மக்களின் ஆன்மீக, சமூக வாழ்வு சிறக்க மேன்மேலும் உழைத்திட அன்னை வழியாக இறையாசி வேண்டி நிற்கிறோம்.

*கல்விச் சமூகம் யா/பண்டத்தரிப்பு.ஜசிந்தா றோ. க. வி.*

## மறைக்கோட்ட முதல்வரின் வாழ்த்து

அபாயங்கள் அவனியைச் சூழ்ந்தபோதெல்லாம் அன்னை மரியின் அருட்கரம் அவள் தம் மக்களை அரவணைக்கத்தவறியதில்லை. அன்று இரண்டாம் உலக யுத்தத்தின்போது அன்னையின் தரிசனம் யுத்தத்தை முடிவுக்குக்கொண்டுவரத் தூண்டியதுபோன்று, இன்று அமெரிக்கா, இந்தியா மற்றும் நாடுகளிற்கிடையில் நிகழும் ஆதிக்க ஆக்கிரமிப்புப் போக்கைப் பயன்படுத்தி இலங்கை அரசாங்கமும் ஓர் இன மக்களை நசுக்கவும், அடிமைப்படுத்தவும், ஆக்கிரமிக்கவும் நடத்தப்படும் போராட்டம் முடிவுக்குக் கொண்டுவரப்பட தினமும் பத்திமா அன்னையின் பாதம் பணிவோம்.

1917ஆம் ஆண்டு ஒக்ரோபர் 13ஆம் திகதி கோவா-தா-ஈரியாவின் தமது ஆறாவது தரிசனத்தின் போது லூசியா அன்னையிடம் நீங்கள் யார்? உங்களிற்கு என்ன வேண்டும்? என்று கேட்டபோது, "நாமே செபமாலை மாதா நமது பெயரால் அங்கு ஓர் ஆலயம் கட்டவேண்டும். தவறாது செபமாலை செபியுங்கள்" என மொழிந்த லூர்து அன்னைக்கு இளவாலை மறைக்கோட்டத்தால் பண்டத்தரிப்பில் எழுப்பப்பட்டுள்ள இப்புதிய ஆலயத்தின் திறப்பு விழாவானது முதல்முறை அன்னை காட்சி கொடுத்த மே 13 உடன் ஆரம்பிக்கப்படுவது இச்செபமாலை ஆண்டில் ஒரு புதுமை நிறைந்த நிகழ்வே ஆகும்.

இன்றைய எமது நாட்டின் சூழ்நிலையில் அன்று அன்னை தொடர்ச்சியாகக் காட்சிகள் கொடுத்து போர் முடிவு பெறவும் சமாதானம் பிறக்கவும் மன்றாடுங்கள் என்று விடுத்த அழைப்பைப் போன்று இச்செபமாலை ஆண்டில் எதிர்வரும் ஒக்ரோபர் 13இல் திருநாளைக் கொண்டாடும் போது இந்நாள்களில் தினமும் செபமாலை சொல்லி அன்னையினுடைய பரிந்துரையாலும் திருச்சபையின் தலைவர் இரண்டாம் அருளப்பர் சின்னப்பரின் வேண்டுதலாலும் உலகிலும் சிறப்பாக எமது நாட்டிலும் உண்மைச் சமாதானம் பிறக்கச் செபிப்போம்.

இளவாலை மறைக்கோட்டத்தில் இச்செபமாலை ஆண்டில் ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் அவர்களின் ஆட்சிக்காலத்தில் பங்குத்தந்தை அருட்திரு M.B.ஞானரட்ணம் அவர்களின் தலைமையில் பண்டத்தரிப்பு பத்திமா அன்னையின் இப்புதிய ஆலயம் இவ்வளவு சிறப்பாகவும், துரிதமாகவும் கட்டி எழுப்பப்பட்டது ஒரு சரித்திர நிகழ்வாகும். இவ்வாலயத்தின் அமைப்புக்குதவிய அனைவருக்கும் நன்றி கூறுவதுடன் ஆலயத்தின் திறப்பு விழாவாகிய இன்று 12.05.2003 இல் ஆசிச்செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

*அருட்தந்தை B.F.பொனிபஸ், மறைக்கோட்ட முதல்வர், இளவாலை.*

**ஜெயா வைண்டிங் வேக்ஸ்**
54, மணிக்கூட்டு நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

...லடன் புடவை
நிலையம்
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

**வேல்முருகன்
வணிக நிலையம்**
56A, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

**துஷா ஒப்ரிசன்ஸ்**
544, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

**அன்னை மரக்காலை**
ஆரியக்குளம் சந்தி,
யாழ்ப்பாணம்.

With the best compliments from
"The partner in your career development"
**Career.Com Institute**
No.79, Main Street,
Jaffna.

# வீட்டுக்கிருத்திய அழைப்பு



14-04-2003 அன்று சிவபதமடைந்த
திருமதி
**இரத்தினம் செல்லத்துரை**
(இளைப்பாறிய ஆசிரியை)
அவர்களின்

வீட்டுக்கிருத்தியமும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் 14-05-2003 புதன்கிழமை அப்பிளானை, கோப்பாய் வடக்கில் அமைந்துள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இதில் பங்குகொண்டு, அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு, மதிய போசனத்திலும் பங்குகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*அப்பிளானை,*
*கோப்பாய் வடக்கு.* (17807) குடும்பத்தினர்.

# 41ஆம் நாள் நினைவஞ்சலி

பூசிக்கும் பணிக்கு
02 - 04 - 1926



அவன் பாதத்தில்
02 - 04 - 2003

## சின்னவன் கதிரன்

(ஓய்வு பெற்ற ஊழியர், யா/தெல்லிப்பழை யூனியன் கல்லூரி)


அகர முதல்வனைப் பூசித்தாயே
அன்புடன் எம்மை அரவணைத்தாயே
ஜலத்தில் நின்று ஜமனுடனே
ஞாலத்தை விட்டுச் சென்றாயே!

எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு, இன்று (12. 05. 2003) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*சிந்தியம்புளியடி,*
*தெல்லிப்பழை.* (17661) குடும்பத்தினர்.

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு
1972 - 04 - 28



உதிர்வு
2003 - 04 - 12

## பவுலீனப்பு ஜோஜ்வின்சன் (சுரேஸ்)

எம் அன்புச் செல்வமே!
எம் குலவிளக்கே!
நீர் பிரியும் நேரம் வந்தது - தெரிந்துதானோ
உன் உறவுகளை காணத்துடித்தாய்
ஆசையோடு உன் உறவுகளைத் தேடி ஓடிவந்தாய்
உத்தமனே உன் உறவுகளை
ஆவலோடு பார்த்து அன்பாகவும் பண்பாகவும் பழகிவிட்டு
திருத்தலம் சென்று வருகிறேன் - என்று
விடை கூறிவிட்டு சென்றாயே
நீ வருவாய் வருவாய் என எதிர்பார்த்த - எமக்கு
நீ எம்மைவிட்டு நிரந்தரமாகப் பிரிந்து
விண்ணிற்கு சென்றுவிட்டாய் - என்பதை
எப்படித் தாங்கமுடியும்
உனக்கு அன்னமூட்டி அரவணைத்த - அன்னையும்
அறிவுரை கூறி அன்பு காட்டிய பிதாவும்
உன் உடன்பிறந்த சகோதரர்களும்
ஒவ்வொருநாளும் தவியாய் தவிக்கின்றோம்
எப்படி ஐயா உம் அழகு வதனத்தை மறப்பது?
*உம் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

*செம்பியன்பற்று வடக்கு,*
*செம்பியன்பற்று.* (17693) - குடும்பத்தினர்.

## நடமாடும் சேவை தினங்களில் மாற்றங்கள்!

தென்மராட்சி,மே12

தென்மராட்சி பிரதேச செயலகத்தினால் கொடிகாமத்தில் நடத்தப்படும் நடமாடும் சேவை தினங்கள் எதிர்வரும் ஜுன் மாதம் தொடக்கம் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மாதத்தின் முதலாம், நான்காம் செவ்வாய்க்கிழமைகளில் இந்த நடமாடும் சேவை அலுவலகம் இடம்பெறுமென பிரதேச செயலர் க.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

தற்போது மாதத்தின் இரண்டாம், நான்காம் செவ்வாய்க்கிழமைகளில் இந்த நடமாடும் சேவை நடத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

(ம-117)

## கழிவுநீர் வடிகாலினுள் வீழ்ந்து படுகாயம்!

யாழ்ப்பாணம்,மே12

இரவுவேளை வேலை முடிந்து சைக்கிளில் வீடு திரும்பிய ஒருவர் கழிவுநீர் வடிகாலினுள் வீழ்ந்து தலையில் படுகாயமடைந்தார்.

யாழ்ப்பாணம், ஆஸ்பத்திரி வீதிச் சந்திக்கு அண்மையில் கடந்த வியாழனன்று இரவு இடம்பெற்ற இச்சம்பவத்தில் குருநகரைச் சேர்ந்த ஸ்ரனிஸ்ரலாஸ் யேசுதாஸ் (வயது 53) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

படுகாயமடைந்தவர் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (எ-15)

## கசிப்பு காய்ச்சியோர் அகப்பட்டனர்!

யாழ்ப்பாணம்,மே.12

நாவாந்துறைப் பகுதியில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டு வந்த இருவர் நேற்றுமுன்தினம் அப்பகுதி கிராம சேவையாளர் மற்றும் மதுவரித் திணைக்கள உத்தியோகத்தர்களினால் கையும் மெய்யுமாகப் பிடிக்கப்பட்டனர்.

இவர்களிடம் இருந்து 10 லீற்றறிற்கு மேற்பட்ட கசிப்பு கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டது.

நாவாந்துறை ஜே-88 கிராம சேவகர் பிரிவைச் சேர்ந்த பூ.ரவீந்திரன், வே.இம்மானுவேல் ஆகியோரிடம் இருந்தே மேற்படி கசிப்பு கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர். (ம-8)

## தொல்புரம் ஆஸ்பத்திரி மூன்று தினங்கள் இயங்கும்

சண்டிலிப்பாய்,மே.12

தொல்புரம் அரசினர் வைத்தியசாலை வாரத்தில் மூன்று தினங்கள் இயங்கி வருகின்றது.

இங்குள்ள வைத்தியசாலை பொறுப்பதிகாரியான டாக்டர் கோப்பாய் அரசினர் வைத்தியசாலையில் பதில் கடமை புரிவதற்காக வாரத்தில் திங்கள், புதன், வெள்ளி ஆகிய தினங்களில் செல்வதால் இந்த நிலை ஏற்பட்டுள்ளது. (எ-135)

### சாரதி தேவை

ஹைறயஸ் வானுக்கு சாரதி தேவை.
உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.
**0776 048851**
(17818)

### வைத்தியம்

செங்கண்மாரி, அல்சர்,
ஆஸ்துமா, வாதநோய்கள்,
வலிப்பு நோய், பீனிசம்,
தலையிடி,
தலைகால் அவியல்,
சருமநோய்கள்,
மாதவிடாய்க்குத்து,
இரத்தப்போக்கு,
வெள்ளைக்கசிவு,
கருவழிதல்,
மகப்பேறின்மை,
குழந்தை வைத்தியம்,
வீரியக்குறைவு,
மூலவியாதிகள்,
மூத்திரரோகங்களில்
பிரபல்யமானவர்.
சகல வியாதிகளையும்
குணப்படுத்துபவர்:
வேலணை வைத்திய கலாநிதி
**சி.இராசரத்தினம்**
121, 2ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி எண் : 2450

## இதோ!

சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட இருமல் நிவாரணி: தீராத இருமல், சளி, இளைப்பு மற்றும் நுரையீரல், சுவாச நாளங்களில் உண்டாகும் சளி நோய்கள், தொண்டையில் ஏற்படும் நமைச்சல் ஆகிய நோய்களை விரைவில் குணமாக்கும் அதியற்புத தேசிய ஔஷதம்

**சித்தாரா பனங் கற்கண்டு இருமல் பாணி**

Manu factured By
SITHARA PRODUCTS
Puttalam Road, Chilaw.
(Reg.No:-6382) AR/PR/No:228

யாழ்.மாவட்ட ஏகவிநியோகஸ்தர்:-
சிவா நறுமணப் பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.இல.: 021 - 222 - 2567

(குறிப்பு:- சத்திரச் சந்திக்கு அண்மையில்) (சி-27488)

உ
ஐங்கரன் துணை



கோண்டாவில் கிழக்கு
ஆசிமட அரசடி விநாயகர் ஆலயம்
சுபானு வருட தசமதின

## இலக்ஷார்ச்சனை விஞ்ஞாபனம்

**ஆரம்பம்: 12.05.2003 - பூர்த்தி: 21-05-2003**

ஐங்கரன் அடியார்களே!

நிகழும் மங்களகரமான விஷு வருஷம் சித்திரை மாதம் 29ஆம் நாள் (12.05.2003) திங்கட்கிழமை சித்திரை மாத உத்தர நட்சத்திரத்தில் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெற்று 21.05.2003 புதன்கிழமை காலை 1008 சங்காபிஷேகமும் மாலை இலட்ச நாமம் பூர்த்தியும் பஞ்சமுக விநாயகப் பெருமான் திருவீதி உலா வரும் காட்சியும் நடைபெறும். அடியார்கள் அர்ச்சனைக்குத் தேவையான வில்வம், பூக்கள், அறுகு மற்றும் திரவியங்களை மனமுவந்து கொடுத்து விநாயகனின் பேரருளுக்குப் பாத்திரமாவீர்கள்.

**10 தினமும் மாலை 5.00 மணிக்கு அர்ச்சனை ஆரம்பமாகும்.**

கிரியைகள் யாவும் ஆலய பிரதமகுரு
**வேதாகம கிரியாஜோதி சிவஸ்ரீ ந.சபாரத்தினக் குருக்கள்**
அவர்கள் தலைமையில் நடைபெறும்.
அனைவரும் வருக! பஞ்சமுக விநாயகன் திருவருளைப் பெறுக!

*விஞ்ஞாபனம் சிறப்புற வாழ்த்துவவர்:*
**BAMINI ENGINEERS & CONTRACTORS**
**KONDAVIL EAST KONDAVIL.** (17828)

ஆலய நம்பிக்கை
பொறுப்பாளர் சபை.

# யாழ்.மாவட்ட சித்த மருந்துகள் உற்பத்தி, விற்பனவு வைத்திய சேவைக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

## பதவி வெற்றிடம்

கீழ்குறிப்பிட்ட பதவிகளுக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப்படிவத்தையும் மேலதிக விவரத்தையும் சங்கத்தின் கடமை நேரத்தில் பெற்றுக்கொள்ளவும்.

**1. கணக்குப் பதிவாளர் பதவி - 301/11**

தகைமைகள்:-

(அ) கூட்டுறவுப் பணியாளர் 12ஆவது சம்பளத்திட்டத்தில் கணக்குப் பதிவு/ எழுதுவினைஞர் பதவி ஒன்றில் 02வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.
கூட்டுறவுப் பணியாளர் அல்லது 13ஆவது சம்பளத் திட்டத்தில் எழுதுவினைஞர் பதவியொன்றில் 04வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

அல்லது

(ஆ) ஐக்கிய இராட்சிய கணக்குப்பதிவாளர் நிறுவனத்தின் மத்திய பரீட்சையின் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக் கைத்தொழில் நிறுவனம் ஒன்றின் கணக்கியல் தொடர்பில் 02வருடத்துக்கு குறையாத அனுபவம்.

அல்லது

(இ) கூட்டுறவுப் பயிற்சி உயர்தர சான்றிதழ் அல்லது க.பொ.த.உயர்தர கணக்கியல் உட்பட 03பாடங்களில் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தகக் கைத்தொழில் நிறுவனமொன்றில் கணக்கு அலுவல்கள் பற்றிய 02வருடத்திற்குக் குறையாத அனுபவம்.

சம்பளத்திட்டம் :- 4500 - 6400 / 90 x 10 - 100 x 100 — 31/99 சுற்று நிருபப் படி

**2. காவலாளி பதவி - 315/17**

தகைமை:-

(அ) கூட்டுறவுப் பணியாளர் 15ஆவது சம்பளத் திட்டத்தில் 01வருடத்திற்கு குறையாத அனுபவம்.

அல்லது

(ஆ) 05ஆம் ஆண்டு சித்தியுடன் நல்ல தேகாரோக்கியம் உடையவராக இருத்தல் வேண்டும்.

சம்பளத்திட்டம் :- 3000 - 4150 / 55 x 10 - 60 x 10 — 31/99 சுற்று நிருபப் படி

**வயதெல்லை :-** மேற்குறித்த இரு பதவிகளுக்குமான வயதெல்லை 25-45வரை (கூட்டுறவுச் சங்கத்தில் பணிபுரிபவர்களுக்கு வயதெல்லை கணிக்கப்பட மாட்டாது) அத்துடன் கூட்டுறவுச் சங்க பணியாளர்கள் தமது விண்ணப்பத்தைத் தாம் கடமை புரியும் நிறுவனம் ஊடாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 31. 05. 2003ஆம் திகதி அன்று அல்லது அதற்கு முன்பு கிடைக்கக்கூடியதாக, *'தலைவர், யாழ். மாவட்ட சித்த மருந்துகள் உற்பத்தி, விற்பனவு வைத்திய சேவைக் கூட்டுறவுச் சங்கம், செம்பியன் லேன், கொக்குவில் கிழக்கு, கொக்குவில்'* என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலமோ அல்லது நேரடியாகவோ அனுப்பப்படல் வேண்டும்.

*செம்பியன் லேன்,*
*கொக்குவில் கிழக்கு,*
*கொக்குவில்.*

தலைவர்,
யாழ்.மாவட்ட சித்த மருந்துகள்
உற்பத்தி விற்பனவு வைத்திய
சேவை கூட்டுறவுச் சங்கம்.

# சிந்துவெளி முதல்... கந்தரோடை வரை...!

## ஒரு கலைப்பார்வை

சத்தியசீலன் ஜெயவாணி

உ சுண்ணாம்புக் கல்லினால் செய்யப்பட்ட ஆண் மகனுடைய சிலை ஒன்று சிறந்த கலைப் பண்புடையதாகக் காட்சி அளிக்கிறது. இதனை 'யோகியின் உருவம்' என்று அறிஞர் கருதுகின்றனர். இந்த உருவமானது சித்திரத் தையலைக்



வெண்கல நடனமாது

கொண்ட போர்வை ஒன்றை போர்த்தி இருப்பதை காணலாம். இப்போர்வையில் உள்ள மூன்று இலைவடிவமான சித்திரமானது அக்காலத்தில் இருந்த கலை வடிவங்களில் முக்கிய இடத்தைப் பெற்றிருக்கலாம் ஏனெனில் மண்பாண்டங்களிலும் இவ்வகை ஓவியங்களைக் காணமுடிகிறது.

ஓவியங்கள் வரைவதிலே சிந்துவெளிமக்களுக்குப் பெரும் ஆர்வம் இருந்ததை சிந்துவெளியில் அவர்கள் அன்றாட வாழ்க்கையில் பயன்படுத்திய மண்பாண்டங்கள் பெரும்பாலும் நிறங்கள் பூசப்பட்டு இருந்ததோடு அவற்றிலேயே பல ஓவிங்களும் வரையப்பட்டிருப்பதையும் காணலாம். ஓவியங்களைத் தீட்டுவதற்கு முன்பு அதற்கேற்ற நல்லதொரு பின்னணியைத் தீட்டி அதன் பிறகு பறவைகள், மயில்கள், மான்கள், ஆடுகள், எருமைகள், மீன்கள், பாம்புகள், இலைக்கொத்துகள், மலர்கள், முதலிய அழகிய ஓவியங்களைத் தீட்டி உள்ளனர்.

இவை மட்டுமல்லாமல் சீற்று ஓவியங்களாக பலவகையான மரங்கள், வட்டங்கள், முக்கோணங்கள், சதுரமான கட்டங்கள் முதலியவற்றையும் செம்மையாக வரைந்துள்ளார்கள். இவர்கள் வரைந்த ஓவியங்கள் புனையா ஓவியங்களாகக் காட்சி அளிக்கின்றன. சிந்துவெளி மண்பாண்டங்களில் காணப்படும் ஓவியங்கள் அக்கால மக்களின் மன நிலையையும் நாகரிகச் சிறப்பையும் தெளிவாக உணர்த்துகின்றன. இந்த ஓவியங்கள் மூலம் இந்துநதிப் பள்ளத்தாக்கில் நிலவி இருந்த ஓவிய கலை மரபை அறியமுடிகிறது.

இதுதவிர இலச்சினைகளில் காணப்படும் புடைப்புச் சிற்பங்களாவன அக்கால கலைவடிவங்ககளில் முக்கிய சிறப்பிடம் பெறுவதைக் காணலாம். இந்தப் புடைப்புச் சிற்பங்களாக எருது, மரம், மனிதன், மனிதன்-மிருகம், ஆகிய உருவங்கள் வரையப்பட்டிருப்பதுடன் இவை மெய்த்தன்மையையும், உயிர்த்தன்மையையும் கொண்டு விளங்குகின்றன. அத்துடன் இந்த ஓவியங்கள் அக்காலத்தில் நிலவிய கலை மரபையும் எடுத்துக்காட்டுகின்றன.



ஹரப்பா பண்பாட்டுக் குரங்கு

வெண்கலத்தாலான ஆடல் மகளின் உருவம் இக்கால கலை வடிவங்களில் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். இந்த ஆடல் மாதுவின் இடது கை முழுவ




கொம்பு மனிதனும் கொம்புப் புலியும்

தும் வளையல்கள் காணப்படுவதும், கழுத்தில் மாலை அணிந்திருப்பதும் தலைமுடியை சிக்கலான முறையில் ஒப்பனை செய்திருப்பதும் அக்கால அழகியற் கலைநயத்தை வெளிப்படுத்துகிறது. இந்த வெண்கலச் சிலையும், சிவபெருமானின் திருநடனக் காட்சியை சித்தரிப்பது போன்ற சிலையும இந்துவெளி மக்களின் நடனக் கலைக்குச் சான்றாகும்.

இதைவிட சிறியவர்கள் விளையாடுவதற்கு ஏற்ற விதத்தில் சிறிய அளவிலான விளையாட்டுப் பொம்மைகள செய்யப்பட்டிருப்பதை காணலாம் மற்றும் தாயத்துக்களில் செய்யப்பட்டுள்ள சிறு செதுக்கு வேலைப்பாடுகள் பார்ப்பவரைக் கவரும் வகையில் காணப்படுகிறது. இவற்றில் காணப்படும் அணில்கள் முன்னங்கால்களால் எதையோ வைத்துக் கடித்துக்கொண்டிக்கும் காட்சியும், சிறு குரங்குகள் கவலை தோய்ந்த முகத்துடன் சிந்தனையில் ஆழ்ந்திருக்கும் நிலையும் காண்பவருடைய உள்ளத்தைக் கவரத்தக்கதாக அமைந்துள்ளது.

இவை எல்லாவற்றையும் விட கண்டு வியப்பதற்குரியது என்னவென்றால் ஒரு சிறு செபமணியில் மூன்று குரங்குகள் வட்டமாக உட்கார்ந்து ஒன்றின் இடுப்பை இன்னொன்று தன் கைகளால் தழுவிக் கொண்டுள்ளதைப் போன்று செதுக்கப்பட்டுள்ளமையாகும். அகழ்வாரய்ச்சியின்போது கிடைத்த முண்டம் தலை, கை, கால், உடல், ஆகிய உறுப்புக்கள் தனித்தனியே செய்யப்பட்டிருப்பதை உணர்த்துகிறது. அவற்றை இணைப்பதற்கு ஏற்றவாறு அவ்வுறுப்புக்களில் துளைகள் காணப்படுவதும் நோக்கத்தக்கது. ஒவ்வொரு உறுப்பினையும் உரிய இடத்தில் பொருத்தி இணைத்துவிட்டால் முழுச் சிலையாகத் தோற்றமளிக்கும். இவ்வாறு கற்களில் இணைப்பு வேலையைச் செய்து சிலைகள் செய்யும் வழக்கம் தொல் பழங்காலத்தில் வேறு எந்த நாகிரிகங்களிலும் இருந்ததாகத் தெரியவில்லை.



ஹரப்பா - முண்டம்

அங்கு கிடைத்த மூன்று கொம்புடைய கடவுளின் உருவம் சிறப்புக்குரியதாகும். இக்காலத்து இலச்சினையாக இருக்கும் இந்தக் கடவுள் புடைப்புச் சிற்பமாக காணப்படுவதுடன் கடவுளைச் சுற்றி எருது, மான், புலி, யானை, போன்ற மிருகங்கள் சூழ்ந்திருப்பது வியக்கத்தக்கதாகும்.

இந்த விலங்குகள் சுற்றி இருப்பதனால் ஆன்மாவாகிய பசுக்களுக்கெல்லாம் பதியாக (தலைவனாக) இருப்பதால் இக்கடவுளை "பசுபதி" எனவும் இந்நாளில் அழைப்பதுண்டு. இதுமட்டு மல்லாமல் தலையில் மூனறு கொம்பு போல் காணப்படுவது பிரம்மா, விஷ்ணு, உருத்திரனை



திமிற் காளை

குறிப்பதாகவும் இலக்கிய ஐதீகம் உணடு. இதனால் பிற்காலத்தில் மும்மூர்த்தி வழிபாடு வந்திருக்கலாம் என ஊகிக்கப்படுகிறது. சிந்துவெளியில் எந்தச் சமயம் இருந்த தென்பது சரியாக புலனாகாவிடினும் இங்கு இந்து சமயமும் திகழ்ந்துள்ளது என்பதற்கு ஆதாரமாக இக்கடவுளின் உருவம் எடுத்துக்கூறப்படுகிறது.

(வளரும்)

கலைச்சுடர்
தயாரிப்பு:-சத்தியன்


சனிக்கிழமை அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்
செல்லுபடியாகும் டிக்கட் தொடர் இல. 3619432 இருந்து 3635991 வரை
சீட்டிழுப்பு இல. 1399
திகதி 10.05.2003

வெற்றி எண்கள்
25 34 35 45 57
போனஸ் எண்
31

ஜக்பொட் பரிசு
ரூபா.1,500,000/- வெல்லப்படவில்லை

| பொருந்திய எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத்தொகை | தொகை |
|---|---|---|---|
| 5 | - | 1,500,000/- | - |
| 4 எண்களுடன் போனஸ் எண் | 01 | 100,000/- | 100,000/- |
| 4 | 98 | 10,000/- | 980,000/- |
| 3 | 5,187 | 500/- | 2,593,500/- |
| 2 | 86,092 | 20/- | 1,721,840/- |
| சீட்டிழுப்பில் ஆகக்குறைந்த 25ம் எண் (போனஸ் எண் தவிர்த்து) | 105,450 | 10/- | 1,054,500/- |

வெல்லப்பட்ட மொத்த தொகை ரூபா.6,449,840/-

இந்த புதன்கிழமைக்கான ஜக்பொட்
ரூபா. 2,314,300/-

தொடர் இல. 2636756க்கு மேற்பட்ட ஊதா நிற டிக்கட்டுகள் 2003 மே 14ம் திகதி புதன்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிக்கிழமை அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் தங்கப்பரிசு வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்
3631857-3-51
3635500-8-22
3628021-6-68
3626005-6-90
3622933-8-12

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி, கொழும்பு 3.
யாழ்ப்பாணத்தில் : விநியோகஸ்தர், 34, கந்தப்பசேகரம் வீதி, (பஸ் நிலையம் முன்பாக), யாழ்ப்பாணம்.



அபிவிருத்தி அதிர்ஷ்டம்

| | |
|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 472 |
| திகதி | 09.05.2003 |

டிக்கட்டின் நிறம் - சிவப்பு
செல்லுபடியாகும் தொடர் இல. 5899633-5912872

வெற்றி இலக்கங்கள்
17 36 38 53
லக்கினம்
கும்பம்
ஜக்பொட் பரிசு ரூபா. 1,669,000/- வெல்லப்பட்டது.

இந்த செவ்வாய்க்கிழமைக்கான ஜக்பொட் ரூபா 1,000,000/-

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரு.) | மொத்தப் பரிசுத் தொகை(ரு.) |
|---|---|---|---|
| 1 இல | 289,286 | 10 | 2,892,860 |
| 2 இலக்கங்கள் | 26,529 | 20 | 530,580 |
| 1 இல + லக்கினம் | 26,262 | 30 | 787,860 |
| 2 இல + லக்கினம் | 2,420 | 100 | 242,000 |
| 3 இலக்கங்கள் | 714 | 500 | 357,000 |
| 3 இல + லக்கினம் | 69 | 5,000 | 345,000 |
| 4 இலக்கங்கள் | 03 | 100,000 | 300,000 |
| 4 இல + லக்கினம் | 01 | 1,669,000 | 1,669,000 |
| மொத்தம் | 345,284 | - | 7,124,300 |

மொத்தப் பரிசுத் தொகை ரூபா. 7,124,300/-

தொடர் இல. 4917903க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுகள் 2003 மே 13ம் திகதி செவ்வாய்க்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்
5902970-8-07
5901063-8-93
5899730-2-84
5908573-0-93
5900484-8-93

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.
யாழ்ப்பாணத்தில் : விநியோகஸ்தர், 34, கந்தப்பசேகரம் வீதி, (பஸ் நிலையம் முன்பாக), யாழ்ப்பாணம்.

## சின்னஞ்சிறு விளம்பரம்

### புலமைப் பரிசில் பரீட்சை - 2003

மேற்படி புலமைப்பரிசில் பரீட்சைக்கான புதிய பாடத்திட்டத்திற்கான 10 மாதிரி வினாத்தாள்களுடன் விடைகளும் உள்ளடக்கியதாக வெளிவந்துள்ளன. பிரபல புத்தகசாலைகளில் பெற்றுக்கொள்ளலாம். ஆசிரியை: திருமதி இரகுநாதன், சென்.ஜோண் பொஸ்கோ வித்தியாலயம், யாழ்ப்பாணம். - (17763)

### தேவை

GL, 113 வகை HIACE வாகனம் விற்பனைக்கு இருப்பின் தொடர்பு கொள்ளவும். சிவா. 0777 315665 (17822)

### தவறிவிட்டது

கடந்த 09.05.2003 வெள்ளிக்கிழமை முகமாலைக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் Casio கல்குலேட்டர் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து 189/2, கலட்டிப் பிள்ளையார் லேன், GPS Road, கல்வியங்காடு என்னும் முகவரியில் அல்லது T.P.: 0777-902387 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

(17836)

[illegible], திருகோணமலை என்னும் முகவரியை உடைய சு.சுந்தரலிங்கம் என்பவருடைய தேசிய அடையாள அட்டை, வாகன அனுமதிப்பத்திரம் என்பன [illegible] தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் க.மகேந்திரன், கட்டப்பிராய், கோப்பாய் தெற்கு என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும்.

(17830)

### விற்பனைக்கு

சிறிதுகாலம் பாவித்த புதிய E.B.K. 1200 (Honda) ஜெனரேட்டர் விற்பனைக்குண்டு. தொடர்பு: இ.ஜங்கரன், 603,K.K.S. றோட், யாழ்ப்பாணம். (17810)

### மணமக்கள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பங்களைச் சேர்ந்த, 1973, மிருகசீரிடம் 4ஆம் பாதம், A/L படித்த கனடா வாசிக்கும் 1969, பரணி 2ஆம் பாதம், உதயச்செவ்வாய் கணக்காளருக்கும் (C.I.M.A part iv) 1976, உத்தரட்டாதி முதலாம் பாதம், செவ்வாய்க் குற்றமற்ற அரச எழுதுநர் B.Sc. பட்டதாரி பெண்ணுக்கும் (உயரம் 5'8") மணமக்கள் தேவை தொடர்பு: விள. இல-1875 மே/பா உதயன். (17498)

### சுற்றறிக்கை கிடைத்தது

இவ்வருடத்துக்கான ஆசிரியர் சம்பள ஏற்ற நடவடிக்கைகளின்போது 2002ஆம் ஆண்டுக்கான ஆசிரியர் தரம் கணிப்புப் படிவங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டுமெனக் கோரும் சுற்றறிக்கையை மனித வள அபிவிருத்தி கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சின் பணிப்பின் பேரில் வலயக் கல்விப் பணிப்பாளர்கள் பாடசாலைகளுக்கு அனுப்பி வைத்துள்ளனர். (எ-ரி)

### மீள்குடியமர்வு கொடுப்பனவு வழங்க ஏற்பாடு

குடத்தனை வடக்கு, பொற்பதி, குடத்தனை தெற்கு அம்பன், மணல்காடு ஆகிய மருதங்கேணி உதவி அரசாங்க பிரிவிலுள்ள 5 கிராம சேவையாளர் பிரிவுகளில் மீளக்குடியமர்ந்த மக்களுக்கு மீள்குடியமர்வுக் கொடுப்பனவாக ரூ.25 ஆயிரம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

குறித்த கிராம சேவகர் பிரிவிலும் சுமார் 70 குடும்பங்களுக்கு முதல் கட்டமாக இத்தக் கொடுப்பனவை வழங்குவதற்கு யாழ் செயலகம் நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (எ-36)

### தவறிவிட்டது

[illegible] சாவகச்சேரியைச் சேர்ந்த [illegible]குமார் என்பவருடைய [illegible] புத்தகமும், மோட்டார் சைக்கிள் புத்தகமும் சாவகச்சேரிக்கும் [illegible] இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் பின்வரும் முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

பாலா தொலைத்தொடர்பு சேவை
ஆசிரிய வீதி, பெரிய அரசடி,
சாவகச்சேரி.
T.P: [illegible]
T.P: [illegible] (17860)

## காணி விற்பனைக்கு உண்டு

வீட்டுக் கிழக்கில் குளிப்பனில் நெல்லும் தோட்டமும் செய்யக்கூடிய 17 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு :- கிராம சேவையாளர் கந்தோரடி வளவு துணைவிச் சந்தி, சங்கரத்தை.

சந்திக்கும் காலம் : 14-05-2003 மு.ப. 10.00 மணி - பி.ப. 4.00 மணிவரை (17859)

## இதய அஞ்சலி



எமது கழகத்தின் செயலாளர் Rtr. அ.மரியாசேவி மற்றும் கழக உறுப்பினர் Rtr. அ.ஒலிவியாசாந்தி ஆகியோரின் அன்புத் தாயார்

**திருமதி அருளானந்தம் அமலஉற்பவம்**

அவர்களின் மறைவையிட்டு ஆறாத்துயரில் ஆழ்ந்திருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

(சி-27884) - நல்லூர் றோட்டறக்ட் கழகம்.

## இதய அஞ்சலி

இறைபதமடைந்த எமது விரிவுரையாளர்

**Dr.செல்வி பரமேஸ்வரி சின்னப்பா**

அவர்களுக்கு எமது இதய அஞ்சலியைக் காணிக்கையாக்குவதுடன், அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினரின் துயரிலும் பங்கெடுக்கின்றோம்.

18ஆம் அணி மாணவர்கள்,
யாழ்.மருத்துவபீடம்
(17868)

## கண்ணீர் அஞ்சலி

யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை பழைய மாணவர் சங்க முன்னாள் தலைவியும் தற்போதைய உப காப்பாளருமாகிய

**டாக்டர் செல்வி பரமேஸ்வரி சின்னப்பா**



அவர்களது திடீர் மறைவு எமக்குப் பேரதிர்ச்சியைத் தந்துள்ளது. அன்னாரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம். அவரது ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்தித்து கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்.

பழைய மாணவிகள் சங்கம்
யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை

☆ சகல பழைய மாணவிகளையும் இறுதிக்கிரியைகளில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம் (17867)

## கண்ணீர் அஞ்சலி



**அமரர் டாக்டர் செல்வி பரமேஸ்வரி சின்னப்பா**

(M.B.B.S.(Ceylon), D.Path.(London)

யாழ்.போதனா வைத்தியசாலை - ஆய்வுகூடம்

எமது மதிப்பிற்குரிய அமரர் டாக்டர் செல்வி பரமேஸ்வரி சின்னப்பா அவர்களின் மறைவு எமது ஆய்வு கூடத்திற்கு ஈடுசெய்யமுடியாத பேரிழப்பாகும்.

எமக்கு நல்லதோர் வழிகாட்டியாகத் திகழ்ந்து இன்று எம்மை விட்டுபிரிந்த அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதுடன், எமது கண்ணீர் அஞ்சலியையும் சமர்ப்பிக்கின்றோம்.

*ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!*

*போதனா வைத்தியசாலை*
*யாழ்ப்பாணம்.* (17862) **ஆய்வுகூட உத்தியோகத்தர்கள்.**

## கண்ணீர் அஞ்சலி



திருநெல்வேலி வடக்கைச் சேர்ந்தவரான

**டாக்டர் செல்வி பரமேஸ்வரி சின்னப்பா**

M.B.B.S(Ceylon), D.path (London)

அவர்கள் 10.05.2003 சனிக்கிழமை இரவு திடீர் மரணமடைந்துவிட்டார். அவரது மறைவு எமக்கு பேரதிர்ச்சியைத் தந்துள்ளது. அவரது பிரிவால் வருந்தும் அவர்மீது அன்பு நெஞ்சங்கொண்ட குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அவருக்கு கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாகச் சமர்ப்பித்து ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திக்கின்றோம்

சந்திரவதனி தச்சுத் தொழிற்சாலை,
கனகு கராஜ்,
*பலாலி வீதி, திருநெல்வேலி,*
*யாழ்ப்பாணம்.* (17863)

ம.பாலச்சந்திரன்,
பொ.கனகரத்தினம்.

## அரசாங்கக் கேள்வி அறிவித்தல் - 2003

### கணனி, கணனியுடன் தொடர்புடைய கணனிப் பொருள்களை கொள்வனவு செய்தல்

மனிதவள அபிவிருத்தி தொழில்சார் பயிற்சி நெறிக்காக இதன் கீழ்க்குறிப்பிடப்படும் கணனி, கணனியுடன் தொடர்புடைய பொருள்களை வழங்குவதற்கு ஆர்வம் உள்ளவர்களிடம் இருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.

**கணனிகள் (COMPUTERS)**

இதன்கீழ் குறிப்பிடப்படும் கணனித் தொகுதிகளை (Computer systems) உடையதாக கணனி இருத்தல் வேண்டும்.

1. ATX 340W Tower casing (PIV)
2. MSI or Gigabyte or AUSUS PIV MB with Intel Chipset
3. 256 or 128 MB DDR RAM or SDRAM
4. 32 MB AGP VGA Display Adepter, SIS or MSI
5. 40GB or 60GB Hard disk - Sigate or Maxtor
6. 3.5" Floppy Disk drive - Samsung
7. Win 95 Key Board - Ps/2-Logitech or any good brand
8. Mouse PS/2-Logitech or any good brand
9. 52x CD Rom- Sony or Samsung
10. Multimedia Speaker system
11. PIV - 1.7 or 1.8 GHZ Intel Processor
12. 512 cache
13. 15' color Monitor - CRT - Samsung or LG
14. PCI sound card - Creative live Value or ALS 4000
15. AGP & 5PCI Slot
16. 2USB, 2 Serial & 1 Parallel

**இடையறாத மின்வழங்கிகள் (UPS LINE INTERACTIVE)**

650 VA - Fenton
600 VA - Power Tree or Prolink

**அச்சடிப்பான்கள் (PRINTERS)**

| | | |
|---|---|---|
| Dot Matrix | - | Epson LQ 300 |
| | | Epson LQ 2180 |
| Bubblejet | - | Cannon BJC 2100 sp |
| | | Cannon BJC 100 sp |
| Deskjet | - | HP 3325 |
| | | HP 3420 |
| Laser | - | HP 1200 |

**தரவு நிழல் மாறா உள்வாங்கிகள் (SCANNERS)**

Cannon Lide 20 or Lide 30

**கணனி மேசைகள் (சாதாரணம்) Computer Tables (ordinary)**

**கணனி கதிரைகள் (சாதாரணம்) Computer Chairs (ordinary)**

மீளளிக்க முடியாத வைப்பாக (கேள்விக் கட்டணம்) ரூபா 500/- வேலை நாள்களில் மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்புக் கணக்காளரிடம் செலுத்தி கேள்விப் படிவத்தையும் கேள்வி ஆவணத்தையும் 2003.05.27ஆம் திகதி வரை பெற்றுக்கொள்ளலாம்.

03. மீளளிக்கக்கூடிய வைப்பாக ரூபா 5000/- (கேள்விமுறி) ஐ மாவட்டச் செயலகத்தில் அமைந்துள்ள இலங்கை வங்கியில் அரச அதிபர், இலங்கை வங்கி கணக்கு இலக்கம் 0003 - 08 - 00000043இற்கு செலுத்திப் பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொள்ளலாம்.

04. கேள்விகள் தலைவர் / அரசாங்க அதிபர், கேள்விச் சபை, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் என 9X4 அளவுடைய கடித உறையில் முகவரியிடப்பட்டு 2003.05.28ஆம் திகதியன்று பிற்பகல் 2.00 மணிக்கு முன்பாகக் கிடைக்கக் கூடியதாக பதிவுக் கடிதமூலம் அனுப்பப்பட வேண்டும். அல்லது கணக்காளருடைய அறையில் உள்ள கேள்விப் பெட்டியில் நேரடியாகவும் போட்டுக்கொள்ளலாம்.

செ.பத்மநாதன்
தலைவர் /அரசாங்க அதிபர்,
கேள்விச் சபை,
மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம். (C/27860)

## மரண அறிவித்தல்

### கந்தையா செல்லத்துரை

*(ஓய்வுபெற்ற உத்தியோகத்தர், யாழ். போதனா வைத்தியசாலை)*

புத்தூரைப் பிறப்பிடமாகவும் நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா செல்லத்துரை அவர்கள் நேற்று (11.05.2003) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா தம்பதியரின் அன்பு மகனும் அப்பாப்பிள்ளை - தங்கமுத்து தம்பதியரின் மருமகனும் பொன்னம்மா (திரவியம்) அவர்களின் பாசமிகு கணவரும் காலஞ்சென்றவர்களான வீரகத்தி, பொன்னுத்துரை, இராசம்மா மற்றும் பாக்கியம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்றவர்களான நல்லையா, நாகேசு, திருநாவுக்கரசு மற்றும் குருசாமி ஆகியோரின் மைத்துனரும் இராஜேஸ்வரி (அரசினர் வைத்தியசாலை, மன்னார்), பாலசிங்கம், காலஞ்சென்றவர்களான காந்திமதி, நாகேஸ்வரி மற்றும் லிங்கேஸ்வரன் (ஜேர்மனி), கதிர்காமலிங்கம் (ஆனந்தன் - நோர்வே) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் வசந்தி, ராணி (ஜேர்மனி), மோகன், கலா (நோர்வே), ஆகியோரின் அன்பு மாமனாரும் குகன், தர்சினி (ஜேர்மனி), ஜெயக்குமார், கவிதா, விஜயநேசன், ரஜிதா, ரஞ்சித், ரஜீவன், ரவிராஜ், ரஜிந்தன், சுகன்யா, இந்து, சிந்து, தமிழரசி, அனோஜன் ஆகியோரின் அன்புப் பேரனும் தனுசங்கர் (சென்.பற்றிக் கல்லூரி), தட்சாயினி, அஜித் சங்கர் ஆகியோரின் அருமைப் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
செ.பொன்னம்மா (மனைவி),
விஜயநேசன் (பேரன்).

*18/1, அரச வீதி,*
*நல்லூர், யாழ்ப்பாணம்.* (1786[illegible])

# இராச முருக்கடியில் பத்திமா அன்னைக்குத் தேவாலயம்

**பண்டத்தரிப்பில் இன்று திங்கட்கிழமை பத்திமா அன்னை ஆலயம் திறந்து வைக்கப் படுகிறது. அதனை முன்னிட்டு இந்த ஆக்கம் பிரசுரமாகிறது.**

பிரான்சில் லூர்துபதியில் 1858ஆம் ஆண்டில் மரியன்னை, பேர்ணதேத் என்ற ஏழைப் பெண்ணுக்கு பதினெட்டுத் தடவைகள் தரிசனம் தந்து பல அறிவுரைகளை வழங்கினார்.

போர்த்துக்கலில் பத்திமாபதியில் 1917ஆம் ஆண்டு வைகாசி 13 தொடக்கம் ஐப்பசி 13ஆம் நாள் வரை ஆறு காட்சிகளை அருளக் கிருபைகூர்ந்தார். பத்திமா அன்னையின் காட்சியைப் பெற்றவர்கள் லூசியா, பிரான்சிஸ், யசிந்தா என்ற சிறுவர்களே.

தேவதாயார் 'பிள்ளைகளே, பயப்படாதீர், அடுத்து ஒவ்வொரு மாதமும் 13ஆம் திகதிகளில் இந்நேரத்தில் இங்குவந்து என்னைச் சந்தியுங்கள். ஐப்பசி மாதத்தில் நான் யாரென்பதையும் எனது அறிவிப்புக்களையும் தெரிவிப்பேன்'- என்றார்.

தொடர்ந்து 'இறைவனுக்கெதிராக மனிதரால் கட்டிக்கொள்ளப்படும் துரோகங்களுக்குப் பரிகாரமாகவும் பாவிகள் மனந்திரும்பும்படியும், நீங்கள் அனுபவிக்கும்படி இறைவன் அனுப்பும் வாதை, வேதனைகளை ஏற்றுக் கொண்டு உங்களை அவருக்கு பலியாக ஒப்புக்கொடுக்க விரும்புகிறீர்களா? என்று கேட்டார். பூரண வெண்மனதுடனும் வீரியத்துடனும் 'ஆம்' எனப் பிள்ளைகள் மூவரும் விடையளித்தனர். 'நல்லது நீங்கள் அநேக இன்னல்களை அனுபவிப்பீர்களாயின் இறைவனின் அருட்கொடைகள் உங்

**சாமுவேல் பெனடிக்ற்**

களோடிருந்து பெலமளிக்கும்' என்று மொழிந்தபின் 'எனது அருமையான பிள்ளைகளே இன்றுபோல் தொடர்ச்சியாக செபமாலை சொல்லி வாருங்கள்' என்று கூறி மறைந்தார்.

அன்று தொடங்கி ஆறு காட்சிகளிலும் பல அறிவுரைகளைக் கூறிய மரியன்னை ஐப்பசியில் பல புதுமைகளால் தம் தரிசனங்கள் உண்மை என்பதை உறுதிப்படுத்தினார்.

இலங்கையிலிருந்து தமிழ்பேசும் சமூகத்தில் பத்திமா பக்தியை அறிமுகப்படுத்தியவர், அதிவண.கென்றி ஜெலாண்ட் அடிகளார். இவர் பண்டத்தரிப்புப் பங்குக்குரவராக நியமிக்கப் பட்டபோது இளவலைக்கு - தியான இல்லத்திலிருந்து சைக்கிளில் பயணஞ்செய்யும் போதெல்லாம் பண்டத்தரிப்புக் கிராம எல்லையில் அமைந்துள்ள இராசமுருக்கு என்ற முதுபெரும் விருட்சத்தின் பக்கமாகச் செல்வதுண்டு. அப்போதெல்லாம் அவருக்கு பத்திமா தரிசனங்கள் கார்வாலி மரத்தின் மீதே அளிக்கப் பட்டமை நினைவுக்கு வரும்.

எனவே, 1945களில் அவர் பற்றைக்காடாக இருந்த இராசமுருக்கடியைத் திருத்தி பத்திமாகிரி எனப் புதுப்பெயர் சூட்டி வடமாகணத்தில் பத்திமா பக்தியை ஆரம்பித்து வைத்தார். பத்திமாகிரி விரைவாக மரியன்னையின் பக்தர்களை ஆட்கொண்டது. வைகாசி 13தொடக்கம் ஐப்பசி 13வரை விசேட வழிபாடுகள் முதற்சனிப்பக்தி, மாசற்ற இருதய நாயகியின் பக்தி என பல்வேறு அனுசரணைகள் பத்திமாபதியை பக்தி மிகு ஒரு திருத்தலம் ஆக்கின.

அதிவண.தோமஸ் சவுந்திரநாயகம் ஆண்டகை யாழ்.ஆயராகப் பொறுப்பேற்றதும், நிறுவுநர் அமரர் ஜெலாண்ட் அடிகளின் விருப்பைப் பூர்த்திசெய்ய விரும்பினார். ஞானரட்ணம் அடிகள் பண்டத்தரிப்புப் பங்குத்தந்தையாக நியமனம் பெற்றார். கட்டட வேலைகள் தீவிரமாக்கப்பட்டன. 12.5.03 திங்கள் மாலை புதிய ஆலயம் யாழ்.ஆயரால் திறந்து வைக்கப்படும். நள்ளிரவிலிருந்து 13.05.03 பகல்வரை திருநாள் திருப்பலிகள் நடத்தப்படும்.

அன்னை மரியாளின் பத்திமா அறிவுரைகளை அகிலமும் ஏற்றுக் கொண்டால் போர்களற்ற, அமைதியான ஓர் அன்புலகம் நிச்சயமாக உருவாகும்.

## மரண அறிவித்தல்

**திருமதி**

**சந்திரபாலதேவி சிறீபாலகிருஷ்ணன்**

**(சாந்தி - அண்ணாமலை)**

யாழ்ப்பாணம், ஓட்டுமடத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி சந்திரபாலதேவி சிறீபாலகிருஷ்ணன் (சாந்தி - அண்ணாமலை) 08-05-2003 வியாழக்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12-05-2003) திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*'பவளவாசம்'*
*573, மானிப்பாய் வீதி,*
*ஓட்டுமடம்.*
***T.P. 021-2225761*** (17850)

தகவல்:
ப. சிறீபாலகிருஷ்ணன்
(அண்ணாமலை - கணவன்).

# இந்து சமயத்தை...

(04ஆம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டும். ஏன் ஈழமக்கள் தம்மைக் காப்பாற்றிக்கொள்ள நடத்தும் போராட்டத்தைக்காட்ட தீவிரவாதம் என்று தானே சிலர் வர்ணிக்கிறார்கள்.

*கேள்வி:-* இங்குள்ள இந்து இளைஞர்கள் பற்றி என்ன கூற நினைக்கிறீர்கள?

உண்மையாகவே இங்குள்ள இளைஞர்களை நான் பாராட்டுகிறேன். கொழும்பிலும் சரி, யாழ்ப்பாணத்திலும் சரி ஆசாரம் மிக்க சமயத்தில் மிக ஈடுபாடுள்ள இளைஞர்களை நான் கண்டேன்இ ஒரு தகப்பன் வீட்டைக் கட்டி சாவியை மகனிடம் கொடுப்பதுபோல எமது சமயத்தை நாம் அவர்களுடைய கைகளில் சமர்ப்பிக்கிறோம். அதை ஈழத்து இளைஞர்கள் நிச்சயம் சிறப்பாகக் கடைப்பிடிப்பார்கள் என நான் உறுதியாக நம்புகிறேன்.

*கேள்வி:-* பிற சமய நண்பர்களுக்கு நீங்கள் கூறுவது என்ன?

எல்லாச் சமயங்களும் கூறுவது நல்லவற்றையே. நீங்கள் உங்கள் சமயத்தை,உங்கள் கலாசாரத்தைப் பேணி நல்ல சகோதரர்களாக பிற சமயங்களைக் கொச்சைப்படுத்தாத, சிதைக்காத மனிதர்களாக வாழ வேண்டும் என்பதுதான் என் வேண்டுகோள்.

கேள்வி:- இன்றைய உலகசமூக உறவாடல் விருத்தி இந்துசமயத்தையோ அல்லது தமிழ் கலாசாரத்தையோ பாதிக்கும் என நீங்கள் கருதுகிறீர்களா?

இல்லை. தமிழ் மக்கள் பல்வேறு பிரச்சினைகள், நோக்கங்கள் காரணமாக வேறு நாடுகளுக்குச் சென்று வாழ்ந்தாலும் அந்த சூழலுக்கேற்ற மாதிரி தம்மை மாற்றிக்கொண்டாலும் எமது கலாசாரத்தை மறக்கவில்லை. பிற கலாசாரங்களை அவர்கள் இரசிக்கிறார்கள் அல்லது வெறுக்கிறார்களே தவிர அதைப் பின்பற்ற தமிழர்கள் முனைவதில்லை. ஒரு சிலர் அவ்வாறு செய்வது எமது கலாசார சிறப்பை அவர்கள் அறியாத காரணமேயன்றி வேறல்ல.

*கேள்வி:* இலங்கையின் இப்போதைய சமாதான நிலைபற்றி என்ன நினைக்கிறீர்கள்?

இங்கு ஏற்பட்டுள்ள இந்த சமாதானச்சூழல் தமிழ் நாட்டு மக்களுக்கு மகிழ்ச்சியைத் தந்துள்ளது. ஈழத்தமிழர்கள் எமது சகோதரர்கள் என்றாலும் கூட ராஜீவ் காந்தி கொலைக்குப் பிறகு ஈழத்தமிழர் தொடர்பான எண்ண அலைகள் தமிழ் நாட்டிலே மாறுபட்டே இருந்தன. இப்போது விடுதலைப் புலிகள் சமாதான முயற்சிகளில் ஈடுபடத் தொடங்கிய பின் தமிழ் நாட்டுத் தமிழர்கள் ஈழத்தமிழர் விவகாரத்தில் அதிக ஆர்வம் காட்டத் தொடங்கியிருக்கிறார்கள். அண்டை நாட்டு பிரச்சினை என்ற நிலை மாறி எமது சகோதரர்களின் பிரச்சினை எனக் கருதத் தொடங்கியிருக்கிறார்கள்.

*கேள்வி:-* தமிழகத்தில் 'பொடா' சட்டத்தின் கீழ் ஈழத்தமிழ் ஆதரவாளர்கள் தொடர்ந்து ஏன் கைது செய்யப்படுகிறார்கள்?

அது ஜெயலலிதா அம்மாவுடைய அரசியல் பழிவாங்கல் நடவடிக்கையே தவிர விடுதலைப் புலிகளுக்கு எதிரான நடவடிக்கை அல்ல. நெடுமாறன், கோபாலசாமி போன்ற தலைவர்கள் ஜெயலலிதாவின் அரசுக்கும், அரசியல் வாழ்வுக்கும் கடும் எதிர்ப்பாளர்களாக இருந்ததால் இந்தச் சாட்டில் அவர்களைக் கைது செய்து சிறையில் அடைத்திருக்கிறார்.

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை
**திருமதி கோணேஸ்வரி இராமச்சந்திரன்** அவர்களின் தந்தையார்

**கந்தையா ஆறுமுகம்**

**அவர்களின் திடீர் மரணத்தால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.**

**பாடசாலைச் சமூகம்**
**யா/உடுவில் மான்ஸ் த.க.பாடசாலை**
**உடுவில், சுன்னாகம்.**

(17848)

சுடர் ஒளி

18.05.2003 இதழில்

விலை 16 /=




சமாதான முயற்சிகள் ஒருபுறமும்
சீண்டும் நடவடிக்கைகள் மறுபுறமும்
நம்பியாரின் அறிக்கையை வெளியிட இதுதான் தருணமா?

பாதுகாப்பு காரணத்தை முன்வைத்து
நிகழ்வுகளைக் கோட்டைவிடும் ஜனாதிபதி

இந்திய - பாக். பேச்சுகள் | வெறும் விளம்பரமாகி விடுமா? நல்ல விளைவைத் தருமா?

விபரீத உணவு வித்திட்ட 'சார்ஸ்'

அரசியல் அம்பலம், சொற்சிலம்பம்
திருக்கோணேஸ்வர திருத்தல யாத்திரை,
சதாம் தொடர், மருத்துவம், நகைச்சுவை,
பெண் கலையமுதம், இளஞ்சுடர், சினிமா, க்ரைம்,
மதன் தொடர், பித்தன் பதில்கள் மற்றும்
பல்வேறு அறிவியல் துணுக்குகளுடன்........

(சி-27882)

# அணியில் அனைவரும் தலைவர்களே!

## மைக்கல் வோகன் கருத்து

போட்டியின்போது மைதானத்தில் இருக்கும் 11 வீரர்களும் தலைவர்களாக இருக்கவேண்டும் என்பதே எனது விருப்பம்

- இவ்வாறு தெரிவித்தார் ஒருநாள் போட்டிக்கான இங்கிலாந்து அணியின் புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ள மைக்கல் வோகன்.

இது குறித்து மைக்கல் வோகன் அளித்துள்ள பேட்டியில்,

"லண்டன் வருவதற்காக நான் ரயில் பயணம் மேற்கொண்டிருந்தபோது எனது செல்போனில் மணி ஒலித் தது. அப்போது பேசிய நசார் ஹுசைன், நான் தலைவராக தேர்ந்தெடுக்கப் பட்டதற்கு வாழ்த்துக் கூறினார்.

அதன்பிறகு இம்மாத இறுதியில் நடைபெறவுள்ள ஸிம்பாவே அணிக்கெதிரான தொடர் குறித்து பேசினோம்.

தலைவர் பதவியில் எனக்கு அனுபவமில்லை. இதை நான் ஒத்துக்கொள்கிறேன். இதில் மறைப்பதற்கு ஏதுமில்லை. ஹுசைன், ஆதர்டன் போன்றவர்களின் தலைவர் பதவியின் பொறுப்புக்கள் குறித்து கேட்டுத் தெரிந்து கொள்ளவிருக்கிறேன்.

உலகக் கிண்ணத்தின் பின்பு எனக்குத் தலைவர் பதவி கிடைக்கும் என்று கொஞ்சமும் நான் எதிர் பார்க்கவில்லை. ட்ரெஸ்கொதிக்கிற்குத்தான் இந்த பதவி கிடைக்கும் என்று நினைத்தேன். ஆனால், சமீப காலமாக எனது பெயர் தலைவர் பதவிக்கு பலமாக அடிபட்டதால் எனக்குள் நம்பிக்கை ஏற்பட்டது. தலைவா பதவியின் அணுகுமுறை குறித்து தற்போது ஆலோசனை பெற்று வருகின்றேன்.

போட்டிகளின் போது மைதானத்தில் இருக்கும் 11 வீரர்களுமே தலைவர்களாக செயற்பட வேண்டும் என்பதே எனது விருப்பம். களத்தடுப்பு எப்படி இருக்கிறது என்பதற்கேற்ப பந்து வீச்சாளர்கள் பந்துவீசவேண்டும். களத்தடுப்பாளர்களும் தங்களுடைய பொறுப்பு என்ன? என்பதை உணர்ந்திருக்கவேண்டும்" - என்றார்.

# ஒழுங்கீனக் குற்றச்சாட்டு நிஸங்கவுக்கு அபராதம்

இலங்கை கிரிக்கெட் அணி வேகப்பந்து வீச்சாளர் பிரபாத் நிஸங்கவுக்கு அபராதம் விதிக்கப் பட்டு கடுமையாக எச்சரிக்கப்பட்டார்

நேற்றுமுன்தினம் நடைபெற்ற பாகிஸ்தானுடனான போட்டியின் போது ஒழுங்கீனமாக நடந்து கொண்டமையே இதற்குக் காரணம்.

பாக். துடுப்பாட்ட வீரர் தௌபீக் உமருக்கு எதிரான கோரிக்கையொன்றை நடுவர் பீட்டர் மனுவல் நிராகரித்தார். இதையடுத்தே நிஸங்க ஒழுங்கீனமாக நடந்துகொண்டார் என நடுவர்கள் பீட்டர் மனுவலும், சிமேண்ட் டஃபலும் முறையிட்டனர்.

இவ்விடயத்தில் நிசங்க குற்றவாளியாகக் காணப்பட்டார்.

"போட்டி முடிவடைந்த பின் நடைபெற்ற விசாரணையையடுத்து நிஸங்கவுக்கு போட்டி ஊதியத்தில் 20 சதவீதம் அபராதம் விதிக்கப்பட்டதுடன் கடுமையாக எச்சரிக்கையும் விடுக்கப் பட்டது.

- இவ்வாறு ஐ.சி.சி., ஊடக அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளது. (ம)


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்

தோற்றம் 15 - 04 - 1936



மறைவு 12 - 04 - 2003

### திருமதி பீதாம்பரம் தவமணி

எம்மை அன்புடன் வளர்த்து ஆளாக்கிய அம்மாவே!
இன்று எம்மைத் தவிக்கவிட்டு எங்கு சென்றீர்கள்?
இனி யாரை நாம் "அம்மா" என்று அழைப்போம்?
எம்முயிருள்ளவரை உங்களை மறவோம் அம்மா!

இன்று (12.05.2003) திங்கட்கிழமை நடைபெறுகின்ற ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்போடு அழைக்கின்றோம்.

"புவன இல்லம்"
கொக்குவில் மேற்கு.
கொக்குவில. (17866)

மக்கள், மருமக்கள்.
P.பிறேமகோணேஸ்வரன் (மகன்)



## பதவி வெற்றிடம்

திருநெல்வேலிப் பகுதியில் உருவாக இருக்கும் மிகப்பெரிய கணனி நிறுவனம் ஒன்றிற்கு பின்வரும் பதவிகளுக்கு ஆள்கள் தேவை

1) வரவேற்பாளர்(Receptionist)பெண்கள்
2) கணனி இயக்குநர்(Computer operater) ஆண்கள்

திருநெல்வேலியை அண்டிய பகுதியில் வசிப்பவர்களுக்கும் ஆங்கிலம், சிங்களத்தில் உரையாடக்கூடியவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.

உங்களது சுயவிவரக் கோவையை 19-05-2003இற்கு முன் எமக்குக் கிடைக்ககூடியதாக அனுப்பி வைக்கவும்.

மேலதிக விவரங்களுக்கு Tel : 021-222-2982 அல்லது 071-346644

அனுப்பவேண்டிய முகவரி:
விள.இல 1888
மே/பா உதயன். (17870)



## இதய அஞ்சலி

எங்கள் சுதுமலை ஸ்ரீ முருகமூர்த்தி ஆலய போசகரான செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் அவர்களின் பாசமிகு அன்புத் தந்தையார் ஓய்வுபெற்ற ஆசிரியர்

### அமரர் கந்தையா ஆறுமுகம்

அவர்களின் மறைவு குறித்து எங்கள் ஆழ்ந்த அனுதாபத்தையும் அஞ்சலியையும் அவரின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தி பெற முருகப்பெருமானைப் பிரார்த்திக்கிறோம்.

சுதுமலை ஸ்ரீ முருகமூர்த்தி தேவஸ்தான பரிபாலன சபையினர்.
(17871)


## விளையாட்டு நிகழ்வுகள்

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டிகள் இன்று திங்கட்கிழமை முதல் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளன.

இன்று நடைபெறும் ஆட்டத்தில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

பிற்பகல் 3.30 மணிக்கு வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழக 'ஏ' அணி எதிர் கழுகுகள் விளையாட்டுக் கழக அணி.

பிற்பகல் 4.30 மணிக்கு அல்வாய் மனோகரா விளையாட்டுக்கழக அணி எதிர் நெல்லியடி சுடர் ஒளி விளையாட்டுக்கழக அணி.

இமையாணன் மத்திய விளையாட்டுக்கழகம் நடத்தும் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு கழக மைதானத்தில் நடைபெறும் ஆட்டத்தில் கலைமகள் விளையாட்டுக் கழகமும் வல்வெட்டி ஒற்றுமை விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன. (ம-5)

## விமானத்தின்...

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

னடியாக வைத்தியசாலையில் அனும திக்கப்பட்டனர்.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த பொலீஸார் ஒருவரே மேற்கண்டவாறு தனது அனுபவம் பற்றித் தெரிவித்திருந்ததார். அவர் மேலும் தெரிவித்திருந்ததாவது:-

விமானம் புறப்பட்ட சிறிது நேரத்தில் டமார் என்ற பெரிய வெடிப்புச் சத்தம் கேட்டது. விமானத்தின் பின் பக்க கதவு காற்றில் பறந்தது.

நாங்கள் என்னவோ ஏதோ என்று பதைபதைத்துத் திரும்பிப் பார்த்த போது, பேய்க் காற்று விமானத்தினுள் புகுந்தது. இதனால் விமானம் அப்படியும் இப்படியுமாக குலுங்கி ஆடியது.

இருக்கைகளில் இருந்து விழுந்த பெண்களையும் குழந்தைகளையும் அந்தப் பேய்க் காற்று வாரிச் சுருடி இழுத்து வெளியே வீசியது. என் கண்ணெதிரேலே அவர்கள் அலறியபடி காற்றில் அடித்துச் செல்லப்பட்டனர்.

அது சரக்கு விமானம் என்பதால் அதில் நிறைய சங்கிலிகள் இணைக்கப்பட்டிருந்தன. அவற்றில் ஒன்றை நான் இறுக்கமாகப் பிடித்துக் கொண்டதால், காற்றில் இழுபட்டுச் செல்லாமல் தப்பிக் கொண்டேன். - என்றார் கடேம்யோ என்ற அந்தப் பொலீஸ்காரர்.

இந்த விபத்துக் குறித்து தற்போது இராணுவ அதிகாரிகள் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனா. விமானத்தில் இருந்தவர்களில் பெரும்பாலானவர்கள் இராணுவத்தினரும் பொலீஸாரும் அவர்களின் உறவினர்களும். (ம)


## பட்டப்படிப்புகள் கல்லூரி மாணவர் கவனத்திற்கு

எம்மால் ஒழுங்கு செய்யப்பட்ட கல்விச் சுற்றுலா 14.05.2003 மேற்கொள்ளப்படுவதால், பயண ஒழுங்கு சம்பந்தமாகக் கலந்துரையாட இன்று (12.05.2003) திங்கள் காலை 10 மணிக்கு நேரில் வருகை தரவும்.

(17865) - இயக்குநர்.



## தொடர்புகொள்ளவும்

கஸ்தூரியார் வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம் என்னும்
முகவரியைப் பிறப்பிடமாகவும்
தவதேவி,
அழுத்மாவத்தைவீதி,
கொழும்பு-15
என்னும் முகவரியை தற்காலிக
வதிவிடமாகவும் கொண்ட,
முருகையா பரீஸ்குமார்
(NIC-842700990v)
அல்லது
பிரேமச்சந்திரன்
லங்காதேவி
(NIC-555322968v)
ஆகிய இருவரில் ஒருவராவது
தயவுசெய்து 0777118704
என்னும் தொலைபேசி
இலக்கத்தில்
க.திலீபன்
என்பவருடன்
உடன் தொடர்புகொள்ளவும்.
(17869)


# ஸ்ரீவ்வோ-லாறா கடும் வாக்குவாதம் தண்டனையிலிருந்து தப்பினர்!

ஆஸ்திரேலிய அணித்தலைவர் ஸ்ரீவோ, மேற்கிந்திய அணித் தலைவர் பிறையன் லாறா ஆகியோர் வாக்குவாதத்தில் ஈடுபட்ட போதிலும் கடு மையான குற்றச்சாட்டுக்கு உள்ளாவதிலிருந்து தப்பினர்.

அன்ரிகுவாவில் நடைபெறும் 4 ஆவது டெஸ் கிரிக்கட் போட்டியின் இரண்டாவது நாளான சனிக்கிழமை காலை லாரா துடுப்பெடுத்தாடிக் கொண்டிருந்தபோது இச்சம்பவம் இடம் பெற்றது.

இரு வீரர்களும் கடுமையான வார்த்தைப் பிரயோகங்களை மேற்கொண்டனர். இங்கிலாந்து நடுவர் டேவிற் செப்பர்ட் இரு வீரர்களையும் பிரித்தார்.

விளையாட்டு வீரர்களுக்கான நற்குணங்களின் குறைபாட்டால் ஏற்பட்ட விடயம் இது. விடயம் உணர்ச்சி வசமாகும் முன்னர் நடுவர் டேவிட் செப்பர்ட் தலையிட்டார்.

இவ்வாறு மத்தியஸ்தர் மைக் ரொக்டர் இரண்டாம் நாள் ஆட்ட முடிவின் போது செய்தியாளர்களிடம் கூறினார்.

ஆஸ்திரேலிய வேகப்பந்து வீச்சாளர் பிரெட் லீ கருத்துத் தெரிவிக்கையில், இது விளையாட்டின் ஒரு பகுதி என்றார்.

இது டெஸ்ட் கிரிக்கெட். நாம கடினமான போட்டியிலீடுபட்டுள்ளோம். எமது நாட்டுக்காக நாம் விளையாடுகிறோம். வெற்றி பெறுவதன் மூலம் இத்தொடரில் 4-0 விகிதத்தில் வென்று வரலாற்றில் இடம் பெற விரும்புகிறோம் என்றார் பிரெட் லீ.

4 போட்டிகள் கொண்ட இத்தொடரில் முதல் மூன்று போட்டிகளிலும் ஆஸ்திரேலிய அணி வெற்றி பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ம)

## மத்தியகிழக்கு...

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

அமெரிக்கப் பின்புலத்துடன் தயாரிக்கப்பட்டுள்ள புதிய சமாதானத் திட்டத்தின்படி பலஸ்தீனர்களின் வன்முறைகளை நிறுத்துவதுடன் பலஸ்தீன அதிகார சபைக்குட்பட்ட பகுதிகளில் இருந்து இஸ்ரேலியப் படைகளை விலக்குவதும், 2005ஆம் ஆண்டுக்கிடையில் பலஸ்தீன சுதந்திரநாட்டைப் பிரகடனப்படுத்தும் பணிகள் முடிக்கப்படுவதும் முக்கியமானவையாகும்.

சமாதானப் பேச்சுக்கள் முன்னகரும் போது அதன் திட்டங்கள் பற்றிய மேலதிக தகவல்கள் தெரியவரும் என்று கூறப்படுகின்றது.

ஈராக்கியப் போர் முடிவுக்கு வந்துள்ளதைத் தொடர்ந்து மத்திய கிழக்கு பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான முயற்சிகளை முன்னகர்த்த புஷ் விரும்புகின்றார். அதன் விளைவே தற்போது கொலின் பவல் மத்திய கிழக்குக்கு விஜயம் செய்து சமாதான முயற்சிகளில் ஈடுபாடு காட்டுவது.

இஸ்ரேலியப் வெளிவிவகார அமைச்சர் சில்வன் சாலோம்முடன் பேச்சு நடத்திய பின்னர் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் பேசிய பவல், வன்முறைகளை உடனடியாக நிறுத்துவதும் பலஸ்தீனர்கள் வாழ்வின் மாற்றங்களை ஏற்படுத்துவதுமே தற்போது மிக முக்கியமான பணிகள் என்றார்.

ஆனால், அமெரிக்காவின் புதிய சமாதான முயற்சிகள் குறித்து இஸ்ரேல் மற்றும் பலஸ்தீன இரு தரப்புக்களிடையேயும் பெருமளவு ஆர்வத்தைக் காணவில்லை என்று அங்குள்ள செய்தியாளர்கள் கூறுகின்றனர். (ம)


## 31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 27 - 09 - 1916



உதிர்வு 12 - 04 - 2003

### திருமதி கந்தையா தங்கரத்தினம்

அன்போடு அரவணைத்த - எம்
ஆருயிர்த் தெய்வமே!
இங்கு நாம் இனியாரை
அம்மா, அத்தை, அம்மம்மா,
அப்பம்மா, பாட்டி என்றழைப்போம்?

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

'கஜன் இல்லம்'
தாவடி வடக்கு. (17873)

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.



## மரண அறிவித்தல்

### டாக்டர் செல்வி பரமேஸ்வரி சின்னப்பா

(டாக்டர், யாழ்.போதனா வைத்தியசாலை)

திருநெல்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட டாக்டர் செல்வி பரமேஸ்வரி சின்னப்பா நேற்றுமுன்தினம் (10.05.2003) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிராசா சின்னப்பா - மனோறஞ்சிதவல்லி தம்பதியினரின் அன்பு மகளும் யோகராஜன்(பொறியியலாளர் - லண்டன்), Dr.றஞ்சினி(லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் லதா(லண்டன்), சிறீஸ்கந்தராஜா(பொறியியலாளர் - லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனியும் நிசே (லண்டன்), பிறமன்(லண்டன்) ஆகியோரின் அன்புப் பெரியதாயாரும்,ரூபன்(லண்டன்),அமீத்(லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்ற விநாயகமூர்த்தி, J.P. (வட்டுக்கோட்டை) அவர்களின் பெறாமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(12.05.2003)திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் 3 மணியளவில் மருத்துவபீடத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு அங்கு அஞ்சலிக்கு வைக்கப்பட்ட பின்னர் 4 மணியளவில் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பலாலி றோட், மடம்லேன்,
திருநெல்வேலி வடக்கு. (17874)

தகவல்:
Dr.ஸ்ரீ.றஞ்சினி
(சகோதரி).

# அரச அச்சகம் இன்று மீண்டும் திறப்பு பொலீஸ் காவலுடன் வழமையான வேலை

கொழும்பு,மே12

கடந்த வெள்ளிக்கிழமை திடீரென மூடப்பட்ட பொரளையிலுள்ள அரசாங்க அச்சகம் இன்று மீண்டும் திறக்கப்படும். பலத்த பொலீஸ் பாதுகாப்புடன் வழமையான வேலைகள் ஆரம்பிக்கப்படும். ஆயினும், ஜனாதிபதியினால் வெளியிடப்படவிருந்த வர்த்தமானி அறிவித்தல் சட்டமா அதிபரின் ஆலோசனை பெறப்படும் வரை அங்கு அச்சிடப்படமாட்டாது.

பொதுமக்கள் தொடர்பாடல் அமைசசர் இம்தியாஸ் பாக்கீர்மாக்கார் நேற்று இத்தகவலை தெரிவித்தார்.

அமைசசர் மிலிந்த மொறகொடவின் பொறுப்பில் இருந்த அபிவிருத்தி லொத்தர் சபையை தனது பொறுப்பில எடுத்து ஜனாதிபதி பிறப்பித்த கட்டளை தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் கடந்த வெள்ளியன்று அரசாங்க அச்சகத்தில் அச்சிடப்படவிருந்தது. இவ்வேளையில், வெளியில் இருந்துவந்த குண்டர்கள் அச்சக ஊழியர்கள் மீது நடத்திய தாக்குதலையடுத்து அரசாங்க அச்சகம் உடனடியாக மூடப்பட்டது.

பாதுகாப்புக் காரணங்களுக்காகவே அரசாங்க அச்சகம் மூடப்பட்டது எனவும் -

பொலீஸாரின் இந்த நடவடிக்கையினால் அரச சொத்து பாதுகாக்கப்பட்டது எனவும் அமைச்சர் மேலும் சொன்னார். (ஐ-9)

## மாநாட்டை ஒட்டிய விசேட நிகழ்வு

யாழ்ப்பாணம்,மே12

யாழ் வண்ணை கிழக்கு கொண்டலடி விநாயகர் ஆலயத்தில் இரண்டாவது உலக இந்து மாநாட்டை முன்னிட்டு விசேட அபிஷேகம்,பூஜை, பஜனை என்பன இன்று மாலை 5 மணிக்கு நடைபெறவுள்ளன.

யாழ். பல்கலைக்கழக மாணவன் குகபிரசாந்தின் சொற்பொழிவு, கவியரங்கம், சைவப்புலவர் ஸ்கந்த சத்தியதாசனின் சிறப்பு சொற்பொழிவு, பட்டிமன்றம் ஆகியனவும் இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸவரனின் சிறப்புரையும் இடம்பெறும். (ஐ-6)

# 'சார்ஸ்' பற்றி விளக்கமளிக்க வைத்திய நிபுணர்கள் யாழ்.வருகை.

யாழ்ப்பாணம்,மே12

குடநாட்டிலுள்ள அரச மற்றும் தனியார் மருத்துவ மனைகளில் கடமையாற்றும் வைத்தியர்கள் மற்றும் தாதியர்கள், சிற்றூழியர்களுக்கு 'சார்ஸ்' நோய் தொடர்பான விளக்கம் அளிப்பதற்கென கொழும்பிலிருந்து 3 வைத்திய நிபுணர்கள் யாழ் வருகை தந்துள்ளனர்.

சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பகுதியைச் சேர்ந்த தொற்று நோயியல் வைத்திய நிபுணர்களான டாக்டர் நிகால் அபயசிங்க, டாக்டர் பவா பாலிகலதன, டாக்டர் சுஜாதா வரமன் ஆகியோரே இங்கு வருகை தந்துள்ளனர்.

மேற்படி குழுவினர் நேற்று யாழ். போதனா வைத்திய சாலை வைத்தியர்கள், தாதியர்கள் மற்றும் சிற்றூழியர்களுக்கு 'சார்ஸ்'நோய் தொடர்பாக விளக்கம் அளித்தனர்.

தொடர்ந்து சில நாள்கள் இங்கு தங்கியிருக்கும் இவர்கள், குடாநாட்டில் உள்ள ஏனைய மருத்துவ மனைகளினது உத்தியோகத்தர் களுக்கும இந்த நோய் குறித்து விளக்கம் அளிபபர். (எ-4-5)

## வயலின் சோலோ நிகழ்வு

தென்னிந்திய கலைஞர் ஆர். கலையரசனின் வயலின் சோலோ நிகழ்வு நாளைமறுதினம் மாலை 6.30 மணிக்கு நல்லூர் இளங்கலைஞர் மன்ற கலாமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இவர் பிரபல மிருதங்க வித்துவான ஏ.எஸ். இராமநாதனின் புதல்வராவார்.

## அதிபர், ஆசிரியர்களுக்கு!

நாளை யாழ். பல்கலைக்கழக நூலக கேட்போர்கூடத்தில் முனைவர் கு. அரசேந்திரனின் 'உலகம் பரவிய தமிழின் வேர்: கல்' நூல் அறிமுக விழா நடைபெறவுள்ளது.

இந்த விழாவில் யாழ். மாவட்டத்திலுள்ள 1ஏபி, 1சி தர பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்களைக் கலந்துகொள்ளுமாறும் தத்தமது நூலகங்களுக்கென நூல் ஒன்றினைப் பெறறுக் கொள்ளுமாறும் வலயக் கல்விப பணிப்பாளர்கள் கேட்டுள்ளனர்.


**யா/பண்டத்தரிப்பு மகளிர் உயர்தர பாடசாலை**
**பாடசாலை அபிவிருத்திச் சங்க**
**அவசரக்கூட்டம்**

இடம் : யா/பண்டத்தரிப்பு மகளிர் உயர்தர பாடசாலை
காலம் : 13.05.2003 செவ்வாய்க்கிழமை பி.ப. - 2.45மணி

*மேற்படி அவசரகூட்டத்தில் சங்க உறுப்பினர்களைத் தவறாது கலந்து கொள்ளும்படி வேண்டுகிறேன்.*
-அதிபர்.
(17876)



**உடுவில் அருள்மிகு ஸ்ரீ காளி அம்பாள் தேவஸ்தானம்**

2ஆவது உலக இந்து மாநாட்டை முன்னிட்டு இன்று (12.05.2003) திங்கட்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அம்பாளுக்கு விசேட பூசைகள், ஆராதனைகள் நடைபெறும்.

தொடர்ந்து விசேட சொற்பொழிவும் நண்பகல் அன்னதானமும் இடம் பெறும்.

*"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"*
(17872) - ஆலய பரிபாலனசபையினர்.



**விற்பனைக்கு**

யப்பான் மோட்டார் சைக்கிள்
(HONDA CUSTOM 250)
விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:
கற்பகப் பிள்ளையார் கோவிலடி, எதிர்க்கடை
பலாலி வீதி, உரும்பிராய்.
(17879)



**நாகம்ஸ் சுன்னாகம்**
சரத்குமார், கிரண், ரோஜா நடித்த

அரசு (கலர்)
தினசரி காட்சிகள் : 11.00, 2.00, 7.00
(17833)



**ராஜா யாழ்ப்பாணம்**
இலங்கையிலும் இந்தியாவிலும்
ஒரே தின வெளியீடு
குதூகல ஆரம்பம்
இளையதளபதி விஜய், மீராஜஸ்மின்

புதிய கீதை
10.30, 2.30, 6.30, 9.30
(C\27626)



**நிறைஞ்சனாஸ்**
இன்றுமுதல்
அவள் வருவாளா?
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே.)
CANNIBAL



**லிபேட்டி**

விஜய், ஸ்நேகா நடித்த
வசீகரா... (கலர்)
காட்சி நேரம் :
11.00, 3.00, 7.00 (புதிய நேரம்)



**லஷ்சுமி சினிமா**
இணுவில்
மாதவன் - ஸ்நேகா
வையாபுரி, மணிவண்ணன், சார்லி மற்றும் பலர் நடிப்பில்
என்னவளே
தினசரி: 11.00, 3.00, 7.00 (பு.நே.)
(17785)


## கண்ணீர் அஞ்சலி

எம்முடன் நீண்ட காலமாக இணைந்திருந்து
மருத்துவ சேவை செய்துகொண்டிருந்த
அமரர் வைத்திய கலாநிதி
**செல்வி பரமேஸ்வரி சின்னப்பா**
அவர்கள் காலமானதையிட்டு ஆழ்ந்த கவலையடைந்துள்ள நாம், அன்னாரிற்கு எமது கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குவதுடன், அவரின் ஆத்மசாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

வைத்தியர்கள்,
யாழ்.போதனா வைத்தியசாலை.
(17878)

## கண்ணீர் அஞ்சலி

10.05.2003 அன்று இறைபதமடைந்த எமது விரிவுரையாளர்
அமரர் வைத்திய கலாநிதி
**செல்வி பரமேஸ்வரி சின்னப்பா**
**(யாழ்.போதனா வைத்தியசாலை)**
அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருடன் நாமும் துயர் பகிர்வதுடன்,அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

20 ஆம் அணி, மருத்துவபீடம்,
யாழ்.பல்கலைக்கழகம்.
(17877)

## கண்ணீர் அஞ்சலி



அமரர் டாக்டர்
**செல்வி பரமேஸ்வரி சின்னப்பா**
அவர்களுக்கு எமது
கண்ணீர் அஞ்சலிகள்.

பூவாய் மலர்ந்த முகம்
புன்னகையைச் சுமந்த முகம்
நோயால் நலிந்தவரின்
நோவகற்றிச் சிரித்த முகம்
செக்கச் சிவந்த முகம்
சினம் அறியாத் தெய்வ முகம்
கண்மூடி இன்று
கறுத்துக் கிடக்கின்றதே....
ஊரவர்கள் உறவினர்கள்
உற்றவர்கள் அயலவர்கள்
சுற்றத்தார் யாவருமே
சுகம் பெற நீ உதவி நின்றாய்!
சீறிச் சினக்காமல்
சிரித்த முகத்தோடு
நீ வருதல் கண்டால்
நில்லாது பிணி எதுவும்
உன் வரவு கண்டால்
எந்த வருத்தமுமே
ஓடி ஒழிந்துவிடும்.
வெள்ளமாய் இருந்தாலென்ன?
வெய்யில் தான் எரித்தாலென்ன?
நள்ளிரவென்றால் என்ன?
நடுப்பகல் என்றால் என்ன?
எள்ளளவேனும் கோபம்
எதுமே தோன்றாவாறு
உள்ளமே உவகை கொள்ள
உயர்பணி புரிந்தாய் அம்மா!
உன்னை இழந்து - இந்த
ஊரே அழுகிறது.
யாரிடத்தில் போவோம்
யாரைத்துணைக்கொள்வோம்
என்று எண்ணி ஏங்கி
இதயம் வெடிக்கின்றது
டாக்டர் அம்மா என்று
உன்னை அழைத்த
உறவுகளைத் தவிக்கவிட்டு
நீண்ட வழி நடந்தாய்
நீங்காத் துயர் தந்தாய்
உள்ளம் மெழுகாய் உருக
அஞ்சலிகள் தந்து அழுகின்றோம்
ஆறுதலை நீயே
தரவேண்டும் டாக்டர் அம்மா....!

- திருநெல்வேலி மக்கள்.
(17875)

# மரண அறிவித்தல்கள்

## சபாரத்தினம் சிவஞானசுந்தரலிங்கம்
**(சுந்தரலிங்கம்)**

காரைநகர், மடத்துக்கரையைப் பிறப்பிடமாகவும் மூளாயை வதிவிடமாகவும்கொண்ட ஆறுமுகம் சபாரத்தினம் சிவஞானசுந்தரலிங்கம் (முன்னாள் உதயன் ஊழியர்) அவர்கள் நேற்று (11.05.2003) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாரத்தினம் - வள்ளியம்மை தம்பதிகளின் கனிஷ்ட புத்திரனும் காலஞ்சென்ற தவஞானகுமாரலிங்கம் - நாகேஸ்வரி தம்பதிகளின் மருமகனும் ஆறுமுகம் கனகசபையின் பெறாமகனும் வளர்மதியின் அன்புக் கணவரும், சுஜானா, விதுசன் ஆகியோரின் அன்புத் தந்தையும் முத்தையாபிள்ளை, திருமதி இராஜரட்ணம் செல்வராணி, தர்மகுலசிங்கம் ஆகியோரின் சகோதரரும் தவமலர் கனகேஸ்வரி, காலஞ்சென்ற இராஜரட்ணம்மற்றும் திலமதி (ஆசிரியை), செல்வமதி (ப.நோ.கூ.சங்கம்), காலஞ்சென்ற கணநாதன் ஆகியோரின் மைத்துனரும் மனோகர் (ஆசிரியர்), கணேஸ்வரன் (V.S.P) ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.05.2003) பி.ப.4. மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல தகனக் கிரியைக்காக மூளாய் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சைவப்பிரகாச வித்தியாலயத்திற்கு அருகில்
மூளாய் மத்தி,
மூளாய்.
(C\27885)

தகவல்:-
மனைவி,
தர்மகுலசிங்கம்(தேவி அச்சகம்)

## தம்பிராசா பத்மநாதன்

ஆனைக்கோட்டையைச் சேர்ந்த தம்பிராசா பத்மநாதன் நேற்று (11.05.2003) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் மகேஸ்வரியின் அன்புக் கணவரும் பத்மலோஜன், நிமாலினி, காலஞ்சென்ற தர்சினி, மற்றும் பிறேமினி, தர்மினி, நிரோஜினி ஆகியோரின் பாசமிகு தந்தையுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (12.05.2003) காலை 10.00 மணியளவில்அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் காக்கைதீவு மயானத்தில் தகனஞ்செய்யப்படும் என்பதை சகலருக்கும் அறியத் தருகிறோம்.

ஆனைக்கோட்டை. (17883)

தகவல்:-
பத்மலோஜன் (மகன்)

## நாகலிங்கம் கந்தையா (கிட்டினர்)
**(முன்னாள் ஆசிரியர், யா\கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி)**

இடைக்காட்டைப் பிறப்பிடமாகவும், 104/2, அத்தியடி, குறுக்குவீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் கந்தையா அவர்கள் 09.05.2003 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் மங்கையர்க்கரசி அவர்களின் அன்புக் கணவரும் உத்தர கோசமங்கை, கிருஸ்ணபவான் (Germany), ஸ்ரீபவான் (Canada), லிங்கபவான் (U.k) ஆகியோரின் அன்புத் தந்தையும், இராசரத்தினம் (ஆதார வைத்தியசாலை, மந்திகை), பிரியதர்சினி, சிந்திரா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஜனார்த்தனன், சுகிதனன், அனுரதன், ஜெயசிவாஜா, துஷாகி, தனுஷா, விடேஷ், வித்தியா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை செவ்வாய்க்கிழமை காலை 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் 12 மணியளவில் தகனக்கிரியைக்காக கோமபயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

104/2அத்தியடி பிள்ளையார்
கோவில் குறுக்கு வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:-
த.இராசரத்தினம் (மருமகன்)

## திருமதி அமல உற்பவம் (தவம்)

உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் யாழ்.கோவில் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அமல உற்பவம் அருளானந்தம் ஞாயிற்றுக்கிழமை (11.05.2003) அன்று மரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அமிர்தநாதர் - எலிசபெத் தம்பதிகளின் அன்புமகளும் காலஞ்சென்றவர்களான முத்தையா - இராசம்மா தம்பதிகளின் மருமகளும் அருளானந்தத்தின் அன்பு மனைவியும் மரிய ஷேளி (யாழ்.பல்கலை. 3ஆம் வருடம்), ஜெவ்வி ஜிம் (H.N.D.A. இறுதியாண்டு A.T.I), ஒலிவியா சாந்தி (யாழ்.பல்கலை. 2ஆம் வருடம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

17(33), கோவில் வீதி,
யாழ்ப்பாணம். (17882)

தகவல்:-
அ.ஜெவ்வி ஜிம் (மகன்)

# பேச்சுக்களை மீள ஆரம்பிக்க சர்வதேச முயற்சிகள் தீவிரம்

## கிறிஸ்ரினா றொக்கா, ஹெல்கிசன் கொழும்பு வருகை

கொழும்பு,மே12

அமெரிக்க உதவி வெளிவிவகார அமைச்சர் கிறிஸ்ரினா றொக்கா நேற்று ஞாயிற்றுக் கிழமை கொழும்பு வந்து சேர விருந்தார். அவர் கண்டிக்குச் சென்று பௌத்த மதத் தலைவர்களை சந்தித்துவிட்டு திருகோண மலைக்கும் செல்லவிருக்கிறார்.

இதேவேளை - நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜோன் பீற்றர்ஸன் நாளைமறுதினம் கொழும்பு வந்து சேரவுள்ளார். அரசுத்தரப்புடனும், விடுதலைப் புலிகளுடனும் நடத்தப்படும் இரண்டு நாள் பேச்சுக்களில் ஜோன் பீற்றர்ஸனுடன் நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விடர் ஹெல்கிஸனும் கலந்து கொள்வார் எனத் தெரிவிக்கப்படுகிறது. புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் சுகவீனம் காரணமாக அவசரமாக லண்டன் திரும்பியுள்ள போதிலும திட்டமிட்டபடி இச்சந்திப்புக்கள் இடம்பெறுமென கொழும்பு அரச செய்தி ஊடகங்கள் தெரிவித்தன. (ஐ-9)

### இலங்கை சமாதான....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த அறிக்கையைத் தயாரிக்க, தான் பணம் எதுவும் பெற வில்லை எனவும் கூறியிருக்கும் சதீஷ் நம்பியார், இலங்கை அரசுக்கு அவசியமானால் உயர் பாதுகாப்பு வலயங்களை அகற்றுவது குறித்து வேறு எவரிடமும் ஆலோசனை பெற சந்தர்ப்பம் உண்டு எனவும் குறிப்பிட்டிருக்கிறார். (ஐ-9)

SUBRA - சித்தன்கேணி

ENGLISH

Spoken With Grammer

by

BRITTO

ஆரம்பம்
14.05.2003
புதன் காலை 7.00

(சி.27792)

பேச்சு சிங்களம்

திரு.சீலா திருஞ்ஞான
14.05.2003
காலை 8.00

### அரசியல் ரீதியாக........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டின் அபிவிருத்திக்காக வருடாந்தம் ஆயிரம் கோடி ரூபாய்களை வழங்க உதவி வழங்கும் நாடுகள் உறுதி அளித்துள்ளன.

அடுத்த மாதம் ஜப்பானில் நடைபெற இருக்கும் உதவி வழங்கும் நாடுகள் மாநாட்டில் இந்த உதவி பற்றி உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட இருந்தது.

அரசு - புலிகள் சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பதற்கு சர்வதேச மட்டத் தில் முயற்சிகள் நடைபெற்று வருகின்றன.

இப்படியான சந்தர்ப்பத்தில் அரசுக்கு நெருக்கடி கொடுப்பதே ஜனாதிபதியின் நோக்கம்.

2001 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் மக்களின் ஆணை பெற்று ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட எங்களைத் தோல்விகண்ட கட்சியின் தலைவி ஆட்டிப்படைக்கப் பார்க்கிறார். விடமாட்டோம்.

தேசிய லொத்தர் சபையின் வருமானம் ஜனாதிபதியின் நிதியில் சேர்க்கப்படுவதால் அந்த சபை ஜனாதிபதியின் பொறுப்பில் இருக்க வேண்டியது என்கிறார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க. முன்னாள் ஜனாதிபதிகள் எவரும் அந்தப் பொறுப்பை தாம் வைத்திருந்ததில்லை.

பொ.ஐ.முன்னணி ஆட்சியில் கூட தேசிய லொத்தர் சபை, நிதியமைச்சின் கீழேதான் இருந்தது. அப்போது தமது தேர்தல் செலவுகளுக்காக தேசிய லொத்தர் சபை பணத் திலிருந்து 4கோடி ரூபாவை கையாடிவிட்டார்கள். அந்த விடயம் பொலீஸ் விசாரணையில் இருக்கிறது.

ஜனாதிபதியின் பொறுப்பில் தேசிய லொத்தர் சபை இருந்து பணக் கையாடல் நடந்தால் வழக்குத் தொடரக்கூடவழியில்லை.

தேசிய லொத்தர் சபையில் இருந்து முந்திய அரசின் காலத்தில் கிடைத்ததைவிடக் கூடுதலான பணம் இப்போது எங்கள் ஆட்சியில்தான் கிடைக்கிறது.

இந்தவிடயத்தில் விடமாட்டோம். சட்டமா அதிபரின் ஆலோசனையை ஜனாதிபதி கேட்டிருக்கிறார். எங்களுக்கு அவர் நல்ல பதில் தந்தால் சரி. இல்லாவிட்டால் போராட்டம் தான். மறுதேர்தலைச் சந்திக்கவும் நாம்தயார்.

இப்படி அமைச்சர்கள் சூளுரைத்தனர். (ஐ-9)

### அன்ரன் பாலசிங்கம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவசரமாக முக்கிய வைத்திய பரிசோதனை செய்ய வேண்டி ஏற்பட்டதாலேயே பாலா லண்டனில் தான் சிகிச்சை பெற்றுவந்த வைத்தியசாலைக்குச் செல்வதற்காக கிளம்பினார் என்று புலிகள் வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

### வர்த்தமானி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வட்டாரங்கள் தெரிவித்தன. ஒரு அமைச்சரின் பொறுப்பிலுள்ள ஒரு விடயத்தை மாற்றும் முயற்சி பிரதமருடன் கலந்தாலோசிக்காமல் மேற் கொள்ளப் பட்டிருப்பதால் அரசியலமைப் புச் சட்டத்தின் 44 ஆவது சரத்தை அது மீறுவதாகும் எனவும் முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

அமைச்சரவைக்கூட்டத்துக்கு முன்னர் ஜனாதிபதிக்கு அனுப்பிய ஒரு கடிதத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இவ்விடயத்தை சுட்டிக் காட்டியிருக்கிறார்.

அரசியலமைப்புச்சட்ட விதி மீறப் பட்டிருப்பதால் அபிவிருத்தி லொத்தா சபை பொறுப்பேற்கப்படுவதை அறிவிக்கும் வர்த்தமானி அறிவித்தலை வெளியிடுவதை நிறுத்திவைக்குமாறும் அக் கடிதத்தில் பிரதமர் ஜனாதிபதியிடம் கோரியிருக்கிறார்.

ஜனாதிபதியின் ஊடகப்பணிப் பாளர்நாயகமான ஜனதாஸ பீரிஸ், இதற்குமாறான ஒரு கருத்தையே தெரிவித்திருக்கிறார். நிறைவேற்று அதிகாரக் கட்டளையில் ஜனாதிபதி கையெழுத்திட்டிருப்பதால் வர்த்தமானி அறிவித்தல் இல்லாவிடினும் அந்தக் கட்டளை செல்லுபடியாகும் என்று அவர் கூறுகிறார்.

இதற்கிடையே, சிரேஷ்ட அரசியல் சட்டத்தரணியான டெஸ்மண்ட் பெர்னாண்டோ இது தொடர்பாகக கருத்துக் கூறுகையில், எந்த ஒரு கட்டளையும் நடைமுறைக்குவர வர்த்தமானி அறிவித்தல் ஒன்று தேவையாகும். இந்த அடிப்படையில் ஜனாதிபதியின் கையேறபுக் கட்டளை செயலுக்கு வரவில்லை எனக் கூறுகிறார்.

இந்த நிலையில், ஜனாதிபதியுடன் ஒரு அரசியல் சட்ட மோதல் ஏற்பட்டால் பொதுத் தேர்தல் ஒன்றுக்கு முகம் கொடுப்பதென இந்த அவசர அமைச்சர்கள் கூட்டத்தில் தீர்மானிக் கப்பட்டது எனவும் அதிகார பூர்வ அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்திருககின்றன. (ஐ)

### அமரர் குமாரின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஈழ விடுதலைப் போராட்டத்தின் ஆரம்பகாலத்தில் தீவிர பங்கு எடுக்காதவராக இருந்தும் கூட போராட்டத்தின் வளர்ச்சிப்பாதையையும் அதனை வழிநடத்துகின்ற தலைமையின் மதிநுட்பத்தினையும் நன்கு அவதானித்து ஓர் அரசியல் மாணவன் என்ற வகையில் முக்கியமான கால கட்டத்தில் விடுதலைப் போராட்டத்துக்கு தனது பங்களிப்பை வழங்கினார். தமிழீழ விடுதலைப் புலிகள், தமிழ் மக்களின் விடுதலையின்பால் கொண்ட விசுவாசம், வழங்கிய ஈகம், காட்டிய அர்ப்பணிப்பு என்பவற்றால் இவர் வெகுவாக ஈர்க்கப்பட்டதாக அடிக்கடி கூறுவார்.

தமிழீழ தேசியத் தலைவர் வே.பிரபாகரன் மீது முழு நம்பிக்கை வைத்து தமிழ் மக்களின் அரசியல் விடுதலை அவர் காலத்திலேயே கிட்டும் என்று தீர்க்கதரிசனமாகக் கூறியவர்களில் அமரர் முதலிடம் வகிக்கிறார்.

இலங்கையில், தமிழ் மக்களின் அரசியல் தலைமைத்துவத்தை தமிழீழ தேசியத் தலைவர் போல வேறு எவரும் வகிக்கவில்லை என்பது அன்னாரின் கருத்தாக இருந்தது.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு விசாரணைகள் எதுவுமின்றி சிறைகளில் வாடிய தமிழ் இளைஞர், யுவதிகளுக்காக நீதிமன்றுகளில் தோன்றி வெற்றிகரமாக வாதாடினார். சர்வதேச மன்றுகளில் - அதுவும் குறிப்பாக ஐ.நா.மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்தோன்றி - இலங்கைத் தமிழ் மக்கள் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் மூலம் அடிப்படை மனித உரிமை மீறல்களுக்கு உள்ளாகி துன்புறுவதை சான்றுகளுடன் நிருபித்தார். இவற்றுக்கெல்லாம் அமரர் பெற்றுக்கொண்டது, எதிரிகளின் துப்பாக்கிக் குண்டு வழங்கிய சாவையே ஆகும். இவரது சேவையினை தமிழினம் என்றென்றும் நினைவு கூரும்.

- இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-9)

A/L எடுத்தவர்களுக்குரிய
புதிய பிரிவுகள்
ஆரம்பம்
16.05.2003

OXFORD
ENGLISH ACADEMY

SPECIAL ENGLISH
நவீன கருவிகளின் உதவியுடன
SPOKEN ENGLISH

பருத்தித்துறையில்
( பி.ப 3.00 மணி)
P.K. Lane,
பஸ் நிலையம் அருகில்

நெல்லியடியில்
(காலை 9.00 மணி)
MATHS CENTRE இல

அனுமதியைப்
பெற்றுக் கொள்ளவும்
By
B.Krishnajothy
B.Com. (Hons), Dip. in.Ed.

(17823)

மீண்டும் யாழில்
UR 60 (Green)
மொத்தமாகவும்
சில்லறையாகவும்
குறைந்தவிலையில்
பெற்றுக்கொள்ள
இல.-75, Rajh Brothers
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

இந்திய உயர் கல்வி
Barath Institute of Sci. Tech.
Jerusalem College of Engineering.
Tagore Engineering College.
Sri Lakshmi ammal Engineering College.
Sri Balaji Dental College & Hospital.
ஆகிய பிரபல கல்வி
நிறுவனங்களில்
B.E, B.Tech, M.C.A,
M.B.A, B.D.S, B.P.T
பட்டப்படிப்புக்களை மேற்கொள்வதற்கான ஆலோசனைகளையும் அனுமதிபெறுவதற்கான ஒழுங்குகள் குறித்தும் அறிந்து கொள்ள தொடர்புகொள்ளுங்கள்.
Mr.E.J.திலீப்
T.P: 01-454483
( மாலை 6 மணிக்குப் பின்)
Mr.ஜெராட் பாலேந்திரா
T.P: 01-336559
( காலை 9- மாலை 6)
WELCOME TRAVELS
F-15, First Floor,
Peoples Park, Colombo - 11.
(சி.27868) Fax - 01-507456

கணக்கீடு
திரு.பாலவாசன்
B.B.A. [ FM.SP ]
A/L 2005
தனிவியாபார
முடிவுக்கணக்கு
Mon. To Fri. - 8.30.9.30
ஆரம்பம்:
12.05.2003 - 8.30a.m
விக்னா
கல்வி நிலையம்

BEACON
A/L தமிழ்
2004, 2005
விசேட வழிகாட்டல் வகுப்பு
Note:- இலங்கையின் அதி
முன்னணி ஆசிரியர்கள்.
புதன், வியா - 4-5
அனுமதி மட்டுப்படுத்தப்பட்டது
(17847)

இந்திய் பரம்பரை ஜோதிடர்

அருள்வாக்கு அம்பிகா அம்மா

மீண்டும் யாழ். புண்ணிய பூமிக்கு வருகை.
கைரேகை. ஜாதகம் பார்க்கப்படும்.
உங்களுக்கு எந்தப் பிரச்சினைகள் ஆனாலும் கவலை வேண்டாம்.
உடனே அம்மாவைச் சந்தியுங்கள்; நன்மை அடையுங்கள்.
அம்மாவைச் சந்திக்கும் இடம்:-
அருள்வாக்கு அம்பிகா அம்மா
மடோனா லொட்ஜ்,
121, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
ஸ்ரீமுருகன் ஜுவல்லர்ஸ் / நியூ லிங்கம் கூல்பார் அருகில்
(17452)

## மரண அறிவித்தல்

### திருமதி வேலுப்பிள்ளை சிதம்பரம்

காரைநகர், இடைப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை சிதம்பரம் நேற்று (11.05.2003) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் வேலுப்பிள்ளையின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான பரராசசிங்கம் ஏரம்பமூர்த்தி மற்றும் அல்லிராணி ஆகியோரின் அன்புத் தாயாரும் சிவசுப்பிரமணியத்தின் மாமியாரும் வீரசுதாகரன் (ஆட்டோ-சுதா), சுரேஸ்குமார், விஜயரூபன், சஜித்திரன், சுஜாதா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(12-05-2003) திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

குளப்பிட்டிச் சந்தி,
கொக்குவில்மேற்கு,கொக்குவில்.

தகவல்:
ஆ.சிவசுப்பிரமணியம்
(மருமகன்).(சின்னவி.மனேச்சர்)

(17884)

RAMCO CEMENT
ராம்கோ சிமெந்து

SLS - 107அங்கீகாரம் பெற்றது. ISO - 9002 தரம் பெற்றது. B.SS - 12-1991 தரத்திற்கு அமைவானது.

ஆசியாவில் முதலாம் தர (நம்பர் 1)தொழிற்சாலையாகத் தெரிவு செய்யப்பட்ட தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்படும் RAMCO சிமெந்து (கோபுரம் மார்க்) என்பதை மக்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தற்பொழுது ராம்கோ சிமெந்து பருத்தித்துறை இறங்கு துறையில் இன்று தொடக்கம் 12.05.2003 திறக்கப்பட உள்ளது.

குறிப்பு:-முன்கூட்டியே பதிவு செய்பவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் நேரடியாக விநியோகிக்கப்படும்.
மக்களின் பல இலட்சம் ரூபா பணத்தை மிச்சப்படுத்திய முதலாம் தர சிமெந்து ராம்கோ சிமெந்து.

ராம்கோ சிமெந்து ஏக இறக்குமதியாளர்கள்

ஈஸ்வரபகவான் & கொம்பனி
91, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். T.P :- 021-222 2350

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 12.05.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.